THE DEFENDER OF THE FAITH

அர்ச். மரி கருதம்மாள் அம்மானை



INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Chennai - 600 119.

THE DEFENDER OF THE FAITH

அர்ச். மரிகருதம்மாள் அம்மானை

General Editors

Dr. SHU HIKOSAKA, Dr. G. JOHN SAMUEL

Editors

Dr. K. JAYA KUMAR

R. JAYALAKSHMI

Rendered into English

by

Dr. R. RAJARATHINAM

INSTITUTE OF ASIAN STUDIES

Chemmancherry, Chennai - 600 119.

INDIA.

THE DEFENDER OF THE FAITH

Editorial Assistance
C. ARUNACHALAM
M. MARUTHAMUTHU

First Edition : 1996, lxiv + 310

Publication No. 58

Price Rs. 350 US $ 40

Published with the financial assistance from the Directorate of the Tamil Development of the Government of Tamil Nadu for the best translations from Tamil to other languages and from other languages to Tamil.

Copies can be had from

Publications Division,
Institute of Asian Studies,
Chemmancherry,
Chennai - 600 119.
India.
Phone (Office) 4961662 , 4960831
(Residence) 4960085
Fax 91-44-4960959
E-mail ias@xlweb.com
World Wide Web site http://xlweb.com/heritage/asian.htm

Printed by **Pavai Printers Pvt. Ltd.**, 142, J.J.K. Road, Chennai 600 014.
Ph. 8532441, 8532973.

Transliteration Table

VOWELS

Short		Long		Dipthong	
அ	a	ஆ	ā	ஐ	ai
இ	i	ஈ	ī	ஔ	au
உ	u	ஊ	ū		
எ	e	ஏ	ē	**Velar Fricative**	
ஒ	o	ஓ	ō	ஃ	ḵ

CONSONANTS

Stops		Nasals		Semi-Vowel		Trill	
க்	k	ங்	ṅ	ய்	y	ற்	ṟ
ச்	c	ஞ்	ñ	வ்	v	**Alveolar Flap**	
ட்	ṭ	ண்	ṇ			ர்	r
த்	t	ந்	n			ல்	l
ப்	p	ம்	m			**Retroflex Flap**	
		ன்	ṉ			ள்	ḷ
						Lateral Fricative	
						ழ்	ḻ

SANSKRIT PHONEMES

Voiced Palatal Stop

ஜ j

Alveolar Fricative

ஸ் s

Retroflex Fricative

ஷ் ṣ

Velar Fricative

ஹ் h

Affricate

க்ஷ் kṣ

CONTENTS

பதிப்புரை

அர்ச். மரிகருதம்மாள் அம்மானை என்னும் இந்நூல் ஆசியவியல் நிறுவனத்தின் வழியாக வெளியிடப்படும் ஒரு சுவடி ஆய்வுப் பதிப்பு நூலாகும். இந்நூல் இதற்கு முன்பாகவே சில பதிப்புகளைக் கண்ட போதிலும் பல்வேறு காரணங்களினால் மீண்டும் இந்நிறுவனத்தின் வழியாகப் பதிப்பிக்கப்படுகிறது.

பதிப்புச் சுவடியின் மூலம்

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தின் நூலகக் குறிப்பெண் டி.2050இல் பதிவு செய்யப்பட்டுள்ள தாள் சுவடியில் 43ஆம் பக்கம் முதல் 73ஆம் பக்கம் வரையிலும் அர்ச். மரிகருதம்மாள் அம்மானை எழுதப்பட்டுள்ளது. இச்சுவடி பற்றிய குறிப்புகள் நூலகவிளக்க அட்டவணையில் இடம் பெற்றுள்ளன.[1] இச்சுவடியின் அருமை கருதி இந்நூல் கி.பி. 1959இல் எம்.ஆர். சிவப்பிரகாச பிள்ளை என்பவரால் மீட்டெழுதப்பட்டது.[2]

பதிப்புச் சுவடியின் அமைப்பு

தாள் சுவடியான இச்சுவடியில் 61 பக்கங்கள் காணப்படுகின்றன. பக்கம் ஒன்றிற்குச் சராசரியாக 35 வரிகள் எழுதப்பட்டுள்ளன. இடையிடையே வேறு பா வகைகள் விரவி வர, பெரும்பான்மையும் கண்ணிகளால் அமைந்துள்ள இத்தாள்சுவடியில் ஓர் அடியின் ஈற்றெழுத்து மட்டும் தனித்து நிற்க எஞ்சியவை இணைந்து வரும் அமைப்பு காணப்படுகிறது. இவ்வமைப்பிலேயே நூல் முழுவதிலும் உள்ள பாடல்கள் தாள்சுவடியில் பிரதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. உதாரணமாக,

"சீராரும்ஞானத்திறையோனைனெஞ்சில்வைத்   து"

என்று பிரதி செய்யப்பட்டுள்ளது.

சுவடியைப் பிரதி செய்தவரின் பெயர்த்தெழுதும் பயிற்சி

தொம்மையப் பிள்ளை என்பாருக்குச் சொந்தமான தாள் சுவடியிலிருந்து அர்ச். மரிகருதம்மாள் அம்மானை என்னும் நூல் சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகத்தாரால் பிரதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொம்மையப் பிள்ளை என்பார் வழங்கிய சுவடியில் இந்நூல் தவிரவும் **அர்ச். கித்தேரியம்மாள் அம்மானை** என்னும் நூலும், **தெய்வ சகாய சிகாமணிமாலை** என்னும் நூலும் காணப்படுகின்றன என்பதை **A Descriptive Catalogue**

---

1 P.P. Subrahmanya Sastri (Ed.), *A Descriptive Catalogue of the Tamil Manuscripts - Vol. V*, pp. 1774-1777.

2. பூ. சுப்பிரமணியம் (பதி.), அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விவர அட்டவணை - தொகுதி -25, ப. 56.

of the Tamil Manuscripts Vol.V என்ற நூலின் பக்கங்கள் 1770, 1774 மற்றும் 1789 ஆகியன தெளிவுப்படுத்துகின்றன. மேற்படி தொம்மையப் பிள்ளையின் சுவடியில் இம்மூன்று நூல்களையும் பெயர்த்தெழுதியவர் யார் என்பதை அறிய முடியவில்லை.

இந்நூலைப் பெயர்த்தெழுதியவர் இந்த மூன்று நூல்கள் மட்டுமன்றிப் பிற எந்தெந்த நூல்களைப் பிரதி செய்தவர் என்பதையும் அறிய முடியவில்லை. ஓர் அடியின் பின் அடுத்த அடி என்கிற அமைப்பில் நூலை முழுவதும் பிரித்தெழுதிய இவர் அர்ச். மரிகருதம்மாள் அம்மானையில் இடம்பெறும் பாக்களின் வகைகளுக்கு ஏற்ப சந்தி பிரித்தும், சீர் பிரித்தும் அடிகளை அழகுற அமைத்துத் தரவில்லை. மேலும் ஒரு பா வகை முடிந்து பிறிதொரு பா வகை ஆரம்பிக்கும் இடத்தில் அதன் பெயரினைச் சொல்லுவது பெரும்பான்மையும் சுவடிப் பெயர்ப்பாளர்கள் செய்யும் பணியாகவே காணப்படுகிறது. அம்முறையையும் இவர் கையாளாது விட்டுள்ளார். ஆகவே இந்நூலைப் பெயர்த்தெழுதியவருக்குச் சுவடிப் பெயர்ப்பில் நெடுங்காலப் பட்டறிவு இருந்தது எனக் கூறுவதற்கு அதிக இடமில்லை.

ஏட்டின் காலம்

"என்பரனார் தன்னருளால் எல்லாம் பெற்று வாழ்ந்திருப்பார் மேரிகருதாள் அம்மானை முற்றும். 1827-ம் ஆண்டு அக்டோபர் மாதம் எழுதினது"[3] என்கிற குறிப்பு நூலின் இறுதியில் காணப்படுகிறது இத்தாள் சுவடிக்கு முந்தையதாக விளங்கும் அர்ச். கித்தேரியம்மாள் அம்மானை நூலின் இறுதியில் மேற்படி காலக் குறிப்போடு ஏட்டின் உரிமையாளர் தொம்மைய பிள்ளை என்பார் ஆவார் என்பதை அறிய முடிகிறது இச்சுவடியில் எழுதப்பட்ட அர்ச். மரிகருதாள் அம்மானை எந்த மூலச்சுவடியிலிருந்து எழுதப்பட்டது என்பதும், இதன் முந்தைய வழி ஏடுகள் எவை என்பதையும் அறிய தாள் சுவடியில் எந்தவிதமான குறிப்புகளும் காணப்படவில்லை

சுவடியில் காணப்பட்ட நூலின் தலைப்பும் செய்த மாற்றமும்

சுவடியில் **அற மரிகருதம்மாள் அம்மானை** என இந்நூலின் பெயர் காணப்படுகிறது. இது பதிப்பாசிரியரால் **அர்ச். மரிகருதம்மாள் அம்மானை** என மாற்றம் செய்யப்படுகிறது. கிறித்துவ மதத்தில் உயர்ந்த ஒழுக்கங்களையும் நெறிமுறைகளையும் கடைபிடித்து வாழ்ந்ததுடன் தியாகங்கள் பல புரிந்தோர்க்கு 'அர்ச்சியசிஷ்ட' என்ற பட்டம் வழங்குதல் ஒரு மரபாகக் காணப்படுகிறது. அற வாழ்வு வாழ்ந்து உயிர்த்தியாகம் செய்தவள் என்கிற பொருளில் சுவடியில் 'அற' என்கிற அடை மரிகருதம்மாளுக்குத தரப் பட்டிருக்கக் கூடும்; அல்லது 'அர்ச்சியசிஷ்ட' எனபதின் சுருக்கமாகிய 'அர்ச்' என்பது பிழைபட ஓலைச்சுவடியிலிருந்து தாள்சுவடியில் பிரதிசெய்யும் பொழுது 'அற' என பிரதி செய்யப்பட்டவரால் எழுதப்பட்டிருக்கவும் கூடும். ஆகவே, இவண புனிதையர் என்கிற பொருள் தரும் 'அர்ச்சியசிஷ்ட' என்பதன் சுருக்கமாகிய 'அர்ச்' என்பதே 'அற' என்பதற்குப் பதிலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

1 P.P. Subrahmanya Sastri(Ed.), *Op. Cit.*, p. 1774.

பதிப்பில் செய்த பிற வகை மாற்றங்கள்

தாள் சுவடியில் ஒரோவிடங்களில் சில துணைத் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. அத்தலைப்புகள் முழு கதையினையும் புரிந்து கொள்ள போதுமானவையாக இல்லை. ஆதலின் செய்யுளின் பொருளமைதிக்கு ஏற்பப் பலவிடங்களில் துணைத் தலைப்புகள் கதையோட்டத்தைப் புரிந்து கொள்ளும் தன்மையில் தரப்பட்டுள்ளன. தவறுபட எழுத்துக்கள், சொற்கள் காணப்படும் இடங்களில் அவற்றைத் திருத்தி, திருத்திய சொல்லைச் செய்யுளில் தந்தும், சுவடியில் காணப்பட்ட சொல்லைச் 'சுவடிச்சொல்' என்ற தலைப்பின் கீழ் அந்தந்தப் பக்கங்களில் தந்தும் இந்நூல் பதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் கடின சொற்களுக்கு உரிய விளக்கங்கள் அந்தந்தப் பக்கங்களிலேயே தரப்பட்டுள்ளன.

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தின் தாள்சுவடியைப் பதிப்பு நூலாகக் கொண்டமைக்கான காரணங்கள்

ஏற்கனவே அர்ச். மரிகருதம்மாள் அம்மானை நூல் பதிப்பாசிரியருக்குத் தெரிந்த அளவு கீழ்க்கண்டவாறு எட்டு பதிப்புகளைக் கண்டுள்ளது.

(i) மழவை வை.தே.ம. சின்னசாமி செட்டியார் (பதி.),
இலட்சுமி விலாச அச்சுக்கூடம்,
சென்னை, 1876

(ii) இ. சவரிமுத்துப் பிள்ளை (பதி.),
சாரதா பிறஸ்,
புதுவை, 1914.

(iii) --------------------------,
ஞானப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம், 1918.

(iv) அருள் அண்டு கம்பெனியார்,
சென்னை, 1927.

(v) செல்வம் அண்டு கம்பெனியார்,
சென்னை, 1927.

(vi) தம்புராஜ் (பதி.),
டி நொபிலி பிரஸ்,
மதுரை, 1955.

(vii) ---------------------

செயின்ட் லூயிஸ் புக் டிப்போ,

விழுப்புரம், 1956 (6 ஆம் பதிப்பு).

(முதற்பதிப்பின் ஆண்டு தெரியவில்லை)

(viii) ஆ.பி. அந்தோணி இராசு,

ஆரோக்கியம் பதிப்பகம்,

திருச்சி, 1993.

இவ்விதம் அறியப்பெறும் எட்டுப் பதிப்புகளில், பதிப்புக்கு எடுத்துக் கொண்ட தாள்சுவடியை ஒப்பிட்டு ஆய்வதற்காக 1876ஆம் ஆண்டைய பதிப்பு, 1956ஆம் ஆண்டைய பதிப்பு, 1993ஆம் ஆண்டைய பதிப்பு ஆகியன கொள்ளப்படுகின்றன. பொதுவாக இப்பதிப்புகளில் பதிப்பாளரின் போதுமான அளவு ஆய்வுரை காணப்படாமை, பாடவேறுபாடுகள் பற்றிய செய்திகள் இன்மை, குறிப்புரையின்மை ஆகியன குறைபாடுகளாக இனங் காணப்பட்டன. மேலும் ஒவ்வொரு பதிப்பிலும் ஏராளமான மிகைப் பாடல்கள் காணப்படுவதும் படித்தறியப்பட்டது. ஆகவே மேற்காணப்படும் நூல்களில் தாள்சுவடியே காலத்தால் மிகப் பழமையாகக் (கி.பி. 1827) காணப்படுவதால் அதனையே மூலச்சுவடியாகக் கொண்டு ஆய்தலே சிறப்பு என்கிற நோக்கில் அச்சுவடி பதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலும், மேற்படி பதிப்புகளில் காணப்படாத ஆய்வுரை, குறிப்புரை மற்றும் நூல் குறித்த பிற தரவுகள் ஆகியன இப்பதிப்பில் சேர்க்கப்பெற்றன ஆசியவியல் நிறுவனத்தின் சுவடிப்பதிப்பு முறைப்படி தமிழுக்கு இணையான ஆங்கில மொழிபெயர்ப்பும் இந்நூலுக்குச் செய்யப்படுகிறது. இந்நூலின் செய்யுள் பகுதியின் வரிவடிவத்தை ஆங்கில ஒலிபெயர்ப்பு வரிவடிவத்தில் (transliteration) பெயர்த்து எழுதி அதுவும் இப்பதிப்பின் இறுதியில் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இச்சுவடியே மூலச்சுவடியோடு தொடர்புடையது என்பதைப் பிற பதிப்புகளிலுள்ள செய்யுள்களோடு ஒப்பு நோக்கும் பொழுது உணர முடிகிறது. பொதுவாக, நாட்டுப்புறக் கதைப்பாடல்கள், அம்மானை வடிவில் எழுதப்பட்ட கதைப்பாடல்கள் ஆகியன தம்மில் 'அந்தாதி' அமைப்பினைக் கொண்டிருத்தல் பெருவழக்காகத் தமிழிலக்கியத்தில் காணப்படுகின்றன. இந்த அமைப்பைத் தாள்சுவடிச் செய்யுட்களே பெருமளவு பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

"மங்கையரைக் கொண்டுவரவே **பேயை விடுவான்**
பேயை விடுவான் பெருஞ்சடை சூலத்துடனே"

"---------------------------- **முத்தி பெற்றாள்**
முத்திபெற்றவாறு ---------------------------"

"தாரு மனத்துடன் சற்றமர்ந்து **கேட்டருளும்**
கேட்டருளும் வன்னரகில் ------------------"

என்னும் இவ்வரிகளில் அந்தாதி அமைப்பு சிறப்புடன் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம். ஆனால் அச்சு நூல்களில் எதுகை நயத்திற்காக வலிந்து பல புதிய சொற்கள் ஆளப்பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் பல புதிய பாடல்களை, வசனங்களை, நூல் அமைப்பு முறைகளை 1876, 1956, 1993 பதிப்புகளில் காணமுடிகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் பதிப்பு நெறிமுறைகளின் படி 1827 ஆம ஆண்டைய தாள்சுவடியினைப் பதிப்புக்குக் கொள்ளுதல் இவ்வம்மானை கதைப்பாடலில் மேலும் பல சிறப்புகளைத் தரும் என கருத்தில் கொண்டு நிறுவனத்தால் பதிப்பிக்கப்படுகிறது. அவ்வகையில், மத்தளவியல், வர்மசூத்திரம், உத்தண்டன் கோவை போன்ற இசை, வர்ம மருத்துவம், சிற்றிலக்கியம் ஆகிய அரிய சுவடிப் பதிப்புகளை ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டுள்ள இந்நிறுவனம் கீழ்க்காணும் அமைப்பில் கதைப்பாடல்களை மிகுதியாக வெளியிட்டுள்ளது.

1. வாய்மொழியாக வழக்காற்றில் உள்ள கதைப்பாடல்கள்
   - a) அண்ணன்மார் கதை
   - b) சந்தனத்தேவன் கதை
   - c) பூலித்தேவன் சிந்து

2. வில்லிசையில் நிகழ்த்தப்பெறுகின்ற, ஓலைச்சுவடியிலிருந்து பெறப்பட்ட கதைப் பாடல்கள்
   - a) உச்சினிமாகாளி கதை
   - b) குறுக்குளாஞ்சி கதை
   - c) சின்னத்தம்பி கதை
   - d) பலவேசஞ் சேர்வைக்காரன் கதை
   - e) பெண்ணரசியர் கதை
   - f) பெருமாள்சுவாமி கதை
   - g) வெங்கலராஜன் கதை
   - h) இராமர் கதை

3 யட்சகான நாடக வடிவில் காணப்படும் கதைப்பாட்டு சுவடிகள்
   - a) நீலி-யட்சகானம்
   - b) சாரங்கதாரன் யட்சகானம்
   - c) தேரூர்ந்தசோழன் யட்சகானம்

4. நாடக வடிவிலான கதைப்பாட்டு சுவடி
   - a) சாகுந்தலை நாடகம்

5. சமண சமயக் கோட்பாட்டினைக் கூறும் கதைப்பாடல்
   - a) வராங்கன் கதை

6. அம்மானை வகைக் கதைப்பாடல்

    a) ஆமையர் அம்மானை

ஆகிய கதைப்பாடல்கள் இந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டவையாகும். கதைப்பாடல்களைத் தொடர்ந்து வெளியிடுவதில் அதிகம் ஆர்வம் காட்டும் நிலையில் ஆமையர் அம்மானை என்னும் கதைப்பாடல் அம்மானையைத் தொடர்ந்து இந்நூல் வெளியிடப்படுகிறது.

* * *

நன்றியுரை

இந்நூலைப் பதிப்பிக்கும் பணியில் எங்களை ஈடுபடுத்திய இயக்குநர்கள் **டாக்டர் ஷு ஹிகோசகா, டாக்டர் ஜி. ஜான் சாமுவேல்** ஆகியோர். **டாக்டர் ஜி. ஜான் சாமுவேல்** அவர்கள் இந்நூல் செப்பமாக அமையவேண்டும் என்பதற்காக ஆய்வுரைக்கு வேண்டிய பல நூல்களையும் பல அறிஞர்களையும் அறிமுகப்படுத்தியதோடு, பல கருத்துக்களும் வழங்கித் திருத்தியும் உதவினார்கள். இவர்களுக்கு எங்கள் முதல் நன்றி

இந்நூலைப் பல நிலைகளிலும் செப்பம் செய்து உதவியவர் நிறுவனச் சுவடித்துறைத் தலைவர் **டாக்டர் பூ. சுப்பிரமணியம்** அவர்கள். தாள்சுவடியைப் படியெடுக்க அனுமதி வழங்கியவர் சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகக் காப்பாளர் **டாக்டர் எஸ். சௌந்தரபாண்டியன்** அவர்கள். 1876ஆம் ஆண்டில் வெளியான, கிடைத்தற்கரிய அச்சுநூலைப் படி எடுக்க உதவியவர்கள் சென்னை ஆவணக் காப்பக நூலகர் மற்றும் பலர். 1956ஆம் ஆண்டைய பதிப்பை வழங்கி உதவியவர் தமிழ் இலக்கியக் கழகத்தின் தலைவர் **அருள்தந்தை டாக்டர் ச. இராசமாணிக்கம்** அவர்கள். இந்நூல் சிறப்பாக அமைய சில செய்திகளைத் தந்து உதவியவர் **டாக்டர் ஆ. பி. அந்தோனி இராசு** அவர்கள். ஆங்கில அச்சுப்படியைத் திருத்தி உதவியவர்கள் **டாக்டர் ம. ச. நாகராசன், டாக்டர் வீ. கணேசன்** ஆகியோர்.

இந்நூலின் பாடவேறுபாடுகளைப் பார்க்கவும், எழுத்துப்பெயர்ப்பு செய்யவும் உதவியவர்கள் **திரு. மூ. பரிமணன், திரு. கி. பன்னீர்செல்வம்** ஆகியோர். கணினியில் சிறப்பாக அச்சுக்கோத்து உதவியவர்கள் **திருமதி நே. உமாராணி, செல்வி பா. நந்தினி** ஆகியோர். முகப்பு ஓவியத்தை அழகுற வரைந்தவர் **திரு. அ.செ. நடராசன்** அவர்கள். நன்முறையில் அச்சிட்டு உதவியவர்கள் **பாவை அச்சகத்தார்**, சென்னை. இவ்வனைவர்க்கும் எங்கள் நன்றி.

டாக்டர் கி. ஜெய குமார்

ஆர். ஜெயலட்சுமி

Editor's Note

Arch. Mari Karutammāḷ Ammāṉai, a publication of the Institute of Asian Studies, is based on an original palm-leaf manuscript. Though this work has had a few earlier editions the Institute has undertaken to publish this edition for various reasons.

The Manuscriptology of this work

The manuscript is preserved by and available at G.O.M.L., Chennai under the serial number D2050. The *ammāṉai* has been written in the manuscript in pp. 43 to 73. Details regarding this Manuscript are found in the Descriptive Catalogue of manuscripts in the library[1]. The name of M.R. Civaprakācam Piḷḷai is mentioned as having taken a copy of the manuscript in the year 1959. We also learn that the manuscript belonged to Tommaiyap Piḷḷai. That manuscript also contains two more works i.e. **Arch. Kittēriammāḷ Ammāṉai** and **Teyvacikāmaṇi Mālai**[2]. In the paper manuscript there are 61 pages with 35 lines on an average per each page. The manuscript consists of mostly *kaṇṇi* verses with other metrical forms interspersed. The copying pattern of isolating the last letter of each line and combining the rest of the line is followed throughout this manuscript. The following line is an example:

cīrārumñāṉatiṟaiyōṉaiṉeñcilvai..........t

The names of those who have taken copies of the originals of these three works are not mentioned in Tommaiyap Piḷḷai's manuscript.

It is also not known whether the copyist of these three works has copied any other work. Though he has copied the verses of **Arch. Mari Karutammāḷ Ammāṉai** line by line in successions he has not observed the poper divisions of *cīr* or *canti* in an elegant manner. Moreover he has also not followed the usual practice of mentioning the different verse forms employed in this *ammāṉai* by the poet. This deviation indicates that the copyist was not quite conversant with her job. He perhaps lacked experience in this regard.

---

1. P.P. Subramaniya Sāstri (Ed.), *A Descriptive Catalogue of Tamil Manuscripts*, (pp.1774-77).

2. *Ibid.*, (pp. 1770,74 & 89).

The period of composition of this work

The year and month of the composition of the work are mentioned at the end of the script as October 1827. The details regarding the actual period of compositions of the manuscript the name of the author and his native place are not available. The exact source of this manuscript copy and its numerical order in the sequence of copying are also not known.

The change in the title of the work

The title of the palm-leaf manuscript reads **Aṟa. Mari Karutammāḷ Ammāṉai** whereas in the copy the title is changed as **Arch. Mari Karutammāḷ Ammāṉai.** The prefix *Aṟa* is generally added to righly moral persons and religious martyrs. Perhaps the copyist has erroneously changed *Aṟa* as *Arch* or has intentionally used the prefix *Arch* which is an abbreviation of *Arcciyaciṣṭa* which means a holy saint.

The other changes made in the edition

In the paper manuscript a few subtitles or headings are given here and there. They do not however help us to understand the story in its entirety. The subtitles are relevant to the contents of the respective poetic passages and in keeping with the trend of the story. The wrongly used letters and words in the original are corrected while the original letters and words are given under the title *cuvaṭiccol* in the pages where corrections have been made. The meanings of difficult words, wherever they occur, are given in the respective pages. The reasons for choosing the manuscript of the G.O.M.L., Chennai, for this publication are supplied below.

To the best of the knowledge of the editor of this publication **Arch. Marikarutammāḷ Ammāṉai** has seen 8 editions as follows:

1. Maḻavai. Vai. Tē. Ma. Ciṉṉacāmi Ceṭṭiyār (ed.), Ilaṭcumi Vilāca Press, Chennai, (1876).
2. E. Cavarimuttup Piḷḷai (ed.), Cāratā Press, Putuvai (1914).
3. ...., Ñāṉappirakāca Yantira Sālai, Jaffna, (1918).
4. Aruḷ and Co., Chennai, (1927).
5. Celvam and Co., Chennai, (1927).
6. Tampurāj (ed.), De Nobili Press, Maturai, (1955).
7. ...., Saint Louis Book Depot, Viḻuppuram, (1956, 6th edition).
8. A.P. Antōṉi Irācu, Arōkkiyam Patippakam, Tiruchi, (1993).

Of these known eight editions, the editions of the years 1876, 1956 and 1993 have been taken for comparison with the paper manuscript and follow up research by the editor of this publication. Generally all these editions lack sufficient critical observations, details regarding textual emendations and specific explanatory notes. Moreover in all these editions we come across a large number of extra verses.

In view of the reasons mentioned above, the oldest paper manuscript of 1827 was chosen as the source work for the publication of this edition. In this edition a critique, a note on editing and other research data are added to the text. There is a line by line English translation of the text of this *ammāṉai*. A transliteration of the text is also found in the annexe of this edition.

The source manuscript, chosen for this edition, is presumed to be faithful to the original palm-leaf manuscript because of the *antāti* pattern of verses found in the former. It is the usual folklore tradition as well as *ammāṉai* poetic convention to compose verses in the *antāti* pattern. According in the 1827 paper manuscript we have verses such as:

maṅkaiyaraik koṇṭuvaravē ***pēyai viṭuvāṉ***
pēyai viṭuvāṉ *peruñcaṭai cūlattuṭaṉē.*

tāru maṉattuṭaṉ caṟṟamarntu ***kēṭṭaruḷum***
kēṭṭaruḷum vaṇṇarakil . . . .

The last letter or word of a line of verse forming the first letter or word of the succeeding line is called *antāti* as found in the above quoted lines. In the later editions of 1876, 1956 and 1993 we find additional verses or dialogues and additional words employed for the purpose of proper rhyming. In these editions we find the structural pattern differing from the 1827 manuscript. Hence in order to observe meticulously the editing norms the ancient manuscript was chosen as the source for this edition.

In this context, it must be mentioned that the Institute of Asian Studies has already brought out editions with English translations of manuscripts covering varied subjects and branches of knowledge, such as, *Mattaḷaviyal* (The Art of Drumming), *Varma cūttiram* (A Text on Martial Art) and *Uttaṇṭaṉ Kōvai* (Poetic petals in the Interior Landscape).

The Institute of Asian Studies has also published the following works.

I. Ballads handed down orally and in vogue

(a) *Aṇṇaṉmār katai* (Elder Brothers Story)

(b) *Cantaṉattēvaṉ katai* (The Bandit Brothers)

(c) *Pūlittēvaṉ cintu* (The First Freedom Fighter)

II. Ballads obtained from palm-leaf manuscripts and rendered in *Villuppāṭṭu* (musical concerts with a huge stringed bow used as an orchestral instrument to accompany choral singing)

a) *Uccinimākāḷi Katai* (The Wandering Voice)

b) *Kuṟukkulāñci Katai* (" ")

c) *Ciṉṉattampi Katai* (" ")

d) *Palavēcañ cērvaikkāraṉ Katai* (The Unsung Melodies)

e) *Peṇṇaraciyār Katai* (The Valorous Virgins)

f) *Perumāl Cuvāmi Katai* (The Divine Pilgrimage)

g) *Veṅkalarājaṉ Katai* (The Dateless Muse)

h) *Irāmar Katai* (The Epic Eternal)

III. Ballads in the form of *Yaṭcakāṉa Nāṭakam* (musical plays)

a) *Nīli Yaṭcakāṉam* (A Tale of Nemesis)

b) *Cāraṅkatāraṉ Yaṭcakāṉam* (A Tale of Betrayal)

c) *Tērūrnta Cōḻaṉ Yaṭcaāṉnam* (Where Justice Chimes)

IV. Ballad in the Form of a play

a) *Cakuntalai Nāṭakam* (A Tale of Romance)

V. Ballad expounding the tenets of Jainism

a) *Varāṅkaṉ Kaṭai* (Destiny and Divinity)

VI. *Ammāṉai* ballad

a) *Āmaiyar Ammāṉai* (The Vows Fulfilled)

This edition of **Arch. Marikarutammāḷ Ammāṉai** is yet another earnest venture of the Institute of Asian Studies in the publication of ballads.

Acknowledgement

Our sincere thanks are due to Dr. Shu Hikosaka and Dr. G. John Samuel, Directors, Institute of Asian Studies, Chennai-600 119 for entrusting to us the task of editing this text. We specially thank Dr. G. John Samuel for his painstaking effort not only in introducing experts and books to us but also in beating the introduction to shape.

We thank Dr. P. Subramaniam, Head of the Department of Manuscriptology, for his guidance at the different stages of editing this text. We thank Dr. Soundarapandiyan, the Curator, Government Oriental Manuscripts Library, for permitting us to copy the paper manuscript, the Librarian, Archives, for allowing us to get a copy of the oldest edition (1876) of this text, Rev. Dr. S. Rajamanickam for providing us a later edition (1956), Dr. A.B. Antony Raj for scholarly guidance, Mr. M. Parimanan and K. Pannir Selvan for assisting in variant readings of this text, Ms. N. Umarani and Ms. P. Nandhini for the DTP work, Dr. M.S. Nagarajan and Dr. V. Ganesan for correcting the proofs in the English version, Mr. A. S. Natarajan for the wrapper design and Pavai Printers, Chennai for their neat execution of the work.

DR. K. JAYA KUMAR

R. JAYALAKSHMI

ஆய்வுரை

கிறித்துவத் தமிழ் இலக்கியங்களுள் பிற வகை இலக்கியங்களினும் அம்மானை வகை இலக்கியங்களே அதிகச் செல்வாக்குடன் திகழ்வதைக் காணமுடிகிறது. 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மொழியில் இலக்கியம் படைக்க ஆரம்பித்த கிறித்துவச் சான்றோர்களிடையில் இவ் அம்மானை வகையைச் சார்ந்த கதைப்பாடல்கள் அதிகச் செல்வாக்குடன் திகழ்ந்தமைக்குரிய காரணங்கள், **அர்ச். மரிகருதம்மாள் அம்மானை** நூல், மக்களிடையே பிரபலமாகத் திகழ்ந்தமைக்குரிய காரணங்கள் ஆகியன கிறித்தவத் தமிழ் இலக்கிய வரலாற்றோடும், அம்மானை வடிவம் சார்ந்த இலக்கிய வகையோடும், தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளோடும் ஒப்பு நோக்கு நிலையில் இங்கு ஆராயப்படுகின்றன.

பிறநாட்டாரின் தமிழ்ப் பணிகள்

தமிழகத்தில் கிறித்துவ இலக்கியங்கள் அவற்றின் தொடக்ககால கட்டத்தில், பெரிதும் பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட பிறநாட்டு அறிஞர்களாலேயே தமிழில் தோற்றுவிக்கப்பட்டன புதிய நம்பிக்கை, புதிய சமயக்கோட்பாடு ஆகியவற்றோடு தமிழர்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தனர். அவ்வகையில் தமிழகத்தில் இலக்கிய, இலக்கணம் செய்தவர்களாக ஆண்டிறீக்கு அடிகளார், இராபர்ட்-டி-நொபிலி என்னும் தத்துவ போதகர், பெஸ்கி என்னும் வீரமாமுனிவர், சீகன்பால்க், எல்லிஸ், ஜி.யு. போப், ராபர்ட் கால்டுவெல் ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இவ்வறிஞர் பெருமக்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப் பண்பாடு, சாதீய அமைப்புமுறைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை மிகவும் நுணுக்கமாகக் கற்றுத் தேர்ந்தவர்களாகத் திகழ்கின்றனர். இவர்களின் இத்தகைய போக்கு குறித்து, "மத வாழ்வும் மறைப்பணியும் இந்திய மரபுக்கு ஏற்றதாக இயங்க வேண்டும் என இன்று முயற்சி செய்கிறோம். இம்முயற்சியைத் தத்துவ போதகர் 17ஆம் நூற்றாண்டில் தொடங்கினார். வீரமாமுனிவர் அதைத் தொடர்ந்து நடத்தினார்"[1] 'என்பார் வி. மி. ஞானப்பிரகாசம்.

தத்துவ போதகரின் இலக்கியப் போக்கும் இறைத்தொண்டும்

இராபர்ட் - டி- நொபிலி என்பார் இவ்வகையில் பெரும்பங்கு வகித்தவர் ஆவார். இவர் தன்பெயரைத் தமிழ் மண்ணின் சூழலுக்கு ஏற்ப 'தத்துவ போதகர்' என மாற்றிக் கொண்டார். மக்களுக்குப் பழக்கமாகிப் போன எளிய விருத்தங்களில் கிறித்துவத் தத்துவங்களைக் கூறும் நூல்களை இயற்றினார்; இந்திய பழந்துறவிகளைப் போல தன்னை மாற்றிக்கொண்டார். இது குறித்து, அவரது காவியுடை, தலைப்பாகை, கடுக்கன், புலித்தோல் ஆசனம், சந்தனப்பொட்டு, குடிசை வாழ்க்கை, சைவ உணவு ஆகிய இவை அனைத்தும் அவரைத் தமிழ்த் தவ முனிவராகவே காட்டின என ப. ச. ஏசுதாசன் தனது 'வீரமாமுனிவரின் தன்னாக்க இறையியல்' என்ற கட்டுரையில் குறிப்பிடுவார்.[2] இதைப்போலவே சீகன்பால்கு

---

1 வி மி. ஞான்ப்பிரகாசம் மற்றும் க. ப. அறவாணன் (பதிப்), '**வீரமாமுனிவம்**', ப.12.

2. மேற்படி நூல், ப. 67.

என்பாரும் தன்னைச் சீகன்பால்கு ஐயர் என அழைத்துக் கொண்டதோடு கிறித்துவ இலக்கியத்தின் தத்துவப் பாடல்களை, கீர்த்தனங்களைத் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு ஒத்திசையக் கொடுத்தார் என்பர்.[3] இதற்குக் காரணம், "மனிதனின் அடிப்படை உணர்வுகள் அவன் பிறந்த நாட்டுச் சூழல்களோடும் தாய் மொழியோடும் இரண்டறக் கலந்து பின்னிப் பிணைந்து கிடப்பன"[4] என்று ஜி. ஜான் சாமுவேல் என்பார் கூறும் கருத்தும் இவண் மனங்கொள்ளத்தக்கது. இராபர்ட் - டி-நொபிலி இத்தத்துவத்தினை மிகவும் நுணுக்கமாக உணர்ந்தவர் என்பதைச் சமயப் பணியில் அவர் கையாண்ட உத்திகள் மூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது மதம் மாறியவர்கள் பழைய சடங்காச்சாரங்களோடு கூடிய உடைகள், தலையில் வைத்துக்கொண்ட குடுமிகள், பூணூல், உணவு பழக்கங்கள், சமுதாயப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அவர்கள் கிறித்துவர்களாக இருந்த போதிலும்கூட அனுபவித்துக்கொள்ள அவர் அனுமதி அளித்திருந்தார்.[5] மேலும், அவர் கிறித்துவ தேவாலயத்தை இந்துக் கோயிலின் சாயலில் கட்டி அதற்குக் 'கோயில்' என்றே பெயரிட்டு அழைத்தார். இந்துமத பூஜைகளுக்குப் பிறகு பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படுவதைப் போலவே அவரும் தேவாலய வழிபாட்டிற்குப் பிறகு பழங்களையும், இனிப்புகளையும் வழிபாட்டில் கலந்து கொண்டோருக்கு வழங்கினார்.[6] இத்தன்மைகள் பலவற்றாலும், அவருக்குத் தலைமையிடத்திலிருந்து கொடுக்கப்பட்ட சில சுதந்திரங்களாலும் கிறித்துவம் முடிந்தளவு தமிழகத்தில் அயன்மைத் தன்மை குறைந்த நிலையில் வளர்ந்தமையைக் காணமுடிகின்றது

இலக்கியங்களில் அயன்மைத் தன்மை

தமிழ்ச் சூழலுக்கு ஒத்துவராமல் அந்நியப்பட்டுப்போன இலக்கியங்கள் இவ்வகையில் மக்களின் பயன்பாடு இன்றிப் புறக்கணிக்கப்பட்ட நிலையும் நோக்கத்தக்க ஒன்றாகும். இதற்குப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்தே சான்றுகள் பல கொள்ள முடியும். அக இலக்கியங்களுள் **ஐங்குறுநூறு** முதலாய் **அகநானூறு** ஈறாய் உள்ளவை பெற்ற அதே மாட்சிமையினைப் **பதினெண் கீழ்க்கணக்கி**னுள் திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது போன்ற அகப்பொருள் தொடர்பான நூல்கள் பெறவில்லை. **மகாபாரதத்**தைத் தமிழில் கூறும் வில்லி புத்தூரார், நல்லாப்பிள்ளை இருவர் நூலுள்ளும் முதலாமவரின் நூலே மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கியமாகத் திகழ்கிறது.

---

3 'Ziegenbalg's meritorious achievements had a considerable reception among the native congregation and this enthused other missionaries to venture on composing more hymns in Tamil.'
G. John Samuel, *Encyclopaedia of Tamil Literature Vol.I*, p.391.

4. ஜி ஜான் சாமுவேல், *திறனாய்வு சிந்தனைகள்*, ப 60

5 Thus D-Nobili's converts were allowed to retain their tufts (*Kuṭumi*). their sacred cord, their customary bathings and food rules, and all the regulations governing social intercourse. It was therefore possible for them to remain as Christians within Hindu society.

6. Duncan B. Forrester, *Caste and Christianity*, p.15. & ------, Catholic Ashrams. *Adopting and Adoptinng Hindu Dharma*, p. xviii.

இது போன்றே கிறித்துவ இலக்கியங்களிலும் பல சிறந்தனவாகவும் சில மக்களைக் கவராதனவாகவும் அமையப்பெற்றன. வீரமாமுனிவரின் **தேம்பாவணி**; எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளையின் **இரட்சணிய யாத்திரிகம்** ஆகியன சிறந்த இலக்கியங்களாக, காப்பிய வரிசையில் வைத்துப் பேசப்பட்டன. அந்நிய மதக்கோட்பாடு, அந்நியப் பாத்திரங்கள், சூழல் போன்றவை யாவும் தோன்றாவண்ணம், தமிழ் மண்ணின் சூழலுக்கு இயைய இக்காவியங்கள் படைக்கப்பெற்றதே இவற்றின் வெற்றிக்குக் காரணமாகும்.

கிறித்துவ இலக்கியத்துள் அயன்மைத் தன்மை கொண்ட படைப்புகள்

The Pilgrim's Progress, The Holy War ஆகியன தமிழில் பலரால் மொழிபெயர்க்கப்பட்டும் தமிழர்களுக்குப் பழக்கப்படாத ஓசைநயம், காட்சிப் படிமங்கள் ஆகியவற்றால் மக்களை முழுமையாகச் சென்றடைய முடியவில்லை.[7] இதைப் போலவே ஜெர்மன் இசையைத் தழுவித் தமிழில் பாடப்பெற்ற ஆரம்பகாலக் கிறித்துவக் கீர்த்தனைகள் தமிழர் காதுகளுக்கு மிகவும் அந்நியமாகத் திகழ்ந்தமையால் அவையும் சிறப்பிடம் பெறாது போயின. இதை மாற்றி, அமெரிக்கத் திருச்சபையைச் சார்ந்தவரான இ. வெப் என்பார் 1859இல் **கிருஸ்தவக் கீர்த்தனைகள்** என்ற நூலைப் பதிப்பித்தார்.

வேதநாயக சாஸ்திரியாரின் தமிழ்ப் படைப்பிலக்கியங்கள்

தமிழில் சிறந்த கீர்த்தனைகளை, இசைப் பாடல்களைச் செய்த தமிழ்ப் புலவர்களுள் மிகவும் மனங்கொள்ளத்தக்கவராகத் தஞ்சை சரபோஜி மன்னரிடம் சிறிது காலம் அவைக்களப் புலவராகப் பணிபுரிந்த வேதநாயக சாஸ்திரியார் காணப்படுகிறார். அவரது **ஞானக் கீர்த்தனைகள்**, **ஜெபமாலை** ஆகியவை குறிப்பிடத்தக்கன. சைவ சமயத்துள் ஏராளமான சிற்றிலக்கிய, நாட்டுப்புற வடிவங்களைக் கையாண்ட மாணிக்கவாசகரைப் போலவே இவரும் சிற்றிலக்கிய வகைகளில் பல கிறித்துவ இலக்கியங்கள் செய்தவராவார். அவற்றுள் நொண்டி இலக்கிய வகையில் **ஞான நொண்டி**, கும்மி வகையில் **ஞானக்கும்மி**, நாடக வகையில் **ஞானத்தச்ச நாடகம்**, உலா வகையில் **ஞானவுலா**, அநுபூதி வகையில் **பரமாநுபூதி**, குறவஞ்சி வகையில் **பெத்தலகேங் குறவஞ்சி** ஆகியவை சில சான்றுகள்.

பிற கிறித்துவ இலக்கியப் படைப்பாளர்கள்

இவரைப் போலவே சிறந்த கிறித்துவ இலக்கியப் படைப்பாளர்களாகத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றவர்களில் அந்தோணிக்குட்டி அண்ணாவியார், கூழங்கைத் தம்பிரான், முத்துசாமிப் பிள்ளை, இன்பக் கவிராயர், சவராயலு நாயக்கர், பண்டித சவரிராயர் போன்றோர் ஒரு சிலராவார்

பதினாறாம் நூற்றாண்டைய இலக்கியப் போக்கு

சிற்றிலக்கிய வளர்ச்சியில் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முக்கியமான கால கட்டமாகத் திகழ்ந்தது. நாயக்கர் ஆட்சி, ஜமீன் ஆட்ணசி, நவாப் ஆட்சி அமைப்புகள் இக்கால கட்டத்தில்

---

7. ஜி. ஜான் சாமுவேல், **பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்**, ப. 137.

பெருவாரியாகத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்தன. ஒவ்வொரு குறுநில மன்னர்களும் அவைக்களப் புலவர்களைப் பெரும்பாலும் அமர்த்தியிருந்தனர். இக்காலங்களில் பேரிலக்கியங்களினும் நோக்க மன்னர்கள் புகழ்பாடும் சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றின. கிறித்துவர்கள் தம் மதத்தினைப் பரப்ப இம்மரபையும் உள்வாங்கிக் கொண்டனர். அத்தோடு உரைநடை இலக்கியத்திலும் தமிழுக்குப் பெருங்களத்தினை அவர்கள் அமைத்தனர். அவ்வகையில் **புனித பைபிளி**ன் வசனங்களும், **புனிதர் வரலாறு** என்னும் நூலும், **பரமார்த்த குரு கதை** என்னும் நூலும் சிறப்பிடம் பெறுகின்றன.

கிறித்துவப் புலவர்களின் சிற்றிலக்கியப் படைப்புப் பாணி

ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போலச் சிற்றிலக்கிய மரபினை உள்வாங்கிய பல கிறித்துவப் புலவர்கள், அவ்வகை இலக்கிய வகையில் தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகள் கெடாவண்ணம் நுண்ணிய மாற்றங்கள் சில செய்தனர். மடக்கு, யமகம், திரிபு, சிலேடை என அலங்காரங்கள் மிகுந்து, தமிழ் பாண்டித்தியம் உடையவர்கள் மட்டுமே புரிந்துகொள்ளத்தக்க பலவகையான சிற்றிலக்கியங்களை மிகவும் எளிமைப்படுத்தி, எளிய சொல்லாட்சிகளில் மாற்றித் தந்த விதத்தால் வெற்றி பெற்றனர் கிறித்துவ தத்துவத்தைக் கூறும் பல வகைச் சிற்றிலக்கியங்களை, அவ்வகையில் இயற்றிப் பெருவெற்றியைப் பெற்றிருப்பவர் வேதநாயக சாஸ்திரி ஆவார். இது குறித்தும்,அவரது சிற்றிலக்கிய வகைகள் தமிழில் கொண்டு வந்த மாற்றம் குறித்தும், ஜி. ஜான் சாமுவேல், "Though he partially belongs to the neo - classical tradition, we see in his works the gradual melting away of the rigid neo-classical rules, and his works in several ways anticipate and foreshadow the latter romantic movement spearheaded by Pārati and others"[8] எனக் கூறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அம்மானையின் தொன்மை

கிறித்துவ இலக்கியங்களுள் மிகுதியாகக் காணப்படும் சிற்றிலக்கிய வகை அம்மானை ஆகும் இது பற்றிய சிந்தனைகள் சங்க இலக்கியத்திலேயே தோற்றம் பெற்றுள்ளன சங்க இலக்கியத்துள் அம்மானை என்னும் சொல் அதே பெயரில் அழைக்கப்பெறவில்லை. எனினும் அம்மானையாடலோடு தொடர்புடைய கழங்காடல் பற்றிய குறிப்புகள் பெரும்பாணாற்றுப்படை (334-335), புறநானூறு (36 4) ஆகியவற்றில் விவரிக்கப்பட்டுள்ளன.[9] அகநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பதது, பரிபாடல் ஆகியவற்றில் இச்சொல் பல இடங்களில் கழங்காட்டத்தைக் குறிக்கும் விதத்தில்வருவதாகச் சங்க இலக்கியச் சொல்லடைவு சுட்டுகிறது[10]

8. G. John Samuel (Ed.), *Encyclopaedia of Tamil Literature*, Vol.I, p. 400

9. G. John Samuel (Ed.) *Encyclopaedia of Tamil Literature*, Vol.II, p. 299.

10. Thomes Lehmanın & Thomes Malten, *A word Index for Cankam Literature*, p. 143.

சிலப்பதிகாரமும் 'அம்மானை' இலக்கிய வடிவும்

'அம்மானை' என்னும் இச்சொல் **சிலப்பதிகாரத்**தில் தாய் (10:135-137), தலைவி (20:16), 'அம்மானை' என்னும் ஆடுகருவி (29:17), தீ (29:19) என்கிற நான்கு பொருள்களில் இடம்பெறுகின்றது[11] 'அம்மானை' என்னும் ஆடுகருவியும் 'கழங்கு' என்னும் சங்க இலக்கியத்துள் குறிப்பிடப்படும் ஆடுகருவியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

சங்க இலக்கியம் முதற்கொண்டு தொடரும் 'குரவை, துணங்கு, ஊசல், பந்து, கழங்கு, பாவை, சிற்றிலிழைத்தல், புனலாடல், அலவனாட்டுதல், அம்மாவாடல்' முதலிய பலவகை ஆட்டங்களுள் அம்மானை சிலப்பதிகாரத்துள் கதை நிகழ்வை நயம்பட உரைப்பதற்குரிய சிறந்த இடத்தைப் பெறத் தொடங்குவதை அந்நூலின் வாழ்த்துக்காதையில் காணமுடிகிறது.

> "வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
> ஓங்கரணம் காத்த உரவோன்யார் - அம்மானை
> ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
> தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் - அம்மானை"[12]

என்னும் இவ்வடிகள் வினா-விடைப் பாங்கில் ஒரு நிகழ்வைத் திறம்பட மனதில் பதியும் வண்ணம் கூறும் முறையில் சிறப்பாக அமைந்துள்ளமை நோக்கத் தக்கது.

திருவம்மானை

இவ்வகை அம்மானைப் பாடல் ஓர் இலக்கிய வகையாக, சிலம்பினும் பிற்பட்டதும் மாணிக்கவாசகரால் இயற்றப்பெற்றதுமான திருவம்மானையின் மூலம் முகிழ்ப்பதைக் காணலாம். **திருவாசகம்** என்னும் நூலுள் ஒரு பகுதியான இத்திருவம்மானை என்னும் பகுதி இரு நிலைகளில் அமைந்துள்ளது.

1. ஒரு பெண் வினா எழுப்ப இரண்டாவது பெண் விடை சொல்ல மூன்றாமவள் முத்தாய்ப்பு வைக்கும் நிலை.
2. முதற்பெண் ஒரு செய்தியைச் சொல்ல இரண்டாமவள் அதன் அடிப்படையில் ஒரு வினாவை எழுப்ப மூன்றாமவள் அதற்குச் சிலேடை நயத்துடன் விடை கூறும் நிலை.

மடக்கு அம்மானை இலக்கணம்

இவ்வமைப்பின் செறிந்த நிலையில், ஒருவர் வினா எழுப்ப மற்றவர் விடை கூறும் அமைப்பில், கர்ண பரம்பரையாய் அமைந்த, புகழேந்திப் புலவருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் இடையே நடந்த 'அம்மானைப் பாடல்கள்' தமிழில் இன்றும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன

---

11. இளங்கோவடிகள், **சிலப்பதிகாரம்**.
12. மேற்படி நூல், **வாழ்த்துக்காதை**.

இவை 'அம்மானை மடக்கு' என்றும் அழைக்கப்பட்டன. இவ்வகைப் பாடல் குறித்து.

"இரண்டு நாலைந் தெனுமடி ஈற்றில்
தன்பெயர் குலவத் தன்ன அம்மானை
ஐந்தடிக் கலிப்பா போலும் அதனிடை
சொல்லலும் மறுத்தலும் விடையும் தானே
கூறினர் பற்பலர் குவலயத் திடத்தே"

என **அறுவகை இலக்கணம்** என்னும் நூல் விதி கூறுகிறது.[13]

அம்மானையும் பிற வகை இலக்கிய வடிவங்களும்

மாணிக்கவாசகர் காலந்தொடங்கித் தனித்ததொரு இலக்கிய வகையாக வளர்ந்த இச்சிற்றிலக்கிய வகை பிற சிற்றிலக்கியங்களுள் ஓர் உறுப்பாகத் திகழ்கின்ற அமைப்பும் தமிழ் இலக்கியத்துள் உள்ளது அதாவது கலம்பக இலக்கியத்துள் இடம்பெற வேண்டிய ஓர் உறுப்பாகவும் அம்மானை திகழ்கிறது. பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையில், குறிப்பாக மகளிர் பிள்ளைத்தமிழில் பத்துவகைப் பருவங்களுள் ஒன்றாக அம்மானை காணப்படுகிறது. உலா என்னும் இலக்கிய வகையினுள்ளும் மகளிரின் அம்மானை விளையாடல் குறித்த செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன.

அம்மானை - கதைப்பாடல்

அமமானை இலக்கிய வகை, மேற்கூறிய இலக்கியப் பயன்பாடுகள் தவிர நெடுங்கதை ஒன்றைக் கூறும் அமைப்பிலும் மாறுவதை 17ஆம் நூற்றாண்டில் காணமுடிகிறது. இக்காலக் கட்டத்திலிருந்து அம்மானைப்பாட்டு, மாலை, நங்கைப் பாடல் போன்ற பெயர்களில் பல நூல்கள் கிடைக்கின்றன **இராமாயணம், மகாபாரதம்** ஆகிய இதிகாசங்கள் கூட முறையே **ராமாயண அம்மானை** என்னும் பெயரிலும், **பாரத அம்மானை** என்னும் பெயரிலும் பல அடிகளில், நெடும் கதைப்பாடல்களாகத் தமிழில் புனையப்பட்டன. இவ்விதம் காப்பியங்களாகப் புனையப்பட்ட இவை மீண்டும் அம்மானை வடிவில் கதைப்பாடலாகச் செய்யப்படுவது இயல்பே என்பார் ஜி. ஜான் சாமுவேல், இவர், "பிரச்சார நோக்கத்தோடு எழும் இயக்க இலக்கியப் படைப்பாளர்கள், தங்கள் கருத்துக்களை மக்களுக்குப் பரப்ப விரும்பும்போது உயர்குடியினரின் செந்நெறி இலக்கிய (Classical Literature) வடிவங்களை விட்டுவிட்டு, பாமர மக்களின் நாட்டுப்புற இலக்கிய (Folk - Literature) வடிவங்களில் தத்தம் கருத்துக்களைப் பரப்புவர்[14] என்று கூறுவது இவ்வகையில் சிந்திக்கத் தக்கது

இதிகாசங்கள் மட்டுமன்றி அவற்றின் கிளைக் கதைகள் சிலவும் அம்மானை வகைக் கதைப்பாடல்களாகத் தோன்றின அம்மானை நடையில் அமைந்து, மாலை என்ற பெயருடன் காணப்படும **அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை, அபிமன்னன் சுந்தரிமாலை,**

---

13. தண்டபாணி சுவாமிகள், **அறுவகை இலக்கணம்** - (யாப்பு - 29).

வைகுண்ட அம்மானை, அசுவமேத அம்மானை[14], **இராமர் வனவாச அம்மானை** முதலி யன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

அம்மானைக் கதைப்பாடலின் இலக்கணம்

இத்தகு அம்மானை, கதைப்பாடலாகத் திகழும் பொழுது அதன் வரன்முறை யாது என்பது குறித்து வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்,

"கலிப்பா அரையரை யாகக் கூட்டியும்
எதுகை இன்றித் தனித்தனி சேர்த்தும்
காதை யம்மானை கழறினர் சிலரே"[15]

என்று தம்முடைய **அறுவகை இலக்கணத்**துள் கூறியுள்ளார்.

அம்மானைக் கதைப்பாடலின் வகைகள்

"அம்மானைக் கதைப்பாடல்களை அவற்றின் கதைக்கரு தன்மையால் ஐந்து வகையாகப் பிரித்துக் கொள்ளமுடியும்" என்கிறார் மொ. மருதமுத்து[16]. அவை,

1. **இதிகாச, புராண அம்மானைகள்** - இதிகாச, புராண கருத்துக்களைப் பாடும் இவ்வகையில் **இராமாயண அம்மானை, பாரத அம்மானை, கள்ளழகர் அம்மானை,** மற்றும் **திருவிளையாடல் அம்மானை** ஆகியன அடங்கும்.

2. **இலக்கிய அம்மானை** - தமிழ் இலக்கியங்களில் அமைந்த பாடுபொருள்களைக் கொண்டு பாடப் பெறும் இவ்வகையில் **கோவலன் கதை அம்மானை, சீவக சிந்தாமணி அம்மானை** ஆகியன அடங்கும்.

3. **சமய அம்மானை** - தத்தம் சமயத்தார் தங்கள் தெய்வங்களின், சமயங்களின் மேன்மைகளைப் பாடும் இவ் அம்மானையில் **ஏகாதசி அம்மானை, சத்தியவேத அம்மானை, திருமறைப்பொருள் அம்மானை** ஆகியன அடங்கும்.

4. **சமுதாய அம்மானை** - தமிழ்ச் சமுதாயத்தில் நிகழ்ந்த பல்வேறு சிக்கல்களை மையமாகக் கொண்டு பாடப்பெறும் இவ்வகையில் **மதுரைவீரன் அம்மானை, பொன்னர் சங்கர் அம்மானை** ஆகியன அடங்கும்.

5. **வரலாற்று அம்மானை** - தமிழக வரலாற்றுப் பதிவுகளை மையமாகக் கொண்டு பாடப்பெறும் இவ்வகையில் **இராமப்பையன் அம்மானை, சிவகங்கைச் சரித்திர அம்மானை, வீரய்யன் அம்மானை, ஐரோப்பிய யுத்த அம்மானை** ஆகியன அடங்கும்.

---

14 ஜி ஜான் சாமுவேல், **திறனாய்வு சிந்தனைகள்**, ப. 72.

15. தண்டபாணி சுவாமிகள், **அறுவகை இலக்கணம்** - யாப்பு - 31.

16. மொ. மருதமுத்து (பதி), **ஆமையர் அம்மானை**, ப. 23.

காலத்தால் தொன்மையான அம்மானைக் கதைப்பாடல்கள்

கதைப்பாடல் வடிவம் சார்ந்த அம்மானைப் பாடல்கள் 17ஆம் நூற்றாண்டு தொடக்கமாகக் கிடைக்கின்றன. அவ்வகையில் அந்நூற்றாண்டைச் சார்ந்தனவாகவும், பழமையானவையாகவும் கருதப்பெறும் அம்மானை நூல்களாக **இராமப்பையன் அம்மானை, சீராளன் அம்மானை,** புகழேந்தி இயற்றிய **மூவர் அம்மானை***, **திருச்செல்வர் அம்மானை** ஆகியன காணக்கிடைக்கின்றன. இப்பழம் அம்மானை வரிசையில் கிறித்துவ அம்மானைக் கதைப்பாடல்களையும் வைத்து நோக்கும்பொழுது கிறித்துவர்கள் தங்களுடைய இலக்கியப் படைப்பிற்கு இவ்வம்மானை வடிவத்தை எவ்வளவு தூரம் ஏற்றம் கொடுத்துக் கையாண்டுள்ளனர் என்பது புலப்படும்.

கிறித்துவ இலக்கியத்துள் அம்மானைக் கதைப்பாடல்கள்

கிறித்துவப் புலவர்கள் இதே கால கட்டத்தில் **சண்டியோகு மேயர் அம்மானை** (Santiogu Mayor Ammanai), **அர்ச். மரி கருதம்மாள் அம்மானை** ஆகிய நூல்களைப் படைத்துள்ளமை இவ்விலக்கிய வகையின்மீது அவர்களுக்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்தும். "இம்முயற்சியில் முதன் முதலாகத் தோன்றிய கிருத்துவ இலக்கியமாக **சண்டியோகு மேயர் அம்மானை** என்ற தமிழ்க் கத்தோலிக்க நூல் காட்சி தருகின்றது" - என சிற்றிலக்கிய வரிசையில் அம்மானைப் பாடலுக்குக் கிறித்துவப் புலவர் கொடுத்த ஏற்றம் பற்றி ஜி. ஜான் சாமுவேல் தம் நூல் ஒன்றில் கூறுகிறார்[17] இந்நூலினை கி.பி. 1647 இல் இலங்கையைச் சார்ந்த, பிராமணச் சாதியில் பிறந்து கிறித்துவ மதத்திற்கு மாறி, தன் பெயரைப் 'பெட்ரோ' என மாற்றிக் கொண்ட புலவர் ஒருவர் இயற்றினார். அம்மானை வகையில் பல நூல்களை இவ்விதம் 17ஆம் நூற்றாண்டு தொடக்கமாக 20ஆம் நூற்றாண்டு ஈறாகப் பல புலவர்கள் கிறித்துவ மதத்தில் இருந்துகொண்டு வழங்கினர்

கிறித்துவப் புனிதர்கள் குறித்த அம்மானைக் கதைப்பாடல்கள்

கிறிததுவ மதத்தில் புனித நிலையை அடைந்த அர்ச் செபஸ்தியார், அர்ச். அந்தோனியார், அர்ச். பெரிய யாகப்பர், அர்ச். சவேரியார், அர்ச் தோமையார், வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை என்னும் தீர்க்கதரிசிகளின் வரலாறுகளும் அம்மதத்திற்காகப் போராடித் தங்கள் இன்னுயிர் நீத்த பெருந்துறவிகளின் வரலாறுகளும் அவ்வகையில் பல காலகட்டங்களில் அம்மானை வடிவில் நூல்களாயின.

கிறித்துவப் புனிதைகள் குறித்த அம்மானைக் கதைப்பாடல்கள்

ஆண் புனிதா மட்டுமன்றிக் கிறித்துவ மதத்திற்காக, அவர்களைப் போலவே தொண்டாற்றி நன்மரணம் அடைந்த ஏராளமான புனிதையர் வரலாறும் அம்மானைக் கதைப்பாடலாக இயற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்குத் தரப்பட்டன. **அர்ச். பெரியநாயகி**

---

* புகழேநதிப புலவர் தவிாதது வேறு சில புலவர்களும் மூவர் அமமானை என்னும பெயரில காலததால பிறபட்ட நிலையில் சில அமமானை நூலகளை இயற்றியுள்ளார்.

மாதா, அர்ச், லூர்து மாதா, அர்ச். செபமாலை மாதா, அர்ச். வியாகுல மாதா, அர்ச். திரேசம்மாள், அர்ச். அகினேசம்மாள், அர்ச். பார்பரம்மாள், அர்ச். பிலோமினம்மாள் என்னும் பல புனிதையர் வரலாறுகள் அவ்வகையில் அம்மானை வடிவத்தில் மக்களுக்காகப் படைக்கப்பெற்றன.*

அண்டிறீக்கு அடிகளாரின் இலக்கியப் பணிகள்

உலகம் முழுவதும் இவ்விதம் கிறித்துவ நற்பணிகளுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இப்புனிதப் பெருமக்களின் வரலாறுகள் தமிழில் எவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டன என்பது இவ்விடத்தில் ஆராயத் தக்க ஒன்றாகும். போர்த்துக்கல் நாட்டைச் சார்ந்த அண்டிறீக்கு அடிகளார் இவ்வகையில் மிகச் சிறந்த பணியினைத் தமிழ் மொழியில் முதல்முதல் செய்துள்ளார். தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த பழைய காயல், புதிய காயல் ஆகிய இடங்களில் சமயப் பணி செய்த இவர், **அடியார் வரலாறு** (Flos Sanctorum) என்னும் நூலை இயற்றினார். இந்நூல் புலவர் பலருக்குப் புனிதர் வரலாற்றை மையமாகக் கொண்டு அம்மானை பாட வழிவகுத்தது. இந்நூல் கி.பி. 1586இல் வெளியிடப்பெற்றது "செபமாலை டியேகோ அடிகளார் போர்த்துக்கீசிய மொழியில் எழுதிய **புனிதரின் பூச்செண்டு**, என்ற நூலிலிருந்தும், லிப்பே மோனோ என்ற அடிகளாரின் **நூற்றறுபது பழங்காலப் புனிதர்களின் வரலாறு** என்ற நூலிலிருந்தும், சுவக்கீம் பெரியேனியோ என்ற அடிகளாரின் **அப்போஸ்தலர்களின் வரலாறு** என்ற இலத்தீன் மொழி நூலிலிருந்தும் அண்டிறீக்கு அடிகளார் மொழி பெயர்த்த புனிதர் வரலாறுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவை இந்த **அடியார் வரலாறு** என்னும் நூலில் இடம்பெற்றன.[18] என அ.பி. அந்தோனி இராசு என்பார் குறிப்பிடுகிறார். **அடியார் வரலாறு** என்னும் நூலை எழுதுவதற்கு முன்பாகவே இவர் தமிழில் 1578இல் **தம்பிரான் வணக்கம்**, 1579இல் **கிரீசித்தியானி வணக்கம்**, 1586இல் **கொம்பெசியோனாயரு** ஆகிய மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார். இத்தகு சிறப்பு வாய்ந்த அண்டிறீக்கு அடிகளார், பல அடியார்களின் வரலாற்றைத் தமிழில், அதுவும் உரைநடை சிறப்பிடம் பெறாத அக்காலத்தில் உரைநடை படைப்பிலக்கியமாகச் செய்தமை கிறித்துவ இலக்கிய வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ் **அடியார் வரலாறு** என்னும் நூலுக்குப் பிறகும் இவர் சில நூல்களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடியார் வரலாறு

அண்டிறீக்கு அடிகளார், தம் **அடியார் வரலாற்றில்** 86 புனிதர்களின் வரலாறுகளைக் கூறியுள்ளார். இவ்வரலாற்றைத் தாம் தமிழில் தருவதற்கு மிகுந்த உழைப்பைச் செலவிட்டமை

---

* கிறித்துவ அம்மானை நூலகள் யாவை? என்பது பற்றிய ஒரு பட்டியல் பின்னிணைப்பாகத தரப்பட்டுள்ளது

17 ஜி. ஜான் சாமுவேல், **பண்பாட்டுக் கலப்பும் இலக்கிய ஒருமையும்**, ப. 139

18 ஆ.ப. அந்தோனி இராசு (பதி.) **கிறித்துவ அம்மானைகள்**, ப vii.

குறித்து அவரே தம் நூல் முன்னுரையில் குறிப்பிடுகிறார். "வரலாறுகள் நேர்த்தியாய் அமையும்படி அவற்றை மொழிபெயர்ப்பதில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் செலவழித்தேன். இம்மொழியில் பயிற்சியுள்ள எனக்குத் தெரிந்தவரைக்கும், தமிழர்களின் கருத்துப்படியும், இம்மொழியை ஆழ்ந்து பயின்ற நமது சபை குருக்களின் கருத்துப்படியும் இவ்வரலாறுகள் பிழையின்றித் தூய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன என்று நம்புகிறேன்"[19] என அடிகளார் கூறுவதிலிருந்து அவர் புனிதர்களைக் குறித்துத் தமிழர்களுக்கு அறிவிக்க உழைத்த உழைப்பு குறித்தும், அவ்வுழைப்பிலி ருந்த நேர்மையைக் குறித்தும் அறிய முடிகிறது. என்றாலும் அச்சிடப்பட்ட நூலுள் 70 பிரிவுகள் உள்ளன. அவற்றினுள்ளும் 53 புனிதர்களின் வரலாறு தனித்த நிலையிலும், 7 புனிதர்களின் வரலாறுகள் தொகைநிலையிலும் தரப்பட்டுள்ளன. எஞ்சியவை ஏசுபிரான், மரியன்னை, கிறித்துவ மதத்தின் மகத்துவம் போன்றவற்றைக் கூறுவதாகவும் அமைவதைக் காணமுடிகிறது* இதில் கூறப்பட்ட பல அடியார்களின் வரலாறுகள் கிறித்துவம் தழுவியவர்களுக்குத் **திருமறை**க்கு அடுத்த நிலையில் ஒரு புனித நூலாயின என்பதும் மனம் கொள்ளத்தக்கது.

அடியார் வரலாற்றின் செல்வாக்கு – அர்ச். அந்தோனியார் அம்மானை வழி

பல புனிதர்களின் வரலாறுகளைப் படித்துத் தாமும் அவ்வழி ஒழுக வேண்டும் என்பதற்காகவும், தம் வாழ்வின் இறுதியில் மோட்சம் பெற வேண்டும் என்பதற்காகவும் எழுதப்பெற்ற இந்நூல் அவ்வகையில் முக்கியத்துவம் பெற்றது என்பது சுட்டத்தக்க செய்தியாகும் **அடியார் வரலாறு** என்கிற இந்நூலை அடிப்படையாகக் கொண்டு **புனித அந்தோனியார் அம்மானை** இயற்றப்பட்டமை இக்கருத்திற்கு வலுசேர்க்கும் இவ்வம்மானையைப் பாடிய புலவர் இது குறித்துச் சில குறிப்புகளை அந்நூலின் 31ஆம் கண்ணியிலிருந்து 39ஆம் கண்ணி வரையுள்ள அடிகளில் நுட்பமாகப் புலப்படுத்துகிறார்[20]

அர்ச்சியசிஷ்டர்களின் சரித்திரம்

புனிதர்களின் வரலாற்றில் மேலும் பல புதிய புனிதர்கள் பற்றிய செய்திகள் சேகரிககப்பட்டுப் பிறிதொரு நூலாக **அர்ச்சியசிஷ்டர்களின் சரித்திரம்** (நான்கு காண்டங்கள்) என்னும் பெரியதொரு நூல் வெளிவந்ததும புனிதர்கள் அல்லது இறை அடியார் பற்றிக் கிறித்துவர்கள கொண்டிருந்த மதிப்பையும் மரியாதையையும் மேலும் அதிகரிக்கச் செய்தது ஏராளமான புனிதர்களின் வரலாற்றை ஆண்டு முழுவதும் முறையாகக் கிறித்துவர்கள் நினைவில்

---

19 ச இராசமாணிககம் (பதி), *Flos Sanctorum* எனற **அடியார் வரலாறு**, ப. lxviii.

* இவவெணணிககை **அடியார் வரலாறு** நூலிலுள்ள 'நூலின் அட்டவணை' வழி தரப்படுகிறது

20 ஆ பி அந்தோனி இராசு (பதி), புனித அநதோனியார் அம்மானை, ப 5

கொண்டு போற்றவேண்டும் என்பதற்காக ஜனவரி முதல் தியதி முதல் டிசம்பர் 31ஆம் தியதி ஈறாக உள்ள நாட்களில் எந்தெந்த புனிதர்கள் பிறந்தார்கள் என்பதை அவர்களின் வரலாற்றோடு இந்நூல் தெளிவுபடுத்துகிறது.

அர்ச். மரிகருதம்மாள் பற்றிய வாழ்வியல் குறிப்புகள்

அவ்வகையில் அர்ச். மரிகருதம்மாள் என்னும் புனிதை ஜூலை மாதம் 20ஆம் தியதி இவ்வுலகில் தோன்றியதாகக் கொள்ளப்பட்டு மக்களால் போற்றப்படும் பெருநிலையில் காணப்படுகிறாள். இப்புனித அம்மையார் மரிகருதாள், மர்கரீத்தம்மாள், மரிகிருதாள், மருகருதாள், மருகருதம்மாள், மேரி கருதம்மாள் ஆகிய பெயர்களால் பல நூல்களில் குறிக்கப்படுவதைக் காணமுடிகிறது.

நூலாசிரியருக்கு முன்னோடிகள்

அர்ச். மரிகருதாள் குறித்துத் தமிழில் முதலில் வரலாற்றுக் குறிப்பினைத் தருபவராக அண்டிறீக்கு அடிகளார் என்பவரும், அவரைத் தொடர்ந்து சேசுசபைக் குருவாக இருந்த ரொஸ்சியென்னுஞ் சின்ன சவேரியார் சுவாமியாரும் காணப்படுகின்றனர். அவர்கள் எழுதிய குறிப்புகளே சிறந்த அம்மானை நூலாக **அர்ச். மரிகருதாள் அம்மானை**யை இயற்ற இந்நூல் புலவருக்குத் துணை நின்றிருக்க வேண்டும். மேலும் பல்வேறு வாய்மொழிக் கதைகள், அர்ச். மரிகருதாள் குறித்த பிரசங்கங்கள் ஆகியனவும் நூலை விரிவுபடுத்தத் துணைநின்ற கருவிகளாக ஆசிரியருக்கு இருந்திருக்கக் கூடும்.

நூலாசிரியர் பற்றிய அகச் சான்றுகள்

இந்நூலாசிரியர் யார் என்பது குறித்து கருத்து வேறுபாடுகள் உள்ளன 1876ஆம் ஆண்டில் மயிலை பொன்னுசாமி முதலியார் அவர்கள் பதிப்பித்த பழைய பதிப்பில் "பூர்வீக வித்துவான்களிலொருவர் இயற்றிய **அர்ச். மரிகருதம்மாள் அம்மானை**" என்று காணப்படுகிறது.[21] இதில் ஆசிரியர் பெயர் தரப்படவில்லை. இதைப் போலவே சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்துள் காணப்படும் இவ்வம்மானை குறித்த தாள் சுவடியினுள்ளும் ஆசிரியர் பற்றிய விளக்கம் இல்லை. 1955இல் மதுரை தே நொபிலி அச்சகத்தார் வெளியிட்ட பதிப்பினுள்ளும் நூலாசிரியர் குறித்த செய்திகள் தரப்பெறவில்லை. நூலின் உள்ளே நூலாசிரியர் அவையடக்கமாகக் கூறும் பகுதியினுள்ளும் எவ்விடத்திலும் ஆசிரியர் யார் என்பது பற்றிய தெளிவான குறிப்புகள் காணப்படவில்லை. ஆசிரியர் தம்மைக் குறித்துப் பாடும் பொழுது "தீதுநிறை பொல்லாச் சிறியேன்" (கண்ணி-4), "திருச்சரிதை யான்பாட" (கண்ணி-7) "அறியாதான்

---

21 வை. தே. ம சின்னச்சாமி செட்டியார் (பதி), **அர்ச். மரிகருதம்மாளம்மானை**, தலைப்புப பக்கம்.

என்பாடல்" (கண்ணி -16), "நங்கை மரிகருதாள் பெற்றகதை முற்றும் விரித்துரைத்தேன்" (கண்ணி -1219) என்று தம்மைத் தாழ்த்தியும், பணிந்தும் மட்டுமே அறிமுகப்படுத்துகிறாரேயன்றித் தம் பெயரை யாதொரு இடத்தும் குறிப்பிடவில்லை என்பது நினைவிற் கொள்ளத் தக்கது.[22]

நூலாசிரியர் பற்றிய புறச்சான்றுகள்

அகச்சான்றுகள் இவ்விதம் இருக்க 1993ஆம் ஆண்டு இந்நூலை ஆராய்ச்சிப் பதிப்பு நிலையில் பதிப்பித்து வெளியிட்ட ஆ.பி. அந்தோனி இராசு என்பவர் இந்நூலின் ஆசிரியர் ஜான் என்பதாகச் சுட்டுகிறார். மேலும் ஒரு சிலர் இந்நூலுக்கு ஆசிரியர் அப்துல்லா சாயபு என நிறுவ முன்வந்துள்ளனர் என்பதையும் குறிப்பிடுகிறார் ஒரு முகமதிய மதத்தவர் கத்தோலிக்கக் கிறித்துவ சமயம் சார்ந்த சிந்தனைகளின் நுட்பமான பகுதிகளைத் தெளிவாக இந்நூலில் கூறுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தர்க்கரீதியாகவும் சுட்டுகிறார். ஆகவே அப்துல்லா சாயபு என்பார் கிறித்துவம் தழுவித் தம் பெயரை ஜான் என மாற்றி இந்நூலை செய்திருக்க வாய்ப்புள்ளது என்கிறார், Fr. Balthazar Da Costa என்பவர் புனிதக் கல்லூரியிலுள்ளவர்களுக்கு எழுதிய கடிதக் குறிப்பு ஒன்றின் மூலம் இந்நூலாசிரியர் ஜான் என்பதாக அறியமுடிகிறது என்பதையும இப்பதிப்பாசிரியர் குறிப்பிடுகிறார்.[23] அக்கடிதத்தில் Fr. Balthazar Da Costa என்பார், "Next comes the two Johns, one of them is also a great poet. Among other poems he has composed, one on the life of St. Margaret and other small books through which he does much good as we shall see further on . . . . ." என இந்நூலாசிரியர் பற்றிய செய்திகளைத் தருகிறார் இதில் St. Margaret என அழைக்கப்படும் அர்ச். மரிகருதாள் மீது எவ்வகையான சிற்றிலக்கிய வகையில் ஜான் என்பார் நூல்கள் செய்தார் என்பதற்கு எவ்விதமான வெளிப்படையான ஆதாரமும் இல்லை என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது அர்ச் மரிகருதாளின் வாழ்க்கையை ஜான் என்பார் அம்மானை சார்ந்த சிற்றிலக்கிய வகையிலேயே பாடினார் என்பதற்கு மேலும் சான்றுகள் தேவைப்படுகின்றன.

நூலின் காலம்

அர்ச். மரிகருதம்மாள் அம்மானை என்னும் நூலின் காலம், ஜான் என்பார் நூலை இயற்றியவராக இருக்கும் நிலையில் இக்கடிதம் எழுதப்பட்ட 9-9-1653 காலகட்டத்திற்கு முந்தையதாக அமைய வேண்டும் ஆகவே அவ்வகையில் நூலின் காலம் 17ஆம் நூற்றாண்டாகக் கொள்ள இடமுள்ளது. எஸ். சௌந்தரபாண்டியன் என்பார் "பொதுவாக, நடையையும், கருத்தமைதியையும் நோக்க, நூல் கிபி. 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்" என

22. ஆ.பி. அந்தோனி இராசு (பதி). **அர்ச் மரிகருதம்மாள் அம்மானை**

23. அதே நூல் ப. v

இந்நூலின் காலம் குறித்துக் கருத்து தெரிவிக்கின்றார்.[24] நூலின் எந்தவிடத்தும் அகச்சான்று வழி காலத்தை நிறுவ எவ்விதச் சான்றுகளும் இல்லை. மேலும், ஆசிரியரும் நூலின் எவ்விடத்தும் அது பற்றிய குறிப்புகளை விட்டுச் செல்லவில்லை என்பதும் நோக்குவதற்குரியது.

மரிகருதம்மாள் அம்மானை - வரலாற்று வகை சார்ந்த அம்மானை

இந்நூல் கதை வரலாற்றுச் சார்புடைய ஒன்றாகும். The Catholic Encyclopedia Vol. I நூலின் 652 பக்கத்தில், "The Greek Church honours her under the name Marina on 13 July; the Latin, as Margaret on 20 July. Her Acts place her death in persecution of Dioaletian (A.D. 303-5)" என்று குறிப்பிடப்படும் செய்தியின் மூலம் Margaret என்னும் மரிகருதாள் வரலாற்றுச் சார்புடைய ஒருவரே என்பது விளங்கும். அண்டிறீக்கு அடிகளார், ரொஸ்சியென்னுஞ் சின்ன சவேரியார் சுவாமியார் ஆகியோர் எழுதிய அர்ச். மரிகருதாள் என்பவரின் வரலாற்றைப் பெரிதும் தழுவி இந்நூலின் கதை அர்ச். மரிகருதம்மாள் அம்மானையில் சொல்லப்பட்டுள்ளது

அர்ச். மரிகருதம்மாள் கதைச் சுருக்கம்

மரிகருதாள் என்னும் பெயருடையவள், ஒலிவோர் மன்னன் ஆண்ட அந்தியோக்கிய நாட்டில் பிறக்கிறாள். இளமையிலேயே தாயை இழந்த இப்பெண்ணானவள், அவள் தந்தையாகிய தேயோதேசி என்பவரால் ஒரு தாதியிடம் வளர்க்கக் கொடுக்கப்படுகிறாள். மரிகருதாளின் தந்தையாகிய தேயோதேசி என்பான் கிறித்துவ மதத்தினைச் சாராத இந்து மதத்தின் புராதனக் கொள்கைகளில் மிகுந்த நம்பிக்கை உடையவனாகத் திகழ்கிறான்.

மரிகருதாளை வளர்த்த தாயானவளோ அவளை அம்மதத்தின் மார்க்கத்திலிருந்து மாற்றுவித்துக் கிறித்துவ சமயத்தின் மேன்மைகளைப் புகட்டுகின்றாள். வளர்ப்புத் தாயின் உபதேசங்களைக் கேட்டு மனத்தில் மிகவும் தெளிவு பெற்றவளாய் மரிகருதம்மாள் திகழ்கிறாள். மேலும், தன்னை இனி சர்வேஸ்வரனுக்கே அர்ப்பணிப்பதாக மனத்துள் வைராக்கியமும் கொள்கிறாள்

ஆடுகளை மேய்க்கும் தொழிலைக் கொண்டிருந்தவளான மரிகருதம்மாள் அழகிய நங்கையாகத் திகழ்ந்த கால கட்டத்தில் ஒரு நாள் வழக்கம் போலவே தன் தொழிலைச் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது அவ்வழியே வந்த அந்தியோக்கிய நாட்டு மன்னன் ஒலி வோன் என்போன் அவள் அழகில் மயங்கினான் சேவகர்களை அருகழைத்துத் தன் பெருமையைக் கூறி அவளை அழைத்து வரும்படி செய்தான். சேவகர்களும் அவ்விதமே மரிகருதாளிடம் உரைத்தனர்.

---

24. எஸ். சௌந்தரபாண்டியன், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள **கிறித்தவத் தமிழ் இலக்கியச் சுவடிகள்**, ப. 76

சர்வேசுவரனை வணங்கி மரிகருதம்மாள் ஒலிவோன் முன் சென்றாள். ஒலிவோன் தன் ஆசையைக் கூற மரிகருதம்மாளோ அரசனிடம் அவன் கடமைகள் யாவை என்பனவற்றைக் கூறித் தானும் சர்வேசுவரன் நெறியில் ஒழுகுவதால் இது இயலாது என உரைக்கிறாள். ஒலி வோன் தன் மத நெறிகளிலிருந்து உன் நெறி பெரியதாமோ எனக் கூற அதற்கும் மரிகருதம்மாள் விரிவான பதிலுரைத்து தான் வணங்கும் பரம்பொருளாம் இறைவன் எவ்விதத்திலெல்லாம் மேன்மையானவன் என்பதையும் தெளிவுபட உரைக்கலுற்றாள்.

ஒலிவோன் மிகவும் சினந்தவனாய் எங்கள் மத நெறிகளை விடவும் எவ்விதத்தில் உன் மத நெறிகள் உயர்ந்தன எனக்கேட்கிறான். மரிகருதம்மாளும் இறைவனின் பத்து கட்டளைகளைக் கூறி இந்நெறியில் ஒழுகினால் மேன்மை அடைவர் எனவும் கூறுகிறாள். மேலும் அவள், ஒலி வோன் சார்ந்துள்ள மதத்தின் தெய்வங்கள்மீது உரைக்கப்படும் புராணக் கதைகளைக் கூறி அவற்றை இகழ்ந்தும் அம்மதத்து இறைவணக்க முறைகளைக் குறைகூறியும் உரைக்கிறாள்.

இவற்றைக் கேட்கலுற்ற ஒலிவோன் மிகுந்த சினங்கொண்டவனாய், மரிகருதாளை இகழ்ந்துரைத்து, சிறைக்காவலர்களை நோக்கி 'இவளைச் சிறைவைத்து' என் சொல்பேச்சைக் கேட்கும்வரை காவல் காத்திடுங்கள் என்கிறான் காவலர்களும் மரிகருதம்மாளைச் சிறை வைத்தனர். அவளும் சிறையினுள் இருந்து கொண்டு இறைவனை நோக்கித் தியானம் செய்யலாயினாள்

மரிகருதம்மாள் அரசனுக்குப் பணியாமையால் ஒலிவோன் மிகுந்த சினங் கொண்டவனாய் அவளை. உடலைத் துன்புறுத்தும் சக்கரத்தில் வைத்துக் கொடுமை செய்ய ஆணையிடுகிறான். உடலில் தசைகள் பிய்ந்து போகுமளவும் அவள் கொடுமை செய்யப்பட்ட நேரத்திலும் இறைவனை நோக்கி வேண்டுதல் செய்யவே அவள் உடல் வருத்தம் நீங்கப் பெறுகின்றாள்.

ஒலிவோன் பேய்க் கூட்டங்களை வரவழைத்து மரிகருதாளின் மனத்தை மாற்ற முயற்சி எடுக்கிறான் அவளும் தெயவத்தின் அருளால் உண்மையை உணர்ந்து, சிலுவை வரைந்து தெய்வத்தை வேண்டிப் பேய்களைத் தன்னிடத்து அண்டாது விரட்டினாள். ஒலிவோன் அதை அறிந்து மேலும் சினங்கொண்டான். அவன் சேவகர்களை அழைத்து அவளை இழுத்து வரக் கட்டளையிட்டான். அவள் ஒலிவோன் முன்னால் வரவும் பலவிதமாய் ஏசலுற்றான்; அவள் ஒழுகும நெறியினையும் குறை கூறினான். மரிகருதாளும் ஒலிவோனின் மதக் கோட்பாடுகளின் பொருந்தா நிலைகளைக் கூறலுற்றாள். தனக்கு எதிராகப் பேசுகிறாள் இவள் என்றும், கீழ்ப்படியாது இருக்கிறாள் என்றும் ஒலிவோன் அதிக சினம் கொள்ளலுற்றான். அவன் சேவகர்களை அழைத்து மரிகருதாள் உடம்பை நெருப்பால் சுட்டெரிக்கக் கூறினான். சேவகர்களும் அவ்விதமே செய்தனர். உடம்பெல்லாம் தீ எரிய அவளும் இறைவனை நோக்கி வேண்டல், செய்தாள். மரிகருதாள் படும் துன்பங்களைக் கண்ட பல பெண்கள் மிகவும் வருந்தினர். மரிகருதாளும் துன்பத்தைத் தாங்கியவளாய் மன்னன் ஒலிவோனிடம் நீ எனக்குச் செய்யும் செயல்கள் பாதகமானவை என்பதை எடுத்துரைக்கிறாள்.

ஒலிவோன் இவள் மமதை இன்னும் அடங்கவில்லை என மேலும் சினங் கொண்டவனாய் மிக குளிர்ந்த நீர் உள்ள கொப்பரையில் இப்பெண்ணை அமிழ்த்திடுங்கள் என்றுரைத்தான். சேவகர்களும் அவ்விதமே செய்தனர். ஆனால் மரிகருதாளோ உடலெங்கும் சோதி பிரகாசிக்க எழுந்திருந்தாள். பலரும் மரிகருதாளின் மேன்மை கண்டு அவளைப் பின்பற்றத் தொடங்கினர்.

மரிகருதாள் இனியும் உயிருடன் இருப்பது சரியல்ல என ஒலிவோன் நினைத்தான். அதன்படி சேவகர்களை அழைத்து மரிகருதாள் தலையையும் அவளைப் பின்பற்றும் பெண்களின் தலையையும் வெட்டியெறிய ஆணையிட்டான். சேவகர்கள் அவ்விதமே மரிகருதாளை வெட்டுமுன் ஏனைய பெண்களை வெட்டிக் கொன்றனர்.

மரிகருதாள் இறுதியில் சேவகர்களால் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டாள். அவள் அவ்விடத்தில் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்தாள். அவ்விதம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் பொழுதே கொலையாளிகள் அவளை வெட்டிக் கொன்றனர்.

மோட்ச லோகத்தில் பல விதமான மங்கல ஓசைகள் முழங்க, அவ்விடத்து உள்ள அனைவரும் அவளை வரவேற்க மரிகருதாளும் தூயவளாய் அங்கிருந்தாள். அவள் உடம்பை இவ்வுலகத்தோரும் "நேசித்துப் போற்றிசெய்து" பாதுகாத்தார்கள்.

நூலில் காணப்படும் கதை வேறுபாடுகள்

உலகம் முழுமையும் மரிகருதம்மாள் கதை வழக்கில் உள்ளதைச் சில கிறித்துவக் களஞ்சியங்கள் தெளிவு படுத்துகின்றன. இவை ஏறத்தாழ தமிழில் உள்ள **அடியார் வரலாறு**, **அர்ச்சியசிஷ்டர்களின் வரலாறு** ஆகியவற்றோடும், நூல் ஆய்வுக்குரிய அம்மானைக் கதையோடும் பெரும்பாலும் ஒத்தே செல்கின்றன. நாட்டின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒரு சில கதை வேறுபாடுகளை மட்டும் காணமுடிகிறது.

New Catholic Encyclopaedia (Vol.IX) என்னும் நூலில் மரிகருதம்மாள் மகப்பேறு நலமுடன் நடைபெற மக்களால் வணங்கப்படும் ஒரு புனிதையாகக் காணப்படுகின்றாள்.[25] மிகச் சிலரால் மரிகருதம்மாளின் உண்மை சரித்திரத்தின்மீது அதே நகரில் வாழ்ந்து தன் கற்பினைக் காத்துக் கொள்வதற்காக உயிர்துறந்த Margaret என்ற பெண்ணின் கதை ஏற்றிக் கூறப்பட்டது.[26] இதனால் பல கதை வேறுபாடுகள் உருவாகின

---

25. Editorial staff, *New Catholic Encyclopaedia (Vol. IX)*, p. 199.

26. "St. Ambrose (PL 16:241, 1093) and St. John Chrysostom (PG 50:579-585) knew of the historical Margaret, or Pelagia, a 15-year-old virgin of Antioch who preserved her chastity from violation by jumping off a building. Mistakenly identified with this Margaret, of Antioch was an actress, also known us Margaret, or Pelagia, who left a dissolute life to become a Christian penitent", I bid., p. 200.

அண்டீற்கு அடிகளார் எழுதிய **அடியார் வரலாறு** என்னும் நூலும் Robert Appletion Companyயினரால் வெளியிடப்பெற்ற *The Catholic Encyclopaedia Vol. I* என்னும் நூலும் முறையே வெளியிட்ட மரிகருதம்மாள் வரலாற்றுப் பகுதிகள் ஏறத்தாழ ஒப்புமை உடையனவாகக் காணப்படுகின்றன. *The Catholic Encyclopaedia Vol. I* இல் 'மரிகருதம்மாள் Margaret' என்றும் 'Marina' என்றும் அழைக்கப்படுகிறாள். அந்தியோக்கிய நகரம் Antioch என அழைக்கப்படுகிறது. ஒலிவோன் மன்னன் Olybrius என்ற பெயரால் அழைக்கப்படுகிறான்.[27]

அர்ச், மரிகருதம்மாள் அம்மானையின் சிறப்பு

பிற அம்மானைக் கதைப்பாடல்களோடு நோக்க இந்நூல் பல பதிப்புகளைத் தமிழகத்தில் வெவ்வேறு இடங்களில் 19ஆம் நூற்றாண்டு முதற்கொண்டே கண்டுள்ளது. பிற நாட்டு வரலாற்றுக் கருவை அடிப்படியாகக் கொண்ட ஒரு வரலாற்று நிகழ்வு, பண்பாட்டுப் பின்னணிகளில் அயன்மைப்பட்டுத் திகழும் தமிழக நிலச் சூழலில் எவ்விதம் மக்கள் மனம் கவர்ந்த ஒரு கதைப்பாடலாகப் பரிணமித்தது என்பதும் சிந்திக்கத் தக்க ஒன்றாகும்.

நூலில் இடம்பெறும் பாத்திரங்கள், இடங்களின் பெயர் அமைவு முறை

அர்ச். மரிகருதம்மாள் அம்மானையில் வரும் பெயர்கள், கதைச் சூழல்கள், பண்பாட்டுப் போராட்டங்கள் ஆகியன தமிழ் மக்கள் மனம் ஒன்றிப்போகும் நிலையில், பல தளங்களில் ஆசிரியரால் மிகக் கவனமுறச் செய்யப்பட்டுள்ளமையை நூல் முழுவதும் காண முடிகிறது. ஆசியா மைனரைச் சார்ந்த கதை நிகழ்வுகள் தமிழ் நாட்டின் பின்புலத்தில் நயம்படக் கொணரப்பட்டுள்ளது மரிகருதம்மாள், தேயோதேசி, ஒலிவோன், அந்தியோக்கிய பட்டணம் என்னும் பெயர்கள் தமிழ் மொழிக்கு ஏற்ப பொருத்தமுற மாற்றப்பட்டுள்ளன.

ஒலிவோனின் குணம்

ஒலிவோன் என்னும் அந்தியோக்கிய நாட்டு மன்னன் தமிழ் நாட்டில் அரசாண்ட ஒரு பண்பாடற்ற அரசன் போல இந்நூலாசிரியரால் காட்டப்படுகிறான்.

"அந்தியோக் கியநகரில் அரசுவொலி வோருமன்னன்
மந்தமுறும் புத்தியில்லான் மாபாவி செய்நடத்தை
கேளும் பிசாசுவுக்குக் கீர்த்திபெற வேணுமென்று
நீளும் பெருமையுட நேசமாய்த் தேரோட்டம்
தேரோட்டம் பூசையுடன் தெருவீதி யில்நடக்க
பாராட்டி மோகவிதம் பலஸ்திரீகள் கூத்தாட" (4 . 73-78)

என்னும் அடிகள் தமிழ் நாட்டில் அடிக்கடி காணக் கிடைக்கும் திருவிழாக்கள், தேரோட்டங்கள்,

---

27. *The Catholic Encyclopaedia Vol. I.*

சிறுபூசைகள் ஆகியவற்றைக் கூறுதலோடு, இந்து மதச் சடங்குகளிலும், கலாச்சாரக் கூறுகளிலும் ஒலிவோன் என்னும் மன்னன் கொண்டிருக்கும் நம்பிக்கையினையும் உணர்த்துகின்றன. 'மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழி' என்ற முதுமொழிக்கு ஏற்ப ஒலிவோன் மன்னன் ஆட்சியில் மக்களும் பல தெய்வ வணக்க நெறிமுறைகளையே கடைபிடித்தனர் என்பதை ஆசிரியர் பல இடங்களிலும் சுட்டிச் செல்கின்றார். மரிகருதம்மாளின் தந்தையாகிய தேயோதேசி என்பானே ஒரு வைதீக மதத்தின் பிரதிநிதியாகக் காட்டப்படுகின்றான். அவன் தன் மகள் வைதீக சமயத்தை வெறுத்துப் பேசுவதைக் கேட்டு,

"பண்ணரிய நம்முடைய பலசமய சாஸ்திரத்தை
எண்ணாமல் தட்டுகிறா ளென்றுசொல்லி யேசலித்து
என்றுபுரா ணங்களோடு மிசைந்ததொரு நால்வேதம்
ஒன்றுபட சாஸ்திரத்தை ஓதவேதான் தட்டுகிறாள்." (6 . 37-40)

என மனம் வருந்துவதாக ஆசிரியர் காட்டுகிறார்.

தமிழகச் சமய இலக்கியங்களின் போக்கு

மேலும், தர்க்க ரீதியாகத் தத்தம் சமயக் கொள்கைகளைக் கூறுவது, அதற்காக இருவர் வாதிடுவது என்பன போன்ற செய்திகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தொடர்ச்சியாகக் காலங்காலமாக வரும் ஒன்று என்பதாலும் இவ்வம்மானைப் பாடலில் வரும் சமயங்கள் தொடர்பான கருத்து மோதல்கள் படிப்போருக்கு ஏற்றுக் கொள்ளும் தன்மையிலேயே அமைந்து விடுகின்றன. மேலும், தர்க்க ரீதியாகச் சொல்லப்படும் பல கருத்துக்கள் மக்கள் அனைவருக்கும் புரியும் செய்திகளாக எளிமைப் படுத்தப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

அர்ச். மரிகருதம்மாள் அம்மானை - மணிமேகலை ஓர் ஒப்பீடு

மரிகருதம்மாளை ஒலிவோன் மன்னன் விரும்புவதும், அதற்கு அவளின் மறுப்புரைகளும் ஓரளவு **மணிமேகலை** காப்பியத்தில் வரும் உதயகுமரன் - மணிமேகலை ஆகிய இருவருக்கும் இடையில் நிகழும் சில நிகழ்ச்சிகளோடு ஒத்துப் போவதையும் காணமுடிகிறது. மலர் வனத்துள் சுதமதியோடு சென்ற மணிமேகலையைக் கண்டு உதயகுமரன் காமுறுவது, ஆடுகளை மேய்த்துக் கொண்டு நிற்கும் மரிகருதாளைப் பார்த்து ஒலிவோன் காமுறுவதற்கு ஒப்பாகக் காணப்படுகிறது. இங்கு உதயகுமரனும் ஒலிவோனும் நகர்வலம் வரும் வழியிலேயே தாங்கள் விரும்பும் பெண்களைச் சந்திப்பதாக நூல் ஆசிரியர்கள் கூறுவனவும் குறிப்பிடுவதற்குரியன.

இந்த அம்மானை நூலினுள் மரிகருதம்மாள் தன் மனநிலையை நேரடியாகத் தன்னை விரும்பும் ஒலிவோன் மன்னனிடம் உரைக்கின்றாள். மேலும் அரசன் என்பானின் கடமைகளையும் கீழ்க்காணும் வரிகளில் நயம்படக் கூறுகின்றாள்:

"வரிசைசெறி மன்னவனே வாள்வேந்தே நீர்கேளும்
உன்னுடைய ராச்சியத்தி லுனதுகுடி யானவர்கள்
மன்னவனே யுந்தனுக்கு மக்களல்லோ நாங்களெல்லாம்" (8 . 122-124)

என்று கூறும் மரிகருதம்மாள், மேலும்,

"கன்னிமட மாதருட கற்புடமை காக்கிறதும்
நன்றிதமாய்ப் பார்த்து நடத்துவதுன் கீர்த்தியல்லோ" (8 . 129-130)

என்றும் 'வேலியே பயிரை மேய்தல்' என்பது எவ்வளவு இழிசெயல் என்றும் உணர்த்துகிறாள். ஆயின், **மணிமேகலை** காப்பியத்தில் மணிமேகலைக்குப் பதிலாக அவளின் தோழி சுதமதி, மன்னன் உதயகுமரனுக்கு அறிவுரை கூறுவதாகப் பாடல் அமைகிறது. சுதமதியும் மேற்படிக் கருத்தையே பிறிதொரு கோணத்தில் கூறுகிறாள்.

"இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய வுரவோன் மருகற்
கறிவுஞ் சால்பு மரசியல் வழக்கும்
செறிவளை மகளிர் செப்பலு முண்டோ"

எனச் சுதமதி நயம்பட மன்னனை இகழ்ந்துரைத்தலோடு யாக்கை நிலையாமையையும் கூறுகிறாள்.[28] மேலும் மணிமேகலை காப்பியமும், 1876ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பெற்ற **மரிகருதம்மாள் அம்மானை**யும் காப்பியப் பாங்கில் கதையைக் காதைகளாகப் பிரித்துக் கொண்டு சொல்லும் முறையில் ஒத்த தன்மையுடையவனாகக் காணப்படுகின்றன.

மரிகருதாள் – திருநாவுக்கரசர் ஓர் ஒப்பீடு

ஒலிவோன் என்னும் மன்னன் மரிகருதாளுக்கு இழைக்கும் பல வகையான துன்பங்களும், அவற்றைப் அப்புனிதை எதிர்கொள்ளும் விதமும் இவண் திருநாவுக்கரசர் சமணர்களால் துன்பப்படுத்தப்படும் பொழுது அவற்றை அவர் எதிர்கொள்ளுவதற்கு இணையானவையும் ஒப்புமையானவையுமாகத் திகழ்கின்றன இங்கு இருவரும் மதம் மாறிய நிலையில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் அவரவர்கள் வணங்கும் தெய்வங்களாலேயே நிவர்த்தி செய்யப்படுவதாக முறையே இவ்வம்மானையிலிருந்தும் **பெரிய புராணத்**திலிருந்தும் அறிந்து கொள்ள முடிகின்றது

மரிகருதம்மாள், தன் மனைவியாக மாற மறுத்தமையாலும், தன் மதத்தைக் கேலி செய்தமையாலும் ஒலிவோன் என்கிற மன்னனால் உடல் தசைகள் சிதையும்படி சக்கரத்தில் வைத்து அழுத்தப்படுதல், நெருப்பால் சுடப்படுதல், குளிர்ந்த நீரில் முழுக வைத்தல் போன்ற

28 உ வே சாமிநாதையர் (பதி), **மணிமேகலை**, பக். 51-52

பல நிலைகளில் துன்பப்படுத்தப் படுகிறாள். இந்த நேரங்களிலெல்லாம் அவள், தான் வணங்கும் இறைவனைத் துதித்தலின் மூலமாக அருள்பெறப் பெற்றுத் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுகிறாள்.

திருநாவுக்கரசின் வாழ்வில் நடந்த பல சம்பவங்கள் இச்செயல்களோடு பெரிதும் பொருந்துகின்றன. சமணர்கள் திருநாவுக்கரசரைத் திருநீற்றறையில் இட்டுத் துன்புறுத்தியது; திருநாவுக்கரசரின் உடலைக் கல்லினோடு கயிற்றால் கட்டிக் கடலிடையே எறிந்தது; யானையைக் கொண்டு அவரின் தலையை இடற நினைந்து தோல்வி அடைந்தது ஆகியன மரிகருதம்மாள் - திருநாவுக்கரசர் இருவோருக்கும் இடையே உள்ள ஒப்புமைகளாகும்.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்"[29]

எனத் திருநாவுக்கரசர் கூறுவது போல, மரிகருதம்மாளும் தன்னைக் கொடுமைப்படுத்தும் ஒலி வோன் மன்னனுக்குப் பதிலுரையாக,

"ஆரென்று யென்னை யதட்டிப் பதட்டுகிறீர்
சீர்கொண்ட யேகன் திருமகள்நான் கண்டறீவீர்" (18-108,109)

எனக் கூறும் வரிகள் ஒப்பிடுதற்குரியன.

இறைத்துதிப் பாடல்களின் அமைப்பு

சர்வேசுவரனாம் பரம்பொருளைத் துதிக்கும் பல்வேறு இடங்களில் காணப்படும் பாடல்கள் எளிய சந்த அமைப்பில் திகழ்வதும் இவண் நோக்கத் தக்கது. **தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பாடல்கள், தாயுமானவ சுவாமிகளின் பாடல்கள், திருவருட்பா** எனத் தொடரும் தமிழகத்துப் பக்தி இயக்க காலந்தொட்டு 19ஆம் நூற்றாண்டு ஈறாக உள்ள 'பக்தி இலக்கியங்கள்' எவ்விதம் இறைவனை நெக்குருகிப் பாடிப் பரவுகின்றனவோ அவற்றைப் போலவே இந்நூலுள்ளும் பலவிடத்தும் மரிகருதம்மாள் சர்வேசுவரனைத் துதிக்கும் பாடல்கள் அமைந்துள்ளன.

சந்நியாசியும் மகோதரனும்

மரிகருதம்மாள் இறைவனது மகளாகத் தன்னைப் பிரகடனப்படுத்தியதோடு மட்டுமன்றி ஒலி வோனின் பலவிதக் கொடுமைகளையும் தாங்கும் வல்லமையுள்ளவளாய்க் காணப்படுகிறாள். ஆகவே, மன்னனின் சார்பில் ஒரு பேயானது சந்நியாசியின் வேடத்தைப் பூண்டு, அவளின் வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டது போல் நடித்து, பலபட பேசி இறுதியில் "நீதான் ஒலிவோனை மணப்பினும் சர்வேசுவரனார் உன்னைப் பொறுப்பார்" என்றது. இதனை இறையின் வலிமையால் மரிகருதம்மாள் உணர்ந்து அதனை விரட்டியடித்தாள்.

---

29 அப்பர் தேவாரம் - மறுமாற்றத் திருத்தாண்டகம், பா 1.

இங்கு, மேற்கூறிய சம்பவத்தோடு **கம்பராமாயணம் - யுத்தகாண்டத்தில்,** இராவணனின் மந்திரியாகிய மகோதரன், ஜனகனின் உருவத்தை எடுத்துக் கொண்டு சீதையின் மனத்தை மாற்ற உரைக்கும் உரைகள் நினைவிற் கொள்ளத் தக்கன. சீதையும், மரிகருதம்மாளும் தங்கள் தூய்மை நடத்தையால் மாயையின், பொய்மைத் தன்மைகளை உணர்வதும், தங்கள் ஆன்ம வலிமையால் முறையே மகோதரனையும், பேயினையும் வெல்வதும் சுட்டத் தக்கன.

புனிதையர் வரலாறு கூறும் அம்மானைப் பாடல்களின் கதை ஒற்றுமை

இவ்விதம் பல நிலைகளில் இவ்வம்மானைக் கதைப்பாடல் தனக்கு முற்பட்ட இலக்கியச் சூழல்களோடு நெருங்கிய உறவுநிலைகளைக் கொண்டதோடு மட்டுமின்றி, மரிகருதம்மாளைப் போன்றே வாழ்ந்திறந்த அகினேச கன்னி, அர்ச் பார்பரம்மாள், ஆகியோரைப் பற்றிப் பாடிய சககாலத்துக் கிறித்துவ அம்மானைகளோடும் பெரிய அளவில் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. அவ்வகையில் வீரமாமுனிவரால் பாடப்பெற்ற **கித்தேரியம்மாள் அம்மானை** என்ற நூலும், பெயர் அறியப் பெறாத புலவர்கள்ால் பாடப்பெற்ற **அகினேசகன்னி அம்மானை** என்ற நூலும், ஏ.ஆ. தெய்வ சகாயம் என்பவரால் பாடப்பெற்ற **அர்ச். பார்பரம்மாள் அம்மானை** என்ற நூலும் ஒப்பிடத்தக்கன.

அர்ச். கித்தேரியம்மாள் அம்மானை - கதைச் சுருக்கம்

போர்த்துக்கல் நாட்டில் பிராகம் பகுதியை ஆட்சி செய்த காயன் என்னும் மன்னன் மகளாய்ப் பிறந்த கித்தேரியின் தாய், தனக்கு ஒரே சூலில் கித்தேரியோடு சேர்த்து ஒன்பது பெண் குழந்தைகள் பிறந்தமையால் அனைவரையும் கொன்றுவிட தன் தோழியிடம் கொடுத்தாள். அவள் அனைத்துக் குழந்தைகளையும் அந்நகர ஆயரிடம் ஒப்படைக்க, அவர் அனைவருக்கும் திருமுழுக்கு செய்துவித்து வளர்த்தாள். கன்னிப் பருவமடைந்த இப்பெண்களைக் காணும் அருமறை முனிவர் ஒருவர் இவர்களுக்கு "வேதாகம மகிமைகளின் நுட்பத்தைக்" கூறக் கித்தேரி உள்ளிட்ட பெண்கள் யாவரும் அருமறையைப் பரப்பினர். தன் நாட்டு மதத்திற்கு எதிராகப் பிரச்சாரம செய்யும் இப்பெண்களைத் தன் மக்கள் என்பதறிந்தும் காயன் சிறையிலிட அவர்கள் வான தூதரின் அருளால் விடுவிக்கப்பட்டனர். அவள் புரோசன் என்னும் பக்கத்து நாட்டு மன்னனிடம் சென்று அவனை நல்வழிப்படுத்தி அவன் மூலம் அருமறையைப் பரவச் செய்தாள். காயன் தன் மகள கித்தேரியைப் பரிபாலன் என்ற நாட்டரசனுக்கு மணம் முடித்து வைத்து அதன்மூலம் அவள் மனத்தை மாற்ற விரும்பினான். இம்முயற்சியும் தோல்வி அடையவே கித்தேரியும் அவள் தோழியா முப்பது போர்களுமாகப் பொம்பேரு மலையில் வைத்துத் தலைதுண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர் கித்தேரி வானுலகம் அடைந்தாள்.

இரு அம்மானைகளுக்கிடையிலான ஒப்புமைக் கூறுகள்

அர்ச். மரிகருதம்மாள், அர்ச் கித்தேரியம்மாள் ஆகிய இருவரும் கன்னிகளாகவே வாழ்ந்து அருமறைத் தொண்டு செய்தமை, தத்தம் தந்தையர்களால் வெறுக்கப்பட்டமை, இருவரையும் முறையே திருமணம் செய்துகொள்ள நாட்டு அரசர்களால் விரும்பப்படுதல், சிறையில்

துன்பங்களை எதிர்கொண்டமை ஆகியன இவண் ஒற்றுமைக் கூறுகளாக உள்ளன. மேலும், இருவரும் தலைவெட்டப்பட்டு மரணம் அடைந்து புனிதைகளாக ஆகியதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அகினேச கன்னி அம்மானை - கதைச் சுருக்கம்

அகினேச கன்னி அம்மானையில், அகினேசாள் ரோம் நாட்டில் பிறந்து, தன்னைச் சர்வேசுவரனுக்கு அர்ப்பணித்து வாழ்ந்து வருகிறாள். அவ்வேளையில் ஒரு நாள் நகர்வலம் வரும் மன்னன் வலேந்திரியான் என்பவன் அகினேசாளை விரும்ப, அவள் மறுக்க, மன்னனால் பலவிதக் கொடுமைகள் அவளுக்கு இழைக்கப்படுகின்றன. தன் ஆசைக்கு இணங்காத அப்பெண்ணைத் துகிலுரிந்தும், வேசியர் குடியிருப்பில் அமர்த்தி அவமானப்படுத்தியும் இன்னும் பலவிதத்திலும் கொடுமைகள் செய்கின்றான் இறுதியில் மன்னன், அவள் தலையை வெட்டிட ஆணையிட அவள் மரணம் அடைகின்றாள். வானவர்கள் வரவேற்க அக்கினேசு கன்னியானவள்,

"என்று மிருக்கும் இறைவன் பிதாச்சுதனார்
பாராட்டி யேதமது பக்க மதிலிருத்த"[30]

இறைவாழ்வு அடைகின்றாள்.

இரு அம்மானைகளுக்கிடையிலான ஒப்புமைக் கூறுகள்

இங்கு அக்கினேசு, மரிகருதம்மாள் இருவரும் கன்னிகளாக இருந்தமை, மதம் மாறி சர்வேசுவரனுடைய குழந்தைகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்துவது, தங்கள் நாட்டு மன்னர்களால் விரும்பபப்படுவது, பலவகைத் தண்டனைகளுக்கு உள்ளாவது, தலை வெட்டப்பட்டு பூமியில் மரணம் அடைந்து சர்வேஸ்வரன் அருகில் அமரும் புனித வாய்ப்பைப் பெறுவது என்கிற நிலைகளில் இரு அம்மானைகளும் பல ஒற்றுமைக் கூறுகளுடன் திகழ்வது குறிப்பிடற்குரியது.

அர்ச். பார்பரம்மாள் அம்மானைக் கதைச் சுருக்கம்

அக்கினேச கன்னி அம்மானையைப் போன்றே **அர்ச். பார்பரம்மாள் அம்மானையும்** மரிகருதம்மாள் அம்மானையுடன் பல விதங்களில் ஒப்புமைக் கூறுகளால் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

நிக்கோமிதியா நாட்டில் தியாஸ்கோர் என்பானைத் தந்தையாகப் பெற்ற பார்பரம்மாள் என்பாள் ஆத்மஞானி என்னும் போதகரால் உபதேசிக்கப்பட்டு இந்து மதத்திலிருந்து கிறித்துவ

30. ஆ.பி. அந்தோனி இராசு (பதி), **அக்கினேச கன்னி அம்மானை**, கண் 578-79.

மதம் தழுவுகிறாள். தந்தை இதனால் மிகுந்த சினங் கொண்டவனாய் அவளைத் தாய்மதம் திரும்ப புத்திமதிகள் கூறும்படி பித்தினியா நாட்டு மன்னன் மகிசியன் என்பவனிடம் அனுப்புகிறான். மகிசியன் பலவிதமாகப் புத்திமதிகள் கூறியும் அவள் மனம் மாறாது இருந்தாள். இதனால் மிகுந்த சினங்கொண்ட மன்னன் அவளைத் தெரப்பை வேலன் என்ற ஏவலாள்மூலம் முள்ளில் புரட்டி எடுத்தும், உடம்பைத் தீ பந்தத்தினால் சுட்டும், துரடுகளால் விலாவைப் பிடுங்கியும் கொடுமைப்படுத்தினான். இறை அருளால் பார்பரம்மாள் மனம் மாறாது இருக்கவே மன்னன் அவளை, அவள் தந்தையிடமே அனுப்பி வைத்தான். தந்தை மிகுந்த சினங்கொண்டவனாய்த் தன் மகளெனவும் பாராமல் பார்பரம்மாளை நிர்வாணப் படுத்தி அவமானப்படுத்த முயல இறை அருளால் அவளுக்கு ஆடை வளர்ந்தது இறுதியில் அவள் தலையை வெட்டிட ஆணை பிறப்பித்தான். இதனை,

"உருவிய வாளாலே ஒரேவெட்டாய் வெட்டினானே
கருங்குழல் சிரம்வேறு கனத்தஉடலும் வேறாய்"

என்னும் அடிகள் காட்டுகின்றன.[31] அவள் தேவர்களால் வணங்கப்பட்டு புனித நிலையை அடைகிறாள்.

இரு அம்மானைகளுக்கிடையிலான ஒப்புமைக் கூறுகள்

மரிகருதம்மாள், பார்பரம்மாள் இருவரும் வைதீக மதத்தில் பிறத்தல், நெருங்கிய உறவினர், நண்பர் ஆகியோரால் உபதேசிக்கப்பட்டு வேத நெறியில் ஒழுகுதல், தத்தம் தந்தையர்களால் தாய்மதம் திரும்பும்படி வற்புறுத்தப்படுதல், இறுதியில் மன்னர்களால் கொடுமைப்படுத்தப்படுதல், தலை துண்டிககப்பட்டு மரணம் அடைதல், தூய்மை பெற்றவர்களாய்த் தேவலோகம் புகுதல் ஆகிய நிலைகளில ஒப்புமை உடையவர்களாய்க் காணப்படுவது குறிப்பிடுவதற்குரியது.

பேய்களை ஓட்டும் கதைப்பாடல்

இவ்விதம் புனிதையர்கள் பற்றி எழுந்த சில அம்மானைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டும், பிறவற்றோடு பொதுநிலையில், சில கூறுகளில் தொடர்பு கொண்டும் காணப்படும் இவ் வம்மானைக் கதைப்பாடல் தனிப்பட்ட நிலையிலும் பல சிறப்புகளைக் கொண்டு திகழ்வது சுட்டுவதற்குரியது.

பல பதிப்புகளைக் கண்ட இவ் வம்மானை ஆ.பி. அந்தோனி இராசு என்பவரால் பதிப்பிக்கபபட்ட பொழுது "பேயகளை ஓட்டும் பேறுபெற்ற அர்ச். மரிகருதம்மாள் அம்மானை" என்கிற தலைப்பில் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும்.. அண்டிறீக்கு அடிகளார் எழுதிய நூலில் மரிகருதம்மாள் மனத்தை மாற்ற ஒலிவோனால் அனுப்பப்பட்ட

31 ஆ.பி. அந்தோனி இராசு (பதி), **அர்ச். பார்பரம்மாள் அம்மானை**, க. 1517.

பேய் ஒன்று அவளை அணுக, இறையருளால் அவள் அதைப் பேய் என உணர்கிறாள். மரிகருதம்மாள் அப்பேயை வென்று, தன் காலடியில் போட்டு மிதித்து விரட்டி அனுப்புகின்றாள். இதை அடிகளார் தம் உரைநடையில், "வந்தவனைப் பேயென்று அறிந்து அந்தப் பேயுடைய தலைமயிரைப் பிடித்து நிலத்திலே போட்டு மிதித்துக் கொண்டு பேயோடே, மேதையுள்ள பேயே, பெண்சாதி காலில் கீழேகிட என்று சொன்னாள். . .. பிறகு மரிகருதம்மாள் பேயைச் சவட்டி நிற்கிற காலை வாங்கினாள் வாங்கினவுடனே பேய் புகைபோலே மறைந்து போச்சு" எனக் கூறுவது இவ்விடத்தில் நினைக்கத் தக்கது.[32] **அர்ச்சியசிஷ்டர்களின் சரித்திரம்** என்கிற நூல் பாம்பு ஒன்று பேய் வடிவம் எடுத்து மரிகருதம்மாளை அணுகியதாகக் கூறுகிறது.[33]

இவ் வம்மானைக் கதைப்பாடலிலும் பேய்களின் வருகை, அவற்றின் வருணனை, மரிகருதம்மாளுக்கும் பேயினுக்கும் இடையே நடக்கும் உரையாடல்கள், பேயின் அக்கிரமங்களை இறைவன் அருளால் வெல்லுதல் என்பன போன்ற பரந்த தளத்தில் பேய்கள் குறித்த செய்திகள் சுமார் 300 வரிகளில் கூறப்படுகின்றன. மேலும், கிறித்துவ அம்மானைகளில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற ஆ.பி. அந்தோனி இராசு என்பார் ஆசியவியல் நிறுவனத்திற்கு எழுதிய கடிதம் ஒன்றில் "பேய்களை விரட்டுவதற்கு வாய்மொழிப் பாடலாக இந்த அம்மானையை விழுப்புரம் மாவட்டம் - கள்ளக்குறிச்சி வட்டத்திலும், பெரம்பலூர் மாவட்டம் - ஜெயங்கொண்டம் வட்டத்திலும் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிவேன்[34] எனக் கூறுகிறார் இது கிறித்துவ மதத்தாருள் ஒரு பிரிவினர் இக்கதைப் பாடலைப் பேய் விரட்டுப் பாடலாகவும் பயன்படுத்துகின்றனர் என்பதைப் புலப்படுத்தும். மேலும் இந்நூலினைப் பதிப்பித்த அவர் அதற்குத் தந்த பதிப்புரையின் ஓரிடத்தில், "இந்நூலைப் படித்ததாலும் படிக்கக் கேட்டதாலும் பேய்த் தொல்லைகள் நீங்கிய நிகழ்ச்சிகள் இரண்டைச் சேசு சபையாரின் 1653ஆம் ஆண்டுக் கடிதம் கூறுகிறது. அந்நிகழ்ச்சிகள் தஞ்சைக்கு அருகிலிருந்த மீன்குடியிலும் அதனையடுத்த சிற்றூரிலும் நிகழ்ந்திருக்கின்றன" எனக் குறிப்பிடுகின்றார்.[35] முழுமையாகச் செய்யப்பெறும் களஆய்வுப் பணிகள் மூலம் இந்நூலின் பயன்பாடு குறித்து மேலும் பல செய்திகள் கிடைக்கக்கூடும்.

நூலில் காணப்படும் இலக்கியச் சிறப்புகள்

ஓர் எளிய அம்மானைக் கதைப்பாடலாக இருந்த பொழுதிலுங் கூட இந்நூல் சிறந்த இலக்கியமாக வைத்துப் பேசப்படுவதற்கான தகுதிகளையும் கொண்டு விளங்குவது குறிப்பிடுவதற்குரியது.

---

32. இராச மாணிக்கம், **'அடியார் வரலாறு'**, பக். 220-221.

33 ரொஸசியென்னுஞ் சின்ன சவேரியார், **'அர்ச்சிய சிஷ்டர்களின் சரித்திரம்'** 3-ஆம் காண்டம், ப. 93

34 ஆசியவியல் நிறுவன இயக்குநர் டாக்டர் ஜி ஜான் சாமுவேல் அவர்களுக்கு டாக்டர் ஆ.பி. அந்தோனி இராசு அவர்கள் 15-8-1997 ஆம் தியதியிட்டு எழுதிய கடிதம்

35. ஆ.பி. அந்தோனி இராசு (பதி). **அர்ச். மரிகருத்தம்மாள் அம்மானை**, ப. vii.

உவமைகள்

ஒலிவோன் மன்னன் ஏவலாளர்கள் மூலம் கிறித்துவ மார்க்கத்தில் சேர்ந்துவிட்டவர்களின் தலையை வெட்டிவிட ஆணைபிறப்பிக்க அதனால் மக்கள் தலைகள் வெட்டுப்பட்டதைச் சிறந்த 'உவமை' மூலம் காட்டுகிறார் ஆசிரியர். அவ்வரிகள்,

"சிங்கம் சினந்துகொண்டு செம்மறியைக் கொல்வதுபோல்
அங்கம் பிளந்துருக அனைவோர் தலைகளெல்லாம்" (42 . 36&37)

என அமைகின்றன. மேலும், அரசனது சினத்தை ஓரிடத்தில்,

"என்றுவொலி வோருமன்னர் ரத்தின மணியதுபோல்
துன்றுஞ் சினப்புலிபோல் சொல்லரிய கோபமுடன்" (16 . 5&6)

எனக் கூறுகிறார். ஆசிரியர் பிறிதொரு இடத்தில், பேய்களின் ஓட்டத்தை நகைச்சுவை உணர்வு ததும்பும்படியாக,

"கிண்டிநிலத்தைப் புரண்டிக் கிழட்டுநரி போலழுது
கரடிபுலிகள் சிம்பங் கதறுவது போல்கதறிக்
குறடு பெருத்த பெருயானைக் குரலதுபோல்
அபயமிட்டு நாய்நரிகள் அபையத்தா லூளைவிட்டு" (20 . 26-29)

ஓடியதாகக் குறிப்பிடுகிறார். மற்றுமொரு இடத்தில்,

"சூரிய னொன்றுஞ் சுடர்வீசி யேஎழுந்து
பாருலகிலே யிருளைப் பருதியறுத் திடுமாம்
ஒருசூரி யன்தான் உலகில் இருட்டறுக்கக்
கருதிநட் சத்திரத்தைக் கதிரோடி யேமறைத்து
நின்றதொரு வாறதுபோல் நீதிசரு வேசுவரனார்" (14 . 133-137)

என சருவேசுவனைச் சூரியனுக்கும் பிற தெய்வங்களை நட்சத்திரத்திற்கும் உவமைப் படுத்துகிறார்.

உருவகம்

'உருவக அணி' இந்நூலில் ஓரிடத்தில் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. சர்வேஸ்வரன் எவவளவு மேன்மையானர் என்பதை நூலாசிரியர் உருவகம் வழியாக விளக்குகிறார்.

"அந்திரத்தி லண்டமிசை யாகாச மண்டலத்தில்
சந்திரநட் சத்திரஞ் சுடரா லிருட்டறுமோ
எல்லாநட் சத்திரங்கள் இசைந்துஒளிர் விட்டாலும்
வல்லாண்மை உண்டோசொல் மண்ணி லிருட்டறுக்க". (14 . 123-126)

என்னும் இவ்வடிகள் சர்வேசுவரன் ஒழிந்த பிற தெய்வங்கள் நட்சத்திரங்களுக்குச் இணையானவை எனக கூறுகின்றன. மேலும், கிருபைக் கடல், கருணை வாருதி போன்ற சிறுசிறு உருவகங்களும் இடையிடையே கையாளப் பட்டுள்ளன

'வருபொருள் உரைக்கும்' காப்பியப் பண்பு

காப்பிய மரபினைப் பின்பற்றிக் கதையின் தொடக்கத்திலேயே நாட்டு வருணனையினையும், நகர வருணனையினையும் அமைக்கிறார் ஆசிரியர். மேலும் தண்டி ஆசிரியர் கூறும் 'வருபொருளுரைத்தல்' என்கிற மரபிற்கு ஏற்ப இவ்வம்மானையின் மூன்றாம் பாடலில் செய்திகள் தரப்படுகின்றன. இம்மரபு 'காப்பிய மரபாக' மட்டுமன்றிக் 'கதைப்பாடல் மரபாகவும்' திகழ்வது இவ்விடத்தில் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

சொல்லாட்சி

பக்தியின் கூறே மையமாக இருந்த பொழுதிலுங்கூட, படிக்கின்ற பொழுதே இவை **ஆழ்வார் பாடல்கள்,** இவை **நாயன்மார் பாடல்கள்** எனப் பிரித்தறியும் நிலையில் அக்காலத்திருந்தே மரபுவழிப் பட்டு நமது பக்திப் பாடல்கள் சைவ, வைணவர்களுக்காக இயற்றப்பட்டமை போலவே இந்நூலும் படிக்கும்பொழுதே இதுவொரு கிறித்துவப் பாடல் என்று கூறுவதற்கு ஏற்பத் **திருமறை** சொல்லாட்சிகளோடு செய்யப்பட்டுள்ளமை குறிக்கத்தக்க ஒன்றாகும். மேலும், பல வட்டார வழக்குச் சொற்களும் நூலுள் காணப்படுகின்றன.

தன்னிகரில்லாத பரன்

உந்தனருள் பலம்

குளுந்த தண்ணீர்

ஆர்க்குந் தெரியாது

கெதி பெற வேணுமென்று

கரை காணா வாருதியே

சோரி சிந்தவே உமக்காய்

சர்வேசுவரனுடைய சத்திய வேதத்தோரோ

தாட்சியுடனே இருந்து

என்பன போன்ற இச்சொல்லாட்சிகள் இந்நூலின் எளிய நடையையும், **திருமறை** சொல்லாட்சிகள் சிலவற்றையும் காட்டுவனவாகும்.

நூலாசிரியரின் மதக்கோட்பாடுகள் பற்றிய அறிவு

மேலும், நூலாசிரியர் தமிழக மக்களின் பழக்கவழக்கங்கள், சைவர்களின் தெய்வமான சிவபெருமானின் அற்புதங்கள், வைணவர்களின் தெய்வமான திருமாலின் அற்புதங்கள் ஆகியவற்றை மிகவும் நுணுக்கமாக உணர்ந்துள்ளார் என்பதை மத ரீதியாக மரிகருதம்மாளுக்கும், ஒலிவோன் மன்னனுக்கும் நடைபெறும் வாதப் பிரதிவாதங்கள் மூலம் அறிந்து கொள்ள

முடிகின்றது. தமிழர்களின் சிறு தெய்வ வணக்க முறைகள், அதனால் அவர்களிடையே காணப்பட்ட சிறப்புக் கூறுகள் ஆகியனவும் நூலுள் பரக்கக் கிடைக்கும் செய்திகளாகும்.

அம்மானை கதைப்பாட்டு வடிவின் எளிமை

சிற்றிலக்கிய வகையினுள் ஒன்றாக முதலில் கருதப்பட்ட அம்மானை இலக்கிய வகை, கதைப்பாடல்கள் தமிழகத்தில் செல்வாக்கு பெற்ற காலத்தில் பெரும் ஏற்றம் பெற்றமைக்குத் தமிழகத்தில் காணக்கிடைக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட 'அம்மானைக் கதைப்பாடல்களே' சான்றாகும். கண்ணி அமைப்பில், எளிய சொல்லாட்சியில், நாற்சீர்களில் ஓரடி அமைத்து, இடையிடையே விருத்தம் முதலிய பிற வகை கலந்து பாடப்பெறும் இவ்வகை அம்மானைப் பாடல்கள் சிறந்த செல்வாக்குடன் கிறித்துவ மதத்துள் திகழ்ந்தன என்பதற்குப் பெருங் காப்பியம் படைத்த வீரமாமுனிவரின் **கித்தேரி அம்மானை** முதற்கொண்டு சான்றுகள் காணக் கிடைக்கின்றன. அதனால்தான் பெரும்பாலும் கிறிஸ்தவ அடியார்களின் வரலாறுகள் பல அம்மானை வடிவில் காப்பிய நயத்துடன் படைக்கப்பெற்றன.

அர்ச் மரிகருதம்மாள் அம்மானையும் அவ்வகையில் தமிழ் கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றில் பெரும் இடம் வகிக்கும் என்பதில் ஐயமில்லை மேலும் இவ்வம்மானை பாமர மக்களிடையேயும் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பதற்கு இந்நூல் கண்ட பல பதிப்புகளும், இவ்வம்மானையில் அமைந்து காணப்படும் பாடபேதங்களும் உதாரணங்களாகும்.

* * *

MARI KARUTAMMĀL AMMĀṈAI - A CRITIQUE

In Christian Tamil literature, the literary genre of *ammāṉai* is seen to be more prominent than other genres. The reasons for the great influence of the ballads of *ammāṉai* variety among the Christian scholars who pioneered literary creations in Tamil in the beginning of the 16th century and the reasons for the popularity of **Arch. Mari Karutammāḷ Ammāṉai** are discussed here in a comparative manner with reference to the history of Christian Tamil literature, *ammāṉai* literary genre and the aspects of Tamil culture.

The service rendered by foreigners to Tamil literature

In Tamil Nadu, the Christian literary works during their initial stage were authored mostly by foreign scholars whose mother-tongues were other than Tamil. They had to encounter the Tamilians with a new faith and a new religious doctrine. The notable one among such scholars were Fr. Henrique Henriques known as Aṇṭiṟikku Aṭikaḷār, Robert-de-Nobili known as Tattuvapōtakar, Father Beschi known as Vīramāmuṉivar, Ziegenbalg, Ellis, G.V. Pope and Robert Caldwell. All these scholars exhibit their thorough and minute study of Tamil culture, the caste systems in Tamil Nadu and the customs and habits of Tamilians. V.P.Ñāṉaprakācam states in the work **Vīramāmuṉivam** that the present attempt to adapt religious life and missionary service to the Indian tradition was pioneered by Tattuvapōtakar in the 17th century and continued by Vīramāmuṉivar (Father Beschi).

The literary attitude and theological service of Tattuvapōtakar

Robert-de-Nobili played a major role in this regard. He changed his name as Tattuvapōtakar to suit the Tamil soil. In simple poems set to *viruttam* metre and familiar to the Tamil folk he authored works on the tenets of Christianity. P.S. Yēcutācaṉ observes that Tattuvapōtakar's saffron robes, turban, earstuds, tigerskin seat, sandal paste mark on the forehead, habitation in a hut and vegetarian diet projected him as a Tamil saint, similarly Ziegenbalg called himself Ziegenbalg Iyer and set Christian carols and religious hymns to suit Tamilian sentiments "Ziegenbalg's meritorious achievements had a considerable reception among the native congregation and this enthused other missionaries to venture on composing more hymns in Tamil"[1]

---

1. G. John Samuel (Ed.), *Encyclopaedia of Tamil literature Vol. I,* p.391.

Robert-de-Nobili realised the basic sentiments of Tamil people and adopted suitable strategies in his religious mission, "Thus De-Nobili's converts were allowed to retain their tufts (*kuṭumi*), their sacred God, their customary bathing and food rules and all the regulations governing social intercourse. It was therefore possible for them to remain as Christians within Hindu society"[2]. He also erected Christian churches in the pattern of Hindu temples and called them *Kōyil*. The practice of offering *piracātam* after worship in the Hindu temples was also introduced in De- Nobili's churches. All these efforts and the freedom granted by the religious high command to him reduced the foreign element of Christianity as far as possible in its propagation in Tamil Nadu.

The foreign element in literature

It is to be noted that literary works alien in nature to the Tamil ethos had fallen into disuse and been ignored. Even in ancient Tamil literature among the *caṅkam* classics of *akam* tradition, works like **Tiṉaimoḻi Aimpatu** and **Tiṉaimālai Nūṟṟaimpatu** coming under **Patiṉeṉkīḻkkaṇakku** could not attain the glory and greatness achieved by the poems in the anthologies from **Aiṅkuṟunūṟu** upto **Akanāṉuṟu.** Similarly in Christian literature, Tēmpāvaṇi by Father Beschi and **Iraṭchaṇiya Yāttrikam** by H.A. Krishna Piḷḷai were deemed classics on account of their adaptation to Tamil ethos and the skilful elimination of the alien element in the religious doctrines and characters.

The Christian literary works with the foreign element

Though works like **The Pilgrim's Progress** and **The Holy War** were translated into Tamil by many scholars they could not fully reach the Tamil masses because of the unfamiliar melody and imagery in those pieces. Likewise the early Christian carols in Tamil set to German music were strange to the Tamil ears and hence not popular. In order to rectify this anomaly E.Wep of the American Diocese edited a collection entitled **Kiṟistava Kīrtaṉaikaḷ** (Christian carols) in the year 1859.

Vētanāyaka Cāstri's Tamil literary creations

Among the composers of Christian lyrics and carols in Tamil, Vētanāyaka Cāstri, who was poet laureate for sometime in the court of king Serfoji of Tañcāvūr, occupies a pride of place. He effectively availed himself of minor literary genres like *noṇṭi, kummi, nāṭakam, ulā, anupūti* and *kuṟavañci* in his

2. *Ibid.*

creations, such as, **Ñāṉanoṇṭi, Ñaṉakkummi, Ñāṉataccanāṭakam, Paramānupūti** and **Pettalēkaṅ kuṟavañci.**

The other authors of Christian literature

There were some other noted Christian scholars like Antōṇikkuṭṭi Aṇṇāviyār, Kūḷaṅkaittampirāṉ, Muttucāmip Piḷḷai, Iṉpakkavirāyar, Cavarāyalu Nāyakkar and Paṇṭita Cavarirāyar who distinguished themselves in Christian Tamil literature.

The literary trend of the 16th century

The latter half of the 16th century was an important period in the growth of minor literature in Tamil. The reign of Nāyakkar dynasty, Zamindari rule and Nawab's reign mostly formed the ruling establishment in Tamil Nadu. The rulers of such principalities engaged court poets to sing their glory. Hence only laudatory verses of minor literary genre were largely authored by poets in preference to major literary works of lasting nature. Moreover the literary scholars of that period laid a base for prose literature. The Christian scholars made use of both prose and minor literature to propagate Christianity. Notable examples in this regard are **Puṉita Paipiḷ Vacaṉaṅkaḷ** (Texts of the Holy Bible), **Puṉitar Varalāṟu** (The Biography of Saints) and **Paramārtta Kuru Katai** (The Story of Paramārttakuru).

The style of Christian poets in their minor literary creations

The Christian poets who absorbed the traditions of minor literary genres in Tamil, made some subtle changes in their works without deviating from the literary and grammatical conventions. Complex prosodic techniques like *maṭakku, yamakam, tiripu, cilēṭai* etc., found in minor literary genres were simplified and adapted by Christian poets to make their works eminently readable even by laymen. An outstanding scholar in this respect in expounding Christian doctrines was Vētanāyaka Cāstri whose missionary success was impressive. "Though he partially belongs to the Neo-classical tradition we see in his works the gradual melting away of the rigid Neo-classical rules: and his works in several ways anticipate and foreshadow the later romantic movement spearheaded by Pārati and others"[3]

3. G. John Samuel (Ed.), *Op. Cit.*, p.400.

The antiquity of *ammāṉai*

The literary genre of *ammāṉai* is predominant in Christian Tamil literature. In *Caṅkam* literature we do not come across the term *ammāṉai*. However references to *kaḷaṅkāṭal* which is similar to *ammāṉai* are found in **Perumpāṇāṟṟuppaṭai** (334-335) and **Puṟanāṉūṟu** (36-4)[4]. In *caṅkam* works like **Akanāṉuṟu, Aiṅkuṟunūṟu, Patiṟṟupattu** and **Paripāṭal** the term *ammāṉai* occurs to denote *Kaḷaṅkāṭal*[5].

Cilappatikāram and the *ammāṉai* literary pattern

The word *ammāṉai* is used in **Cilappatikāram** to mean different things i.e, *tāy* (mother), *talaivi* (heroine), *ammāṉai* (the beads or shells used in that game) and *tī* (fire) *kaḷaṅku* of the *Caṅkam* period and *ammāṉai* of the later periods are both objects of similar games played by women. Various games described in Tamil literature right from the *Caṅkam* period show a continuity as in *kuravai, tuṇaṅku, ūcal, pantu, kalaṅku, pāvai, ciṟṟilaittal, puṉalāṭal, alavaṉāṭṭutal* and *ammāvāṭal*. The following lines in **Cilappatikāram** effectively employ the *ammāṉai* pattern of questioning and answering to narrate an episode.

īṅku nīrvēli ulakāṇṭu viṇṇavarkōṉ
ōṅkaraṇam kātta uravōṉ yār - ammāṉai
ōṅkaraṇam kātta uravōṉ uyarvicumpil
tūṅkeyil mūṉṟerinta cōḻaṉkāṉ ammāṉai.

The question in the first two and the answer in the next two lines tell us of the plight of Intiraṉ, the chief of Tēvars (heavenly beings) who was confronted by an evil Acuraṉ (inhabitant of the netherworld) and the bravery of a Cōḻa king who fought and defeated the Acuraṉ and saved Intiraṉ.

Tiruvammāṉai

This category of *ammāṉai* ballad or song emerged as a literary genre through **Tiruvammāṉai** composed by Māṇikkavācakar in the post **Cilappatikāram** period. **Tiruvammāṉai** forms part of the famous **Tiruvācakam**. The *ammāṉai* verses are found here in two patterns. Three women participate in an *ammāṉai* game generally.

---

4. *Ibid.*, - Vol II, p.299.

5. Thomas Lehmann & Thomas Malten, *A Word Index for Caṅkam Literature*, p. 143.

1. One woman raises a question, the second woman answers and the third one clinches the issue or argument.

2. The first woman provides some news or information, the second woman raises a question on the basis of that information and the third participant answers subtly employing a *cilēṭai* (paronomasia) punning on words.

Maṭakku ammāṉai - its prosody

In the advanced stage of *ammāṉai* poetry we have the prominent example of the verbal encounter between Pukaḻēntip pulavar and Oṭṭakkūttar, in the form of *ammāṉai* songs passed on to us down the generation by hearsy information.

iraṇṭu nālain teṉumaṭi īṟṟil
taṉpeyar kulavat takka ammāṉai
aintaṭik kalippā pōlum ataṉiṭai
collalum maṟuttalum viṭaiyum tāṉē
kūṟiṉar paṟpalar kuvalayat tiṭatē

The above mentioned lines stipulate the occurrence of the term *ammāṉai* at the end of the second, fourth and fifth lines in a five line *kalippā* verse in which a statement, counter statement and answer are to be found. This structural rule is laid down in **Aṟuvakai Ilakkaṇam.**

Ammāṉai and other literary genres

Ammāṉai developed as an independent and separate literary genre from the period of Māṇikkavācakar. Besides, it also formed part of other literary genres as a component. In *kalampakam* and *piḷḷaittamiḻ* genres of Tamil poetry *ammāṉai* is employed. In *piḷḷaittamiḻ* intended for female children *ammāṉaip paruvam* finds a place as one of the various stages of their playful childhood. References to the *ammāṉai* game of the womenfolk are found in *ulā* poems also.

Ammāṉai ballads

Apart from the above mentioned literary applications of *ammāṉai* it acquired in the 17th century the dimension of a ballad for narrating a lengthy story. This is evident from the works of that period under the title of *ammāṉaipāṭṭu, mālai* and *naṅkaippāṭal.*

Even epics like **Irāmāyaṇam** and **Makāpāratam** were adapted for the composition of *ammāṉai* ballads such as **Irāmāyaṇa ammāṉai** and **Pārata ammāṉai.** G. John Samuel observes in his **Tiṟaṉāivu Cintaṉaikaḷ** that missionary poets prefer folk literature to the forms of classical literature to spread their propagandist views among the masses.

The episodes from the famous epics formed the themes of *ammāṉai* ballads. The examples of this category are **Alliaracāṇi Mālai, Pavaḷakkoṭi Mālai, Apimaṉṉaṉ Cuntari Mālai, Vaikuṇṭa Ammāṉai, Acuvamēta Ammāṉai** and **Irāmar Vaṉavāca Ammāṉai.**

The prosody of *ammāṉai* ballad

Taṇṭapāṇi Cuvāmikaḷ states in his **Aṟuvakai Ilakkaṇam** (*yāppu* 31) the prosodic regulation of *ammāṉai* as follows:

kalippā araiarai yākak kūṭṭiyum
etukai iṉṟi taṉittaṉi cērttum
kātai yammāṉai kaḷaṟiṉar cilare

(Adding *kalippā* verses by half and joining them separately without *etuka*i (rhyme) some poets composed *ammāṉa*i ballads)

The categories of *ammāṉai* ballads

M. Marutamuttu in his edition of **Āmaiyar Ammāṉai** observes that *ammāṉai* ballads can be categorized under five heads according to their thematic and story contents.

1. *Itikāca, Purāṇa Ammāṉai* are the ballads based on epics and mythologies. **Irāmāyaṇa Ammāṉai, Pārata Ammāṉai, Kaḷḷaḻakar Ammāṉai** and **Tiruviḷaiyāṭal Ammāṉai** come under this category.

2. *Ilakkiya Ammāṉai* are based on the poetic themes of Tamil literature **Kōvalaṉ Katai Ammāṉai** and **Cīvaka cintāmaṇi Ammāṉai** belong to this category.

3. *Camaya Ammāṉai* are composed by scholars who belong to various religions to enlogize their respective religions and deities. **Ēkātaci Ammāṉai, Cattiyavēta Ammāṉai** and **Tirumaṟaipporuḷ Ammāṉai** are the works of this category.

4. *Camutāya Ammāṉai* are ballads based on the complex incidents that happened in Tamil society. **Maturaivīraṉ Ammāṉai** and **Poṉṉar Caṅkar Ammāṉai** are the examples of this category.

5. *Varalāṟṟu Ammāṉai* are historical ballads based on the history of Tamil Nadu and the incidents mentioned therein.

The *ammāṉai* ballads of yore

Ammāṉai ballads have been available from the beginning of the 17th century. Such ancient *ammāṉai* ballads are **Irāmappaiyaṉ Ammāṉai, Cīrāḷaṉ Ammāṉai, Mūvar Ammāṉai** (by Pukaḻēnti) and **Tiruccelvar Ammāṉai.**

The Christian *ammāṉai* ballads were composed by Christian scholars who mostly followed the literary pattern of the above - mentioned works.

Ammāṉai ballad in Christian literature

More or less around the same period Christian poets composed **Caṉṭiyōku Mēyar Ammāṉai** and **Arch. Mari Karutammāḷ Ammāṉai.** This literary genre appealed to them greatly and the fun piece of Christian literature in this regard was **Caṉṭiyōku Mēyar ammāṉai** which was composed in 1647 by a Sri Lankan scholar by name Petro who was born as a Brahmin but converted himself to Christianity and changed his name as well. Between the 17th and 20th centuries many Christian poets contributed works of the *ammāṉai* genre.

Ammāṉai ballads relating to Christian saints

The account of saints canonized in Christianity and stories of martyrs who laid down their lives in the crusades for the sake of that religion provided the themes for *ammāṉai* ballads. Such ballads deal with the lives of St. Sebastian, St. Antony, St. Xavier, St. Thomas and *Vētacāṭci* Tēvacakāyam Piḷḷai.

Ammāṉai ballads concerning pious Christian women

Apart from those canonized among men, among women also many were canonized in Christianity and we find *ammāṉai* ballads on their lives and missions. Such works are on Arch. Periyanāyaki Mātā, Arch. Lūrtu Māta, Arch. Cepamālai Māta, Arch. Viyākula Māta, Arch. Tirēcammāḷ, Arch. Akiṉēcammāḷ, Arch. Pārparammāḷ and Arch. Pilōmiṉammāḷ.

The literary service of Fr. Henrique Henriques

In this context we have to consider on what basis or source in Tamil, the accounts of the saints who dedicated themselves to Christian missionary service all over the world were written. Fr. Henrique Henriques of Portugal played a major literary role in Tamil by first writing **Aṭiyār Varalāṟu** based on the lives of saints written in Portuguese and Latin. Even before writing **Aṭiyār Varalāṟu** he had written **Tampirāṉ Vaṇakkam** in 1586, all in Tamil language. After the publication of **Aṭiyār Varalāṟu** he wrote a few works. Thus he played a significant role in Tamil prose writing in a period when prose creation were not much in vogue.

Aṭiyār varalāṟu

Fr. Henrique Henriques narrates the lives of 88 saints in his works **Aṭiyār Varalāṟu** based on the Portuguese original **Fla's Sanctorum.** In his preface to the work Fr. Henrique Henriques mentions the great pains and meticulous efforts taken by him in translating into Tamil the Portuguese and Latin originals. His dedication and sincerity are evident in his statement that he had taken three years to provide a scrupulous translation doing justice to both the source languages and the target language of Tamil. In **Aṭiyār Varalāṟu** there are 70 sections in which the accounts of 53 saints are given separately and those of 7 saints are given collectively. The other sections deal with Jesus Christ, Virgin Mary and the glory of Christianity. **Aṭiyār Varalāṟu** was considered a sacred work next in importance to **The Holy Bible** by those who embraced Christianity.

The impact of Aṭiyār Varalāṟu and Arch. Antōṇiyār Ammāṉai

Aṭiyār Varalāṟu was written with the didactic aim of making the readers emulate the lives of saints and ultimately to attain the eternal bliss of *mōṭcam*. The influence of this work is evident in **Arch. Antōṇiyār Ammāṉai** wherein we find subtle references in the *kaṇṇi* verses (31 to 39) to **Aṭiyār Varalāṟu.**

The history of Arcciyaciṣṭarkaḷ (sanctified devotees or disciples)

Information regarding many new saints was gathered and added to the earlier accounts of saints and published as a work entitled **Arcciyaciṣṭarkaḷiṉ Carittiram** in 4 cantos. This work mentions the dates of birth of Christian saints, thereby enabling Christians to worship the former on their respective birthdays that fall right through the year from 1st January to 31st December. This work also enhanced the image of those saints among the Christian laity.

Biographical references to Arch. Mari Karutammāḷ

The canonized Arch. Mari Karutammāḷ occupies a pride of place among the saints whose accounts are narrated in the history of Christian saints and in works related to Christianity. She was supposedly born on the 20th July and mentioned severally as Marikarutāḷ, Markarittammāḷ, Marikirutāḷ, Marukarutāḷ, Maru Karutammāḷ, Mēri Karutammāl in many works.

The precedents for the author of the work

The first historical reference to Arch. Marikarutāḷ was obviously provided by Fr. Henrique Henriques followed by Rosci (Father Xavier. Jr) who belonged to the society of Jesus. The hints in the works of the above two hagiographers should have provided the material for composition of **Arch. Mari Karutammāḷ Ammāṉai** stories by word of mouth and religious discources of those days could also have supplemented the author in his task of composing this *ammāṉai.*

Internal evidence regarding the author

There are differences of opinion regarding the author of this work. In the 1876 edition of **Arch. Mari Karutammāḷ Ammāṉai** its editor is mentioned that this work was authored by one of the poets of yore[6]. The name of the author has not been mentioned. Neither in the paper manuscript of this work available in the at Chennai nor in the 1955 edition of this work published by the Denobili Press at Maturai, we have any reference to the author. Even in the *avaiaṭakkam* (Apologia) where the author expresses modestly his inadequacy for composing this work, we are unable to get any clue to the name and identity of the author as all the expressions of modesty by him are anonymous such as *tītuniṟai pollāc ciṟiyēṉ* (this mean self full of lapses), *aṟiyātāṉ eṉpāṭal* (the poem of my ignorant self) etc.

The external evidence regarding the author

As the internal evidence in this work does not provide any clue to its authorship, we find some external evidence attributing this *ammāṉai* creation to one John[7]. A.P.

---

6. Maḻavai V.T.M. Ciṉṉacāmi Ceṭṭiyār (Ed.), *Arch. Mari Karutammāl Ammāṉai* - Title Page.
7. A.P. Antōṉi Irācu (Ed.), *Arch. Marikarutammāl Ammāṉai.*

Antōṉi Irācu in a research edition of this work published in 1993 argues that this *ammāṉai* could not have been composed by Aptullā Cāyapu as stated by some scholars as a follower of Islam could not have been familiar with the subtle aspects and tenets of Roman Catholic Christianity. According to A.P. Antōṉi Irācu, Aptullā Cāyapu would have converted himself to Christianity and changed his name to John. This John theory is strengthened by Father Balthazar Da Casta whose epistle to the students of theological seminaries contains the following sentences: "Next come the two Johns, one of them is also a great poet. Among other poems he has composed, one on the life of St. Margaret and other small books through which he does much good as we shall see further on . . ."[8] There is no evidence however to state precisely in which literary genre, the supposed author John had composed his poetic work on St. Margaret whose name is assumed to have been adapted as Marikarutāḷ in the Tamil version. In the absence of further concrete evidence the authorship of this *ammāṉai* cannot be attributed to the said John.

The period of composition of this work.

Since the date of Father Balthazar Dacosta's letter is 9-9-1653 the author John should have belonged to an earlier period i.e., the 17th century S. Countarapāṇṭiaṉ observes that the work belongs to the 18th century considering its style and content[9]. It is however difficult to trace any evidence whatsoever in the *ammāṉai* as the author has not refared at all to the period of its composition.

Arch. Mari Karutammāḷ Ammāṉai : Historical *ammāṉai*

The story of this *ammāṉai* is related to history. In the **Catholic Encyclopaedia** Vol.I (page 652) we find the following information: "The Greek church honours her under the name Marina on 13 July; The Latin, as Margaret on 20 July. Her acts place her death in persecution of Dioaletian (A.D. 303-5)". Marikarutāḷ may therefore be taken as an adaption of the name Margaret in Tamil. This *ammāṉai* is based mostly on the historical accounts of Marikarutāḷ written by Fr. Henrique Henriques and Rosci alias Father Xavier. Jr.

The synopsis of Arch. Mari Karutammāḷ Ammāṉai

The story content of this *ammāṉai* is simple and brief without any complexity whatsoever. This ballad is a poetic narration of the simple life and supreme sacrifice of

8. *Ibid.*, p.V.

9. S. Countarapāṇṭiaṉ, *Kristuvat Tamiḷ Ilakkiyaccuvaṭikaḷ,* p.76.

a pious young woman who strongtly defended her staunch Christian faith against the onslaught of infidels who had scant regard for human lives or values.

Marikarutāḷ was born in the city of Antiyok as the daughter of Tēyōtēci, a sinister Hindu Caivite priest hostile to Christianity. She lost her mother while quite young and was brought up by a servant maid. Under the care of her foster mother she grew up to be a beautiful lass with a rather spiritual than temporal bent of mind. She dedicates herself, body and soul, to Lord Carvēcuvaraṉ with determination. Her knowledge of Christian code and lore made her a staunch follower of that faith. She undertook a vow of celibacy and wanted to become a nun in due course. While she was tending her sheep at the foot of a mountain she attracted the attention of Oliver, the king of that country. He wanted to marry her but she declined the royal offer. The enraged ruler imprisoned her and tortured her in several ways to make her agree to be his consort or concubine. As the young woman was resolute in her refusal to abide by the king's desire, he set ghosts against her to torment and tease her to submission. The devout Mari karutāḷ with the divine assistance of Carvēcuvāraṉ defeated and drove away the ghosts. She also eloquently put forth pro-Christian and anti-Hindu arguments before Oliver in order to convince him and clarify the doubts raised by him regarding the superiority of her faith. The enraged Oliver however ordered the killing of Marikarutāḷ and accordingly she was beheaded. She reached Heaven where she was received by Jesus Christ amidst the singing angels and divine Music. After her death as a martyr she was canonized and worshipped.

The variations of the story found in the work

Some Christian Encyclopaedia works or digests clearly inform us that the story of Marikarutāḷ was in vogue worldwide. Such references tally with the storylines as found in **Aṭiyār Varalāṟu, Arcciyaciṣṭarkaḷiṉ Varalāṟu** and in the *ammāṉai* work as well. In the **New Catholic Encyclopaedia (Vol.IX)**[10] Marikarutāḷ is mentioned as a saint worshipped by people for safe delivery in maternity. A few scholars however attribute the source of Marikarutāḷ to Margaret who lived in the same city as mentioned in the *ammāṉai* and died as a matyr to preserve her chastity. The accounts of Marikarutāḷ in **Aṭiyār Varalāṟu** written by Fr. Henrique Henriques and in the **Catholic Encyclopaedia (Vol.I)** published by Robert Appleton Company are more or less similar. However in the **Catholic Encyclopaedia** the name Mari Karutammāḷ becomes either Marina or

Margaret. The city of Antiyok is mentioned as Antioch and the king Oliver is mentioned as Olybrius".[10]

The significance of Arch. Mari Karutammāḷ Ammāṉai

Compared to other *ammāṉai* works this *ammāṉai* has a good publishing history with several editions from the 19th century onwards. It is to be noted that the theme derived from a foreign source has been successfully adapted to suit Tamil culture and ethos and evolved as an interesting ballad.

The appropriate nomenclature in the *ammāṉai*

The author of this *ammāṉai* has taken great care to change the names of foreign characters and places to suit the land and identity of Tamils. The incidents supposed to have occurred in Asia Minor have been nicely integrated into the Tamil background. The names Mari Karutammāḷ, Tēyōtēci and Antiyōkkiyap paṭṭaṇam are suitable Tamil adaptations of foreign names.

The attributes of Oliver

In this *ammāṉai*, the king Olivōṉ is portrayed as a typical despotic ruler of Tamil Nadu. The Hindu festivals such as *tērōṭṭam* (the hauling of temple car along the streets of towns and cities) and many Hindu rituals are described by the heroine Marikarutāḷ to emphasise the staunch Hindu orientation of the king and his subjects. It is also mentioned that Oliver who is sinful and silly as well worships ghosts and glorifies them with pageantry.

antiyōk kianakaril aracuvoli vōrumaṉṉaṉ
mantamuṟum puttiyillāṉ māpāvi ceynaṭattai
kēḷum picācuvukkuk kīrttipeṟa vēṇumeṉṟu
nīḷum perumaiyuṭa nēcamāyt tērōṭṭam
tērōṭṭam pūcaiyuṭaṉ teruvītiyil nāṭakka
pārāṭṭi mōkavitam palastirīkaḷ kūttāṭa

10. *New Catholic Encyclopaedia* (Vol.IX), p.199.

Tēyōtēci, the father of Marikarutāḷ, is a Caivite priest. He is mightily displeased with his daughter because of the latter's tirade against Hindu scriptures and mythologies.

paṇṇariya nammuṭaiya palacamaya cāstirattai
eṇṇāmal taṭṭukirā ḷeṉṟucolli yēcalittu
Note that there is no real God, sir

Proclaiming the Harassment

Thus did Mary Karutāḷ expound,
'Tell you further pieces of advice,
Oh! father, in your world, the Tēvars

வைப்பாகப் பெண்கள்வைத்து மகாமோகஞ் செய்தார்கள்
லீலையி(ல்) ஸ்தீரிகளொடு நிஷ்டூர மாகவேதான்
சீலை தனையுரிந்து தீதுமிகச் செய்தார்கள்
செய்தார்கள் பெண்களைச் சுமந்து திரிந்தார்கள்
ஐயோபல சாதிகளோ டழிந்தார்க ளம்புவியில்
அம்புவியி லும்முடைய ஆகத்தியத் தேவர்களை
நம்பினால் மோட்சமுண்டோ நாணமில்லாத் தேவர்களை
தேவன்பில்லி வஞ்சனைக்குஞ் சித்துவித்தை மோகினிக்கும்
அவனிதனில் பொல்லாத வாகடியத் தேவரல்லோ

தந்தை நாணமுற்று விலகுதல்

என்று தகப்பனுக்கு யிப்படியே யுத்திரங்கள்
ஒன்றுபடச் சொன்னதற்பி னுறுபாவி [1]வெட்கமுற்று
[2]வெட்க மனதறிவு மில்லாத வன்குருடாய்
நட்புரைக ளில்லாமல் நாணமுற்றுப் போகலுற்றான்
போனதற்பின் னால்சிலநாள் பூமிதனி லேயிருந்து
[3]ஈனமுற்றுப் பாவவழி யெல்லார்க்கும் போதவித்து
வித்துசித்து மோகினிக்கும் வெங்குறளி பேய்களுக்கும்
அத்தனைக்கும் வந்துதவு மழல்நரக பேய்களுக்கும்

பேய்கள் தந்தையைக் கொண்டு செல்லுதல்

பேய்கள் சூலத்துடனே பெருஞ்சடைகள் தீயெரிய
பாவிதனைப் பிடித்துப் பாசங்கொண் டேயிறுக்கி
இறுக்கிப் பிடித்து யிவள்தகப்ப னாத்துமத்தைப்
[4]பிரிப்படா தேபடிக்குப் பேய்கள் கொண்டு போனதுவே

நாணம் - வெட்கம். அவனி - உலகம். பாவவழி - தீச்செயல். குறளி - வித்தை செய்யும் பேய்கள். பாசம் - கயிறு
ஆத்துமம் - உயிர்.

சுவடிச் சொல்

1 வெழ்க்கமுற்று 2. வெழ்க 3. யீன 4. பிறிப்படா

Had concubines and acted foul,
In their pranks amorous with women did they cruelly,
Stripped their sarees and hurt them greatly,
Harmed them and carried women and roamed,
Lo! they did perish with castes so many,
In your world beautiful, if one trusts the Tēvars vile,
Will there be eternity if one places faith in the shameless Tēvars
For vicious *pilli* of Tēvars and magic making *mōkiṉis*
In the world, aren't the wicked Tēvars the source?'

Father's withdrawal

Thus she did respond to her father, coherently,
After which the sinner quite ashamed.
But without sense to realise shame and in utter blindness,
Without friendly advice, has put to shame
Then did he remain on earth for days a few,
Became disgraced and taught sinful ways to all,
To the magical *mōkiṉis* and dwarf *kuṟaḷi* demons
To assist the ghosts of fiery hell one and all,

Ghosts kidnapping the father

Ghosts with spears and flaming hair matted
Caught the sinner and held in grip tight and fond,
Tightened the grip on her father's soul,
Without extrication the ghosts led it.

கன்னிமரி தவம் செய்தல்

விருத்தம்

7. போனதற்பின் கன்னி மாது
பூசைமா தவங்கள் நோக்கி
[1]ஈனமொன் றணுகி டாமல்
யிருந்தவள் நடந்த வாறுந்
தேனினு [2]மமுத வாயாள்
[3]சேயிழை வடிவோ டொக்க
நானது யுரைக்கொண் ணாது
நற்றவ ருரைக்க லாமே.

கன்னி மரியின் அழகு

அம்மானை

8. உரைக்கமுடி யாதுகன்னி யொளிசிறந்த தன்னழகைச்
சுருக்க முடன்சிறிது சொல்லுகிறேன் கேட்டருளீர்
சொல்லுகிறேன் கன்னிகைதான் துய்ய சொரிகுழலாள்
வல்ல பரமபதியில் வான்கதிர் போலிருக்கும்
[4]இருக்கும் பரமபதியி லிவர்தம்மைப் பக்திகொண்டு
தருப்போ லிருந்த[5]நெற்றி சந்திரவட்ட மொப்பல்லவே
ஒப்பரிய கன்னியர்க்கு ஒப்பனைக ளேதுவென்றால்
செப்பரிய நீதிநெறி திருப்புருவ மொன்றாமாம்
ஆமே நிலமணிக ளாகக் கல்லுமண்ணும்
போமே யுடைந்துமண்ணில் பொடியாக வேதூளாய்
தூளாய்ப் புவியாசை சொல்லரிய யிச்சையெல்லாம்
[6]ஊழி பரமபதியி லொளியிலங்குங் கண்ணாமே

ஈனம் - இழிவு, குறைவு. சொரிகுழல் - அடர்ந்த கூந்தல். பரமபதி - சொர்க்கலோகம். சந்திர வட்டம் - சந்திரன் போன்று வட்டமான. ஊழி - உலகம் முடியுங்காலம்.

சுவடிச் சொல்

1. யீன 2. மமுதற் 3. சேய்யிழை 4. யிருக்கும் 5. நெத்தி 6. யூழி

The penance of virgin Mary

7. After that exit, the virgin maiden,
Observed penance great and worship
Not allowing any lapse thereof
Thus did she act,
The damsel sweet- mouthed sweeter than honey
Resembling a child in figure so made,
I can scarce narrate it,
Great saints alone can describe.

The beauty of virgin Mary

8. It cannot be described, the luminous elegance of the virgin,
Narrate I shall a little in brief, pray listen,
State I must that the virgin has dense locks flowing pure,
In state heavenly like a beam of light celestial,
In heaven, with devotion towards her (I narrate)
The orb of the moon is to her forehead, no match,
To the peerless virgin, the make up is,
The brow so pious that defies description,
Stone and sand are but gems of earth
Powdered and buried they will be on earth,
All wordly desires indescribable, thus pulverized

ஞானத்தின் கண்ணுடைய நல்லயிச்சைக் கண்ணொளிவும்
வானத் தொளிர்ஞான வாசமல ரொப்பல்லவே
வானி லுடுகதிர்கள் வச்சிரங்க ளொப்பல்லவே
ஞான வயிரமொத்து நல்லகன்னி பல்பொலிவும்
ஒளிசெறியுஞ் செவ்வாயி னொப்பனைக ளேதுவென்றால்
அழியாத புண்ணியத்தி னமுர்தவச னத்தழகும்
அழகுடைய மாதவத்தா ளருந்தவஞ்செய் காதிரண்டும்
தெளிவுடை ஞானவுரை செப்பியதுக் கொப்பல்லவே
செப்பரிய மாதவத்தாள் திறஞ்சேர் மரிகருதாள்
ஒப்பரிய கன்னியர்க்கு வொப்பனைகள் தானேதோ
தானபர மண்டலத்தில் சருவேசு வரனுடைய
ஆன திருக்கருணை யாசையாய் நின்றதுதான்
காண்பரிய நற்றவத்தாள் கன்னிதிரு மார்பழகும்
ஓணரிய புண்ணியத்தின் புத்திவள ராலையந்தான்
தானந் தபசுசெபந் தவறாமல் நின்றோங்க
ஆனந்த நன்மை அழகுசெறி யுங்கரந்தான்

கன்னி சருவேசுவரனை வணங்குதல்

கரங்கள்ரெண் டுங்குவித்துக் கடவுள்சரு வேசுவரனை
[1]வரங்கள்தா வென்றுசொல்லி வானுலகை நோக்கிநிற்கும்
நிற்குந் திருமுழங்கால் [2]நீள்புவியில் தெண்டனிட்டு
மிக்கபுவி யாசைவிட்டு வேதவயி ரங்கள்கொண்டு
வயிரமுற்றுப் பற்றிவிசு வாசநம் பிக்கையுடன்
துயரமுறும் பூதலத்தில் துய்யமின்னாள் தானடப்பாள்
நடக்குந் திருச்சரணம் நாள்தோறுந் தர்மமிசை
அடக்க வணக்கமொடு அரிவை யிருப்பதுதான்
திருவளருந் தேவநன்மை சித்திரஞ்சேர் கன்னியர்க்குத்
தருவளஞ்சேர் மின்னாரே தானிறைந்தே நின்றிலங்க

உடு - நட்சத்திரம். கதிர் - ஒளி. வச்சிரம் - வச்சிராயுதம். ஞானவுரை - அறிவுரை. செப்பரிய - சொல்வதற்கரிய. ஒப்பனை - அலங்கரித்தல். நீள்புவி - பரந்த உலகம். தெண்டனிட்டு - வணங்கி. சரணம் - பாதம். அரிவை - பெண். நின்றிலங்க - விளங்க.

சுவடிச் சொல்

1. வரங்க 2. நீழ்

In heaven eternal, with eyes luminous,
To the eyes of wisdom with the lustre of desires good,
Even the heavenly flowers fragrant and wise are not equal,
The beams of light in the skies and *vacciráyutam* too not on par,
The good virgin's teeth elegant like diamonds and pearls,
Her lustrous red mouth is decorated only by
The speech beautiful stressing good deeds,
The ears both of the beautiful saint in penance great
Are no match to the wise precepts uttered,
The damsel of penance indescribable, Mary Karutāḷ competent,
To the peerless virgin what cosmetics are there?
In the other world of heaven, Lord of all, God's
Grace but desiring and seeking,
The damsel of penance dear for sight, with beauteous breasts,
The temple of growing wisdom of good deeds rare,
Charity, penance and prayer, flourished without fail,
The hand that is endowed with happy benignity and beauty.

Virgin praying to Carvēcuvaraṉ

Both hands folding to great Carvēcuvaraṉ (Lord of all)
Will point heavenwards begging for boons,
The standing knee graceful will on this long earth prostrate,
Discarding desires earthly, with the gems of Vēda,
Staunchly holding them with loyalty and faith,
The pure luminary walks on this earth sorrowful,
Walks with easy grace daily in assonance with virtue,
In modest prayer the damsel remains
The picturesque virgin of divine benediction flourishing with grace,
Standing thus by herself spread over like a tree bent,

யிலங்கு மிவள்தன்மை யிஷ்டமது நின்றுநன்றாய்
துலங்கும்பர மெஞ்ஞான சுடரொளிக ளாத்துமத்தில்
ஆத்துமந்தான் பரலோக மேடை யவள்வேண்டி
போற்றுவாள் ஞானப் [1]பொருளோனைத் தானிதமும்
மேனிலையாள் கன்னி மேலா மரிகருதை
கன்னிகையைத் தான்வளர்த்த [2]காரிகையா ளானவட்கு

கன்னி ஆடு மேய்த்தல்

ஆடுகிடா யோடுமறி வந்நகரில் மெத்தவுண்டு
நீடு மரி[3]கருதை நேசமுட னேவளர்த்த
தாயா [4]ரவளாட்டைத் தான்மேய்த்துக் காத்தடைப்பாள்
தாயாடு மேய்த்தடைத்து தானிருக்கும் நாளையிலே

ஒலிவோர் தெருவழிப்போதல்

உயர்மிகுந்த மன்ன னொலிவோரு வானவனும்
அரண்மனையை விட்டு ஆனைபடை சேனைமன்னர்
ஒளியுடைய பட்டணத்தி லோங்குந்தெரு வீதியிலே
வழிவிட்டு வேறுவழி வந்திடுநல் [5]வேளையிலே

ஒலிவோர் கன்னியைக் கண்டு காமுறுதல்

வந்திடுநல் வேளையிலே மங்கை மரிகருதாள்
அந்தநே ரந்தனிலே ஆடுகளை மேய்த்துநின்றாள்
கன்னியரைக் கண்டொலிவோர் காமவெறி கொண்டவனுஞ்
சென்னி தனக்கேறித் தியக்கமுற்று மன்னவனும்
ஊறுபட மோகவெறி யுறுகொடிய பாதகனும்
தாறுமா றாகவேதான் சத்திவெறி பித்தமுடன்
கொண்டுவெறி மோகமுடன் கோதையர்மே லேநினைவாய்
அண்டவொண்ணா தாகமுடன் [6]அரண்மனைக்குப் போனபின்பு

மறி - ஆட்டுக்குட்டி. ஊறு - துன்பம். ஒளியுடைய பட்டணம் - வளமை பொருந்திய நகரம். அண்டவொண்ணா - நெருங்கமுடியாத.

சுவடிச் சொல்

1. பொருளோனே 2. கரிகை 3. கரிதை 4. ரவள ராட்டை 5. வேளையிலே 6. அம்மனைக்கு

Thus she stands on her own by nature,
In soul lit by luminous *meyñāṉam*
Prays she for dais heavenly for her soul,
Laud she will everyday the wise one
Mary Karutāḷ bred for a state high,
To the woman who fostered the virgin,

Virgin grazes the sheep

In the city violent that fed sumptuously on sheep and goat
The sheep of the fostermother who brought her up with affection,
She tended the sheep, let them graze and kept in custody safe.

Oliver walking in the street

As she thus tended and grazed her fostermother's sheep,
Oliver the King high,
Leaving his place along with elephant, and retinue
The king in a street prominent in the lustrous city,
Leaving the path usual and arriving by a ṟoute different.

Those who see the virgin become lustful

At that time proper of arrival, Mary Karutāḷ
The damsel did graze the sheep and stand there
On seeing the virgin Oliver became lustful,
Head full of lust and dazed, the king,
The wicked sinner in harmful lust passionate,
Lustful and insane for women haphazardly,
In lustful frenzy with the thought of the damsel,

சேவகரைத் தூது அனுப்புதல்

[1]அரண்மனைக்குப் போனதற்பின் னானநல்ல சேவுகரை
துரிதமுட னழைத்துச் சொல்லுவதைக் கேட்டருளீர்
ஆடுகிடாய் மேய்த்துநின்ற அரிவையர்பால் நீங்கள்சென்று
தேடரிய யென்பெருமை திட்டமாக வேயுரைத்து
பேர்பெரிய வங்கிஷத்தில் பிறந்திருந்தா ளாமாகில்
ஆர்ப்பரித் தேயவளை மணம் புரிவேன்
[2]ஈனமுறும் வங்கிஷத்தி லேந்திழையா ளாமானால்
நானே அரண்மனையில் நகையாமல் வைத்திருப்பேன்
வைத்திருப்பே னெந்நாளும் வைப்பாக வேயிவளைச்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் றய்யலுக்குச் சொல்லுமென்றான்
போகவிட்டான் சேவுகரை புத்திசொல்லி யேயழைக்க
ஆகமுறுந் துஷ்டர்பொல்லா [3]வாசகரெ னுஞ்சேவகர்

சேவகர் கன்னியை அழைத்து வருதல்

கன்னிதனை நோக்கிக் [4]கானகத்தே போகலுற்றார்
உன்னி யிருக்குமிட மோங்கியே போனதற்பின்
சித்திர ரூபவடிவே தேன்மொழியே யாயிழையே
[5]முத்துநிக ரொவ்வாத மரகதமே வச்சிரமே
அரசர் திறைகொடுக்கும் [6]அமுர்தகுண வாசகத்தான்
வரிசைப்புக ழோங்குகின்ற மன்ன னொலிவோரும்
உன்னை யரண்மனைக்கு உடனே யழைத்துவரச்
சொன்னார்காண் பெண்ணரசே தோகையரே வாருமென்றார்
என்றவச னங்கேட்டு யேந்திழையாள் [7]வானவனை
நின்றுதியா னங்கள்பண்ணி நீர்துணையாய் வாருமென்றார்
நடந்தா ளரண்மனைக்கு நல்லகன்னி மாதவத்தாள்
அடர்ந்துவந்த சேவகர்தா னரண்மனைக்குக் கொண்டுசென்றார்

துரிதம் - விரைவு வங்கிஷம் - வமிசம் தையல் - பெண்; மரிகருதாள். துஷ்டர் - தீயவர். கானகம் - காடு. சித்திரரூபம் - ஓவியம் போன்ற உருவம். திறை - வரி. இழை- ஆபரணம், அணி.

சுவடிச் சொல்

1. அரமனைக்கு 2. யீனமுறும் 3. வாசட 4. கானகத்தை 5. மத்தி 6. முற்தகுண 7. வானவனே

Sending the servants as messengers

In thirst unquenchable, after he reached the palace,
Summoned quickly and said thus, pray listen
Go to that girl who was tending sheep and goats,
Tell her in terms clear, my hereditary glory unattainable,
Had she been born in a dynasty of repute,
Marry her I shall for everyone to see,
If the girl beautiful is of a heredity mean,
Keep her I shall at the palace, with none to laugh at
Keep her for ever I shall as a concubine,
This I swear, tell the damsel he said
Sent his servants, to advise and invite
The servants wicked and vile tongued.

Virgin is brought

Walked they in the forest to see the virgin
Locating the place and reaching rightly there,
'Oh! picturesque one' honey sweet of tongue, damsel fine
Oh! emerald unmatched by pearls, strong as steel,
This is the message nectarine by the king projected,
King Oliver of towering repute hereditary,
Has summoned you to his court royal here and now,
Oh! queen of damsels, do come please Oh! lady' they said,
Oh! listening to remarks made thus, the damsel,
Stood and prayed to the Heavenly Being for his guidance
Walked she towards the palace the virgin of penance austere,
The servant who walked ahead brought her to the palace

கொண்டுபோய் விட்டதற்பின் கொடியனொலி வோருமன்னா
தண்டுமுண்டா யென்னையும்நீ தானழைத்த வாறேது
காரியந்தா னேதுசொல்லுங் காவலனே யென்றுரைத்தாள்
சீரிய கற்புமின்னாள் [1]சேயிழையை மன்னவனும்

காவலன் உரையாடுதல்

ஊரேது பேரேது உன்தகப்ப னாரேது
ஆருடைய வங்கிஷம்நீ அறிந்திடநான் சொல்லுமென்றான்
என்றமொழி கேட்டவுட னேந்திழையா ளேதுரைப்பாள்
நன்றுபட நம்முடைய நாளிதுதான் சாவுயென்று
சாற்று மறுமொழிக்குத் தையலவ னைப்பார்த்து
போற்றரிய மன்னவனே புகழ்ந்துயென்னைக் கேட்டதென்னா
என்றமொழி கேட்டு யிசைந்தொலிவோ ரேதுரைப்பார்
கன்றிமனம் பொங்கியவன் காமவெறி யாலுரைப்பான்
[2]சருவேசு வரனுடைய சத்திய வேதத்திலுள்ள
திறமான கோத்திரமோ தேனே யூ தர்மரபோ
ஆரணங்கே யெனக்கு அறிய வுரையுமென்றான்
சீரணியும் பூங்குழலாள் தேவபலனைக் கொண்டுசொல்வாள்
ஊரேது பேரேது உன்தகப்ப னாரேது
ஆருடைய வங்கிஷமென் றறிந்திடநான் சொல்லுகிறேன்.
பூச்சக்கிர வாளமுடன் [3]பொன்னுலகைத் தான்படைத்தோன்
ஈசேசு கிறிஸ்து யிறையவனா ரென்தகப்பன்
அரியசரு வேசுவரனா ராகமத்தின் தீட்சைபெற்று
வரிசை செறிமோட்ச வழிநடக்குஞ் சாதிகண்டாய்
அண்டபிண்ட முங்கடந்து அகண்டசரு வேசுவரவனார்
விண்டுரைசெய் தேவளரும் வேதமதி லென்பேரும்
மரிகருதா ளென்றுநல்ல மாணிக்கத்தின் பேராகும்
அரியதிரு மெஞ்ஞான வர்த்தமது கொண்டிருக்கும்

சேயிழை - செம்மை + இழை - சேயிழை (செம்மையான ஆபரணம் அணிந்த பெண். ஏந்திழை - அழகிய ஆபரணம் அணிந்த பெண். காமவெறி - காமப் பைத்தியம்; அறிவினை இழக்கும் தீராப் பெருங்காமம். சக்கிர வாளம் - பூமியைச் சுற்றியுள்ள மலை.

சுவடிச் சொல்

1. சேய்யிழை 2. கருவே 3. பொன்னுலசை

After having been brought, 'Oh' king Oliver cruel,
Why have you summoned me hither?
Tell me the matter! Oh! King' she said.

King's queries and Virgin's reply

The king (addresed) the luminous damsel, chaste and fuming,
'The place and name of thy father,
Ancestry of yours, do inform me' he said,
On hearing words those, replied the bejewelled damsel,
Looked she at the king to speak in response
'Oh king beyond praise! what makes you flatter and, enquire me?'
At this reply did king Oliver utter,
Passion rising in mind, said he in frenzy lustful
'Do you belong to a caste respectable mentioned in Carvēcuvaraṉ's gospel of truth,
Oh! honey! or a jew?,
Tell me, thou elegant girl!
The girl with flowered locks and jewels pretty
Did reply on the strength of grace divine,
'Place, name father's ancestry,
Inform I shall for you to know'
'He who created the orb of earth prosperous and this world golden,
Lord Jesus Christ is the father mine,
Having secured initiation of the scriptures of Carvēcuvaraṉ,
Belong I to the caste that leads to the heavenly path proper,
By the scripture that elucidates and interprets
Lord universal (Carvēcuvaraṉ) who transcends cosmos and flesh,
My name is Mary Karutāḷ that of emerald fine,
Which means wisdom true, graceful and rare'.

என்றுகன்னி சொல்லவேதா னேங்கியோலி வோருமன்னன்
மண்ணுலகில் நம்முடனே மகாமோசம் பேசுகிறாள்

மன்னன் சினம்

பாருங்கள் எந்தன்முன்னே [1]பஞ்சமத்தைப் பேசுகிறாள்
நேருநிற்கும் பெண் [2]கொடியை நிஷ்டூரம் பார்த்துரைப்பான்
பொறிகொண் டெழும்பிமிக பொங்கியேதான் மோகமதால்
வெறிகொண்டெ ழும்பிமன்னன் வெகுகோபங் கண்சிவந்து
மாதவத்தைப் பார்த்து மதிமயங்கி யேதுரைப்பான்
காதலித்து யென்னையும் கலியாணஞ் செய்யவேதான்
வேணுமென்று தானொலிவோர் மெய்தவத் தில்பார்த்து
பூணும்படி பொல்லாத புத்தியவன் சொன்னதற்பின்

மன்னன் கடமையை உரைத்தல்

அரியதவக் கொழுந்தா ளப்பொழுதங் கேதுரைப்பாள்
வரிசைசெறி மன்னவனே [3]வாள்வேந்தே நீர்கேளும்
உன்னுடைய [4]ராச்சியத்தி லுனதுகுடி யானவர்கள்
மன்னவனே யுந்தனுக்கு மக்களல்லோ நாங்களெல்லாம்
ஆதரவு யில்லாத அகுதிபர தேசியர்க்குங்
காதலனைத் தானிழந்த கைம்பெண்ணோர் தங்களுக்கும்
தந்தைதா யில்லாதவர்க்கும் தரித்திரிய மானவர்க்கும்
மைந்த ரெனக்காத்து [5]வளர்ப்பதல்லோ உன்பெருமை
கன்னிமட மாதருட கற்புடைமை காக்கிறதும்
நன்றிதமாப் பார்த்து நடத்துவதுன் கீர்த்தியல்லோ
புருஷன் றனையிழந்த பூசைமட மாதருட
வருதல் வெகுபாவம் வாராமல் காக்கிறதும்
நீதியல்லோவுன் பெருமை நீள்புவியிலே விளங்கும்
சோதிமணி மார்பனேகேள் சொல்லுகிறே னின்னமொன்று

பஞ்சமம் - தீமை. பூணும்படி - அணியும்படி. அகுதி - அகதி; ஆதரவற்றவர். தரித்திரிய - வறுமையுடைய.

சுவடிச் சொல்

1. பஞ்சமெத்த 2. கொடியே 3. வாழ் 4. நாச்சியத்லில் 5. வளர்ப்பதல்வோ

As the virgin thus spake, king Oliver longing (said)
'On this earth', she badly speaks.

The king's anger

'See how she speaks so foul in presence mine',
Harsh and severe, he looked at the girl and spoke,
With sparks flying and lustful passion rising,
Rising in frenzy, the king in anger flushed,
In dazed mind looking at the (girl) pious
'I love you and want to marry too',
Oliver told her, the damsel pious and great
Advised he wickedly thus and then

Proclaiming the glory and greatness of the king

The pious girl of penance rare said then and there,
'Oh! king of dynasty proper, hail Oh! king, pray listen.
In kingdom thine, your subjects all,
We are all thy children, aren't we?
For beggars who have no support,
To the widows who have lost lovers theirs,
Those who of their parents deprived and to the poor ones,
Doesn't your greatness lie in protecting them like children?
To preserve the chastity of damsels virgin,
And in treating them nice, lies your fame,
To go after women who have their husbands lost,
Is a sin grave, which occurrence avoid thou must,
Not just for you Oh! the one donning luminous gems on your chest,
Pray listen to yet another point that I say,

தனது[1]மக ளானவளை தகப்பனா ரானவர்தான்
கனத்ததொரு மோகமுற்றுக் கலியாணஞ் செய்வதுண்டோ
வன்புகொண்டு தன்குடியில் மன்னர்துரை யானவர்கள்
தன்பலங்கள் கொண்டு தவறுதலைப் பண்ணுவாரோ

மக்கள் பயிரெனல்

வேலிபயிரழித்தால் விளைவதுண்டோ மன்னவனே
வேலி பயிர்காத்தால் விளையும் பயிரதுதான்
அத்தன்மை போலவேதா னடியா ளொருபயிரும்
[2]உற்றபுகழ் மன்னவனே யுன்காவல் வேலியல்லோ
மன்னவனே நானுனக்கு மகளல்லோ வுன்பதியில்
அன்னையுநீ தந்தையு[3]நீ யடியாரைக் காப்பதுநீ
என்றுகன்னி சொல்லவேதா னிசைந்தொலிவோ ரேதுரைப்பான்

மன்னன் மரியை இகழ்தல்

கன்றிமனம் பொங்கியவன் காமவெறியா லுரைப்பான்
பாருமிவ ளெந்தன்முன்னே [4]பஞ்சமத்தைப் பேசுகிறாள்
யாருமிவள் வடிவுக் கம்புவியி லொப்பாமோ
பரம்பொரு ளான பரஞ்சோதி யாங்கிறிஸ்து
உயர்மிகுந்த வேதமதி [5]லுயர்ஞான தீட்சைபெற்று
மோட்சவழி நடந்து முத்திபெறுஞ் சாதியென்று
தாட்சியுடன் சொல்லுகிறாள் சபையில்நின்று சங்கைகெட்டு
சொல்லுகிறாள் வெட்கம்விட்டு தோகையிவ ளைப்பாரும்
நல்லவங் கிஷத்திலுள்ளாள் நங்கைபங்க மில்லாமல்
ஐயரேசு கிறிஸ்து யருள்வேதந் [6]தன்னிலுதித்து
மைவிழியாள் போன மயக்கமதைப் பார்த்தீரோ

ஏசுவை இகழ்தல்

சருவேசு வரனுடைய தனதுவே தந்தனையே
திறமாகச் சொல்லுகிறேன் சித்திரமே நீர்கேளும்
விண்பக்தி [7]மோட்சத்தை விட்டிறங்கி யேயிறைவர்
மண்ணுலகி லுள்ள மனுவுருக் கொண்டுவந்தோன்

தாட்சி - இழிவு. சங்கை - முறைமை. பங்கம் - குறைவு. தோகை - மயில்; மயில் போன்ற மரி. மனு - மனிதன்.

சுவடிச் சொல்

1. மகளானவளே 2. உத்தபுகழ் 3. நீரடியார் 4. பஞ்சமெத்த 5. லுயர்மிகுந்த 6. தன்னிலுத்து
7. மோகசிஷத்தை

Will a father in lust so heady,
Ever marry his daughter?

The king is the protection

Those who have become kings by their subjects' affection,
Will they err on account of their might?
Will plants ever grow if the fence grazes them? Oh! king,
The plants will flourish when the fence gurards,
Similar to a plant am I, a humble girl,
Isn't thy protection the fence?' Oh! king glorious
Oh! king, am I not your child in city thine,
Mother art thou and father too you are, you protect the devoted ones'
As the virgin thus spake, Oliver the king remarked,

The king's slanderous outburst

Speak he did in a mind raging with passion lustful,
'See how she talks too much in presence mine,
Can anyone match her in looks on this earth beautiful
Of God Absolute, the light of Heaven,
Initiated in the high wisdom of scripture exalted,
As one who belongs to the caste of
Those who attained *mukti* (eternity) that way, she says'
Proclaims she prouldly, here in this assembled court without shame.
'See the girl who speaks shamelessly,
The girl of a good family flawless,
See how the mascara-eyed maiden has in delusion gone,
The way of the gospel of Lord Jesus Christ.

The King slanders Jesus

The scripture of Carvēcuvaraṉ (Lord of All),
I shall utter in terms proper, listen, picturesque one,
Descending from eternity in Heaven the Lord,
Did he take the shape of man on earth,

பன்னிரண்டு சீஷர்களைப் பாருலகில் கொண்டுவந்தோன்
பின்னு முபதேசம் பேருலகில் சொன்னதினால்
செருசலையின் வாழ்சூதர் சிலுவைமர மானதிலே
குருதி சொரிந்திடவே கொலைகள்செய்து கொன்றார்கள்
[1]இவனுடைய வேதமதி லெப்படிநீ தான்போனாய்
அவனி தனிலுனைத்தா னாகடியம் பண்ணுகிறார்
[2]என்றொலிவோர் சொன்னதுக்கு யேந்திழையா ளேதுரைப்பாள்

கன்னி இயேசுவின் பெருமை கூறுதல்

மண்ணுலகத் தோர்தமக்கும் வான்கதிதே டாதவர்க்கும்
பகையாக வேயிருக்கும் பழிப்பினைகள் சொல்வார்கள்
நகையாகவே சிரிப்பார் நரகவழி யில்நடப்போர்
ஆனா லிதுக்கோர டமானஞ் சொல்லுகிறேன்
தேனார் மகுட முடித் தேர்வேந்தே கேட்டருளும்
கண்ணோஷக் காரருக்குங் கட்டைகிடக் கும்விழிக்கும்
விண்ணிலொரு சூரியனைப் பார்க்க வெகுபகையாம்
அத்தன்மை போலவேதா னாத்துமத்தின் கண்ணறிவும்
உத்தவே சொல்லிவந்தா லுந்தனுக்குக் கோபமுண்டாம்
ஞானசூ ரியக்கடவுள் நாதர் சரு வேசுவரனை
தானறிவான் கண்ணாலே தான்பார்க்க வேபகையாம்
பரமஞான தீட்சை பாருலகில் கரிஷமாம்
கரவில்லா தேயிருக்கும் தர்மவழி யானதிலே

சீஷர் - சீடர். குருதி - இரத்தம். ஆகடியம் - பரிகாசம் அடமானம் - உவமை. கண்ணோஷம் - கண் கூச்சம். கரிஷம் - உலர்ந்த சாணம்.

சுவடிச் சொல்

1 யிவனுடைய 2. யென்றொலிவோர்

Brought he disciples twelve to this world,
As he did preach gospel further in this world wide.
The wicked Jews of Jerusalem, in the Cross, wooden,
Made him bleed profusely and killed him too,
How did you adopt his gospel?
On this earth, they are misleading you'
Said Oliver thus, to which replied the damsel bejewelled,

Virgin proclaiming the greatness of Lord Jesus

'To the dwellers on earth and those who do not aspire for heaven,
Hostile and derisive remarks, they will utter
Laugh in scorn, the hellbound people,
An example shall I give for this, Oh! charitable king,
'For those with eyes defective and vision blocked,
The sun in the sky is an eyesore hostile,
Similarly the vision and knowledge of soul's gospel,
Will anger you in revelation proper,
Good, the sun of wisdom, Lord Carvēcuvaraṉ
To see with one's own eyes of knowledge, an aversion,
The initiation into heavenly wisdom is but saline on earth,
In the path of virtue no sacrifice will there be,

பிரபலமாய் நீங்கள் பெருங்கிருபை யானதிலே
[1]ஈறில்லா மெய்ஞ்ஞான மின்பமது போலிருக்கும்
மண்ணுலகி லாசைவைத்தால் வரங்கிடைக்க மாட்டாது
புண்ணியத்தைத் தானறிந்தோர் பொய்வாழ்வை மெய்யெனவே
யெண்ணி யிருப்பார்க ளென்றறிநீ மன்னவனே
புண்ணிய மெய்ஞ்ஞானம் பிரித்தெழுதும் வாசகத்தில்
[2]என்னுடைய சற்குருவே ஈசேசு கிறிஸ்துதம்மை
பின்னுமேதான் யூதர் பெரியகுரு [3]சரணதிலே
பாடு படுத்தியேதான் பாதகர்கள் கொன்றதுவும்
நீடுபுகழ் மன்னவனே நீயறிந்த வாறேது
எந்தவித மெந்தவகை எந்தனுக்குச் சொல்லுமென்றாள்
அந்த நேரந்தனிலே யவனுரைக்கும் வாசகந்தான்

மன்னன் சருவேசுவரன் கொலைக்குக் காரணம் கூறுதல்

எந்த னரண்மனையி லிருக்குதுங்கள் புஸ்தகந்தான்
உங்கள்சரு வேசுவரனாருல கில்மனு வாகவந்து
நடந்து உபதேசம் நானிலத்தில் சொன்னதினால்
அடந்து செருசலை[4]யோ ரவரைச் சிலுவையிலே
[5]ஊறுபடக் கொன்றதெல்லா மொழுங்காக வேயெழுதி
வீறுகொடு புஸ்தகத்தில் விரிவாயி ருக்குதல்லோ
[6]என்றொலி வோர்சொல்ல யெதிர்மொழிக ளேதுரைப்பாள்

மரிகருதாள் மறுமொழி

ஒன்றுபடச் சொல்லுகிறே னுத்திரங் களைக்கேளும்
மண்ணுலகும் விண்ணுலகும் வாருதியுஞ் சூரியனும்
எண்ணியொரு நொடியி லிமைக்குமுன்னே தான்படைத்தோன்
தானாகவே யிருப்பான் தனிச்சுயம தானபரன்
ஞானபரன் சற்குருவாய் நானிலத்தி லேயிறங்கி
பாவபுண் ணியமறிய பத்துநெறி கற்பினையும்
வளர்ந்துதிகழ் மோட்ச வழிநடக்க வேணுமென்று
அங்கங்கே யெல்லவர்க்கு மாண்டவனும் தோன்றிநின்று
[7]இங்கிதமாய்ப் புத்திசொன்னா ரிறைவரே அக்கிறிஸ்து

சரண் - அடைக்கலம். நானிலம் - உலகம் (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்). ஊறு - துன்பம். வாருதி - கடல். இங்கிதம் - இனிமை.

சுவடிச் சொல்

1. யீறில்ல 2. யென்னுடைய 3. சரனதிலே 4. யோரவரே 5. யூறுபட 6. யென்று 7. யிங்கிதமாய்

As a popular man when thou attain the grace divine
That will be endless bliss of wisdom true.
If one has desires of this earth, no boon will be granted,
Those aware of virtue, will deem illusory life true,
Know this, Oh! king,
In the Holy Text that distinguishes virtue and wisdom true
My mentor benign Jesus Christ,
How he in the custody of the high priest of Jews
Was tormented and killed by the wicked ones,
Oh! king of lasting glory! how did you come to know?
How and in what manner, tell me
At that time, what he said was

Olivor telling the reason for Carvēcuvaraṉ's crucifixion

In my palace in your Book (The Bible)
Your Lord of all, on earth arrived as man,
As he walked and preached on all quarters four of this earth,
On reaching Jerusalem the people there, in the cross
Caused him cruel hurt and killed; all this properly written,
In that poignant book, elaborately indeed'
As Oliver spoke thus, she replied

The reply of Mary Karutāḷ

'I shall tell you cogently, listen to my reply
Earth and Heaven, Ocean and sun,
He who created them in a trice before the wink of an eye,
His own self he will be, God Absolute and unique,
Wise One of Heaven, descending on earth as a mentor good
To know vice and virtue, the Ten Commandments and charity,
To promote them in order to tread the path of eternity,
Here and there appeared as God and stood.
Did God advise thus prudently, That Christ,

கிறிஸ்துவின் உபதேசம்

ஒப்பித்தார் ஞானமுப தேசமான தைத்தான்
[1]இப்புவியில் மெய்தா னிறைவரே அக்கிறிஸ்து
சொல்லுங்கள் பாவத்துக் கறவேதீட் சைபெற்று
எல்லவரு மோட்ச மிடமறிந்து பெற்றிடவே

வேத நன்மை கற்பித்தல்

காட்டுங்கள் வேதநன்மை கற்பித்தார் சீஷருக்கு
தீட்டும் பரமகுரு சிலுவை யிடக்கியமும்
கரத்திலிறு கப்பிடித்த கர்த்தரே அக்கிறிஸ்து
பரத்தி லெழுந்தருளிப் பரமகுரு போனதுவும்
போனதற்பின் னின்னமிந்த பூமிதனி லேயிறைவர்
தானே வருவதையுஞ் சருவசங்கா ரங்கள்செய்ய
நடுத்திறந்து யெல்லவர்க்கும் நன்மைதின்மை யுங்காட்டி
அடுத்தெரியு மக்கினியி லனைவரையுந் தள்ளுவரே
தள்ளுவரே கீழ்நரகில் சரீரயபை யங்களுடன்
அள்ளுவரே தன்பதிக்கு யானநன்மை யானவரே
இந்தடவே நல்லபுத்தி யேகமனு வோர்தெளிவீர்
சுந்திரஞ்சே ராதிபரன் சொல்லுமிந்த காலமதில்

ஏகபரன் பொன்னுலகம் போதல்

[2]சேர்ந்திடுவீர் நீங்களென்று சீஷருக்குத் தானருளி
போற்றரிய யேகபரன் பொன்னுலகந் தான்போனார்
இப்பெரிய காரணத்தை யேனொளித்தாய் மன்னவனே
செப்புகிறாய் தூஷணமாய்ச் சிலுவையிலே செத்தானென்று.

தேவன் மண்ணுலகம் வந்த வரலாறு கூறத் தொடங்குதல் விருத்தம்

9. அண்ணலாம் பரம சோதி யனைத்தையும் படைத்த நாதர்
மண்ணிலே குருவாய் வந்து வளர்செறி சிலுவை மீதில்

சங்காரம் - அழித்தல். சரீரம் - உடல்.

சுவடிச் சொல்

1. யில்புவி 2. சேத்திடுவீர்

The preaching of Christ

Did utter precepts of wisdom only,
Christ is verily God on this earth,
State it, to dispel sin utterly,
And for all to initiate the attainment of eternity.

Teaching Gospel or the benefit of scriptures

Please show that he taught gospel to disciples,
The great mentor did the cross bear,
Held it tightly in hand, Lord Christ,
Left he for Heaven, the great mentor
After he left, God, back to this earth
Arrived on his own, to destroy (evil) all,
To reveal bare for all good and bad,
To indicate those who push all into hell fiery,
And those who push to abysmal Hell for bodily refuge,
To identify the benefactors who lead to His place
Be clear that this Gospel in advice sound,
When the Graceful Lord prime, so uttered,

Ēkaparaṉ (the sole God) reaches the Golden World (Heaven)

Spread this (gospel) He told his disciples in grace,
And left for the world golden, the sole God
Why did thou hide this reason great? Oh! king,
You speak ill that he simply died on the cross

The Lord proclaiming the history of the earth

9. Lord, creator of all, venerable soul luminous,
Arrived on earth as mentor and on the cross,

விண்ணவ ரிறந்த வாறும் மீண்டுபின் னெழுந்த வாறும்
ஒண்ணொண்ணா யொலிவோர் மன்னா வுரைத்திடக் கேளு மென்றார்.

ஒலிவோர் மறுக்கக் கன்னி பதில் கூறுதல்

அம்மானை

10. என்றமொழிக் கப்போ யிசைந்தொலிவோ ரேதுரைப்பான்
மண்ணுலகில் முன்னோர் வணங்கிவருந் தேவர்களை
வேத புராணமதில் வேதியருஞ் சாஸ்திரமும்
ஓதி யுணர்வதெல்லா முறுநரகத் தின்வழியோ
உன்னுடைய தேவ னுயர்சிலுவை யானமர்ந்து
தன்னி லிருந்தவனை சாற்றுகிறாய் தேவனேன்று
அப்பொழுது கன்னிசொல்வா ளவனை முகம்பார்த்து
[1]இப்பொழு துனதுபுத்தி யின்னந் தெளிவில்லையோ
செப்புகிறேன் கேளுமன்னா திறமா யுனக்குமின்னம்
ஆதி[2]முடி வில்லாதோன் அனைத் துயிர்க்குங் காரணமாய்
நீதிக் கடவுள் நிறைந்தசரு வேசுவரனார்
மண்ணுலக மோட்சநன்மை விரும்பாம லேதிரிவார்
நடந்து நரகவழி நானிலத்தி லெல்லாரும்
கிடந்துமுந்தா தபடிக்கே கிருபைக் கடல்பெருகி
சருவே சுவரன்றனது தாட்சிதனைக் காட்டிமண்ணில்
அறிவாக வந்தார்கள் ஆனபுத்தி வார்த்தைசொல்லி
குருவாய் மனுவடிவே கோலமெ னுஞ் சடத்தை
அருவாம் பரஞ்சோதி யணிந்துகொண்டு வந்தார்காண்
கொண்டுமனு வோருடைய கொடிய பவம்போக்க
அண்டபிண்ட முங்கடந்து அகண்டபர மபதியில்
நின்றிலங்கு மேகபர னீள்நிலத்தில் வந்திடவே
இருகதிரு மிஞ்சுகின்ற இரத்தியொரு கன்னிகையே

வேதியர் - வேதம் ஓதுபவர். தாட்சி - தாழ்ச்சி. பவம் - பிறவி. இருகதிர் - சூரியன், சந்திரன். இரத்தி - ரதி போன்ற.

சுவடிச் சொல்

1. யிப்பொழுது 2. முகிவில்லாதோன்

How he died and how he did resurrect,
Narrate I shall events one by one, Oh! king, pray listen' she said

Oliver's objection and Virgin's reply

10. To this question, Oliver in response countered,
'On this earth, the Tēvars worshipped by our forbears,
Priests well-versed in mythologies and the scriptures,
Is learning them all a path to hell?
Your Lord, who was fixed on the cross,
And died, You call him God',
Then did the virgin look at his face and reply,
'Hasn't your mind yet become clear?
Tell you, I shall in terms clear, Oh! king, listen,
He who has no beginning or end, source of all life,
God of justice and Lord omnipresent of all,
(For) those who did not aspire for eternity on earth,
For all on earth not to tread the path of Hell,
In mercy and grace surging as an ocean
Showed he the power of Carvēcuvaraṉ (Lord of all)
Arrived as knowledge on earth, speaking words of wisdom,
As mentor in human guise and body,
The formless Luminary Absolute adopted and arrived
Adopted to remove the grave sins of man,
He who transcends the universe and flesh in heaven wide,
That Ēkaparaṉ (sole God) arrived on earth long,
A virgin who excelled luminous beams both,

வரிசைசெறி பன்னிருவர் மன்னவர்கள் வங்கிஷத்தில்
உண்டாக்கி யேயவளை யுலகோர்துதித்திடவே
எண்டிசையில் மாமனுவோ டேத்தம் பெற்றிடவே
சகலபுண்ணி யங்களினால் சருவேசு வரன்சோதி
புகலரிய நன்மைகொண்டு புவியி லலங்கரித்து
சூரிய காந்தியொளி துலங்கும் பளிங்கதனால்

கன்னி திருவயிற்றில் உருவெடுத்தல்

பாருலகில் கிரணம் பற்றிநின்ற வாறதுபோல்
கன்னி திருவயிற்றில் கடவுள்சரு வேசுவரனார்
தன்னுடைய யேகபுத்தி தான்வந்து உண்டாக்கி
பூரணக் கன்னிமரி பூவை [1] யுதித்ததாலே
காரண மாகவேதான் கருவா யுருவெடுத்து
அரியதொரு மேலான யாத்துமமு முண்டாகி
ஒக்கவேதான் தெய்வீக உடல்கலந்து ஒன்றாகி
திக்கெனவே சட்டையென தெய்வீகத் தால்மூட்டி
வேண்டிசெறி கன்னிகற்பின் வெண்மை குறையாமல்
செங்கதிரோன் றன்கிரணம் சென்றமைந்து தன்பளிங்கால்
அங்கத்தில் பற்றி யமைந்தெழுந்த வாறதுபோல்
தெய்வஞானப் பளிங்கால் திருமரியா ளானகன்னி
அவ்வைதிரு வயிற்றில் அமைந்தெழுந்து மண்ணில்வந்து
நீண்டபரன் சற்குருவாய் நீதிவழி யுங்காட்டி
ஆண்டு முப்பத்துமூன்று அம்புவியி லேயிருந்து

இறைவன் எழுந்திருத்தல்

புகலரிய தேவகுரு பூதலத்தோர் முத்திபெற
சகலபுண்ணி யங்களொடு தாட்சிவழி யுங்காட்டி
தம்மைப் பாடுபடுத்தித் தரணியோர்க் காகவேதான்

எண்டிசை - எட்டு திசை. சகல புண்ணியங்கள் - அனைத்து நலங்கள். சூரிய காந்தி ஒளி - சூரியனின் பிரகாச மான ஒளி. அவ்வை - தாய். தரணி - பூமி.

சுவடிச் சொல்

1. யுதிர்த்தாலே

Created in a dynasty of twelve kings in succession,
Made her an object of worship for the people of the world,
For all human beings in directions eight to be redeemed,
On account of good deeds all, Lord of all and Light
For benefit beyond mention adorned earth,
Like a crystal bright as shining sun,

Birth in the virgin's womb

The earthly world remaining as in an eclipse.
In the womb graceful of the virgin, the Lord of all,
His sole son he did create,
The virgin perfect, Mary a flower shed,
With a purpose a conception caused,
Created a soul rare and high,
The divine in unison mingling with a body human,
In divinity wearing the directions as garments,
Without lessening the chastity exalted of the virgin,
Like a beam of the crimson sun illuminating
Took shape in the womb of virgin Mary,
And came to this earth as if arising
As mentor absolute showed he the path of justice,
Lived for years thirty and three on that earth.

The Resurrection

The mentor divine beyond description, for the people of the earth
to attain eternity,
Showed the path sure with virtues all,
Hurt Himself for the people of the earth,

கர்மத்தை விட்டொதுக்கிக் கடவுளை ழுந்திருந்தார்
உதிரத்தி னால்மூன்று உலகமதை யீடேற்ற
சதிரத்தின் முத்தியுடன் றாமே யெழுந்திருந்தார்
உன்னித் தனைமூண்டு உயிரோ டெழுந்திருந்தார்
அண்ணல்பர மண்டலத்தில் பராப ரத்துடனே
எண்ணரிய சேசுவர னெழுந்தருளும் நேரமேதான்
ஒன்பதுகூட் டஞ்சேனை வொளிசிரிஷ்யும் விண்ணவர்கள்
இன்பமுடன் தெண்டனிட்டு யிருசரணத் தைச்சுமக்க
வந்துவந்து சோபனங்கள் வாழ்த்தி மலர்தூவ
சுந்தர ஞானகுருவே சூழ்ந்திசைகள் பாடவேதான்
போயிருந்தார் மோட்சமதில் பொன்னுலகத் தோர்புகழ
துய்யபர மக்கடவுள் சுடரொளிகள் வீசிடவே

இயேசுபிரானே அனைத்துமாக இருத்தல்

இவரேதா மாயிருந்த யேகப் பரம்பொருள்தான்
இவரே புவிபடைக்க முன்னிருந்த யேகபரன்
இவரே நன்மை யெல்லாந் தருபவரும்
இவரே யெங்குமிருந்த யேகஞானச் சொரூபி
இவரேதான் காரணமாய் எப்போதுமே யிருந்தோன்
இவரே படைப்பவரு மிவரேய ழிப்பவரும்
இவரே பொருளனைத்து மீடேற்றிவா ரவரும்
இவரே புவியிலிரு ளறுக்குஞ் சூரியனாய்
இவரே விளக்கெரிய யிப்புவியில் வந்தவரும்
இவரே சகலரையு மெல்லாம் படைப்பவரும்
இவரே யுருவெடுத்து யெல்லவர்க்குந் தானானோன்
இவரே கொடுப்பவரு மிவரே யழிப்பவரும்
இவரே பரமகுரு யெவ்வுயிர்க்குந் தானானோன்
இவரே நடுக்கேழ்க்க யிப்புவியில் வாரவரும்

உதிரம் - இரத்தம். சதிரம் - உடல்.

Brushing aside activities worldly, God remained supreme
To redeem worlds three by his blood,
Eternal in body human, Himself resurrected
He did rise again of his own volition
The venerable soul in heaven along with God of the universe,
Jesus, rare of thought, in grace remained
Heavenly beings showing light in an army of congregations nine
Knelt happily and carried feet both,
Came over and again, with flowers to bless the consummation,
The wise mentor handsome was sung by surrounding directions,
Had been to heaven eternal for those of that world golden to eulogize,
God, pure and prime, shedding beams of light so bright

Jesus remains all-in-all

He alone is the Absolute one on his own,
He only as God Absolute, earth's creation initiated,
He alone is for the benefit of all,
He is the embodiment of wisdom, sole and omnipresent,
He alone is the cause (of all) for ever
He only is the creator and destroyer too,
He alone redeems things all,
He alone is the sun that on earth darkness dispels,
He alone arrived on earth to light a lamp,
He only creates one and all,
He alone took shape for all as one,
He only gives and also destroys,
He alone is the mentor prime for lives all
He only on earth arrives for arbitration,

இவரே மழைகாத்து யெல்லவர்க்குந் தந்தவரும்
இவரே யரசருக்கு இரத்தினமுடி சூட்டினவர்

சகல சுடரும் வகுப்போன்

இவரே சகல சுடரெல்லாம் வகுப்பவரும்
இவரே யறியாத இராசதுரை மன்னவர்கள்
இவரே நரகத் திருள்சிறையில் வைப்பவரும்
இவரே நீதிகேட்டுப் பெருநரகில் தள்ளுவரும்
இவரே பரமபதியி லிருந்து யிறங்கினவர்
இவரே மரிமகனா [1]யிப்புவியில் வந்தவரும்
இவரே குருவாகி யிப்புவியில் மானிடர்க்கு
இவரே யுபதேச மிப்புவியில் சொன்னவரும்
இவரே மனுவோர்க ளெரிநர்குக் கேகாமல்
இவரே பாவம்பொறுக்க யேசுபர தேசிகர்தான்
இவரே சிலுவைதனி லிருந்து யிறந்தவரும்
இவரே மரித்தடக்கப் பட்ட அந்த [2]மூன்றாம்நாள்
இவரே யுடலு முயிரொருங் கூடறைத்து
இவரே சிலுவை யிடக்கிய முங் கைப்பிடித்து
இவரே யெழுந்திருந்து யிப்புவியில் வந்தவரும்
இவரேதா னாற்பதுநா ளின்பமுற புத்திசொல்லி
இவரே தமது அன்னைதுயர் மாற்றினவர்
இவரே தமதுடைய யிலங்குஞ்சிலு வைமரத்தை
இவரே வணங்கவைத்து யிப்புவியோர்க் கேயருளி
இவரே பரமபதிக் கெழுந்தருளிப் போனவரும்
இவரே நெருப்பாலே யிப்புவியைத் தானழித்து
இவரே சகலரையு மிப்புவியி லேயெழுப்பி
இவரே நடுத்திறக்க யெழுந்தருளி வாரவரும்

காத்து - காற்று.

சுவடிச் சொல்

1. புவியின் 2. முண்டாநாள்

He alone for all has given rain and wind
He alone did coronate the king with a crown of gems,

He who has endowed lights all

He only has created lights entire,
The kings of mastery royal unaware of Him,
He alone imprisons them in hell dark,
He only demands justice and pushes in hell vast,
He alone from heaven has descended,
He only came as Mary's son on this earth,
He alone became mentor for mortals on earth,
He alone uttered precepts on this earth,
He alone (to prevent) the human beings from reaching hell,
He only bore the sins, the sole and prime God,
He alone on the cross died,
He only on the third day after death and burial,
He alone held body and life in union
He only held the cross in his hand,
He alone rose again and on earth arrived,
He only for forty days did advise for happiness,
He alone did dispel his mother's grief,
He only did the exemplary cross wooden,
He alone endowed to the people of earth for worship,
He only did reach heaven in grace,
He alone did destroy earth by fire,
He only did awake all on earth,
He alone arrives in grace to open the entrance (to heaven)

இவரே கணக்குரைத்து யிப்புவியில் பாதகரை
இவரே யுடலுயிரோ டேநரகில் தள்ளுபவர்
இவரே மனுவோரை யெரிநரகில் தள்ளியேதான்
இவரே தமக்குகந்த யெண்ணரிய நல்லவரே
இவரே பரகதியி லேத்தி முடிகொடுப்பார்
அரியபரம் பொருளோ னம்புவியில் வந்ததற்பின்
வரிசை செறிமோட்ச வழிநடக்க வேமனுவோர்
பாவபுண் ணியமறிய பத்துநெறிக் கற்பினையும்
தேவகுரு வானவர்தான் செகத்தில்வைத்துப் போனார்காண்
தப்பறைகள் வாராது சத்தியத்தின் பத்துவழி
ஒப்புரவாய்ச் சொல்ல உகந்துகேள் மன்னவனே

விருத்தம்

11. பத்துயர் ஞான நீதி வழிதனைப் பகர்ந்து பாருங்
கர்த்தனும் பரம சோதிக் கடவுள்தான் குருவாய் வந்து
வைத்திடும் பத்துநீதி வழியொடு நடந்தபேர்க்கு
முத்திசேர் பரம லோக முடியது கொடுப்போ மென்றார்

ஒலிவோர் சாஸ்திரப் பொருள் வினவுதல்

அம்மானை

12. என்ற மொழிக்கப்போ யிசைந்தொலிவோர் ஏதுரைப்பான்
மன்றல்செறி கன்னியரே வகுத்துரைநீ தான்கேட்க
உங்கள் சமயப்பொருளு முங்கள்தங்கள் சாஸ்திரமும்
மங்கையரே பொய்யுமெய்யும் வகுத்துரைக்க வேணுமென்றான்

கன்னி முதல் ஞானநீதிப் பொருள் கூறுதல்

செப்புகிறேன் கேளுமன்னா தேவபத்து நீதிதன்னை
ஒப்புடனே நானுனக்கு ஒழுங்குடனே சொல்லுகிறேன்

மன்றல் - மணம்.

It is he alone who provides an account of sinners on earth,
He only pushes them body and soul into hell,
He alone thus pushing people into hell fiery,
He only, the pious people preferred by him,
He alone will exalt to Heaven and crown them
After rare God Absolute arrived on earth,
For the human beings to tread the path of eternity in sequence proper,
The Ten commandments chaste to comprehend sin and virtue,
Did the Divine mentor of Heaven leave on earth
Without lapses, the Ten paths of Truth,
Cogently I shall utter, pray listen earnetly, Oh! king.

11. The tenfold path exalted, of wisdom and justice did he utter,
Lord Christ, luminous and prime, as mentor arrived,
To those who tread that path of commandments ten,
Did he assure the crown of Heaven'

The meaning of the scripture

12. To such remarks Oliver did reply,
'Oh! virgin profound, the discourse of division to hear,
Regarding our religious message and our scriptures,
Oh! damsel, falsehood and truth, analyse and tell us'

The message of the first wise percept

'I shall tell you the divine rules ten, Oh! king, listen',
In proper sequence congently I shall narrate

சர்வப்பொரு ளும்படைத்த தந்தைசரு வேசுவரனைத்
திறமுடனே புத்திகொண்டு சிந்தைதுதி கொள்ளுவதும்
உடக்கு நிலவுபொழுது மொளிவெளியு மோடிடவும்
அடக்குஞ் சகலபொரு ளம்புவியோர்க் கூழியப்போ
சந்திரனுஞ் சூரியனுந் தரணிமனு வானவர்க்கு
சிந்தைமகிழ்ந் தேயிறைவர் தீவட்டி யென்றுரைத்தார்
என்னையல்லால் வேறொரு தேவனில்லை யென்றுசொல்லி
தன்னைத்துதித் தேவணங்கத் தானெழுதி வைத்தார்காண்
முந்தின கற்பினையின் முகவுரைக ளல்வழிதான்
சிந்தைதெளிந் தேயறிவின் கண்ணாலே தேர்ந்திடுவீர்

இரண்டாம் ஞான நீதி கூறுதல்

உத்தயிரண்டாங் கற்பினையை ஓதுகிறேன் கேளுமன்னா
புத்திகெட்டு பூதலத்தோர் பொய்யாணை வீணாணை
செய்யா திருக்கச் சிறந்தெழுதி வைத்தார்காண்
துய்யமூன்றாங் கற்பினையை சொல்லுகிறேன் கேளுமன்னா

மூன்றாம் ஞானப் பொருள் கூறுதல்

திருநா ளொடுபூசை செபத்தியா னங்களொடு
வருநாள்கள் தோறுமேதான் வையகத்தோர் பூமியிலே
[1]இருந்து தன்மைகுறித்து யிப்படியே செய்துவர
புரந்தெழுதி வைத்தார்காண் பொன்னுலகத் தோர்இறைவர்

நான்காம் ஞானப் பொருள் கூறுதல்

நாலா வதின் பயனை நல்லமன்னா கேட்டருளும்
பூலோக மாமனுவோர் புண்ணியத்தி லேநடக்க

துய்ய - கலப்படமற்ற; பரிசுத்தமான. நாலாவதின் பயன் - நான்காவது நீதியின் பயன்.

சுவடிச் சொல்

1. யிருந்தி

He who has created all, father Lord of all,
To know firmly and to pray in mind,
The moon that prevails and the daybreak with its expanse lustrous,
All things contained are ordained for people on earth,
'The moon and sun for the humans on earth'
'Are but torches', said Lord God pleased in his mind
'There is no other God but me' he observed,
And in writing prescribed prayer and worship to Himself,
The precepts previous mean paths improper,
With minds clear choose by perception of intellect.

The moral of the second wise precept

State I shall, Oh! king, the precept second,
'People on earth shall not, in minds spoilt,
Act in falsehood or in activity wasteful indulge'
Thus had he written.

The message of the third precept

The pure precept third, utter I shall, Oh! king, listen,
'On days good and on days when prayer and worship
Are due, people on earth shall perform,
Such acts accordingly'. Thus in patronage wrote he.

The message of the fourth precept

Listen Oh! good king, the message of the fourth one,
For the people great of this earth to tread the path virtuous

தந்தைதா யானவர்கள் தங்கள்தங்கள் மைந்தர்கள்தான்
சிந்தையுறவே வணக்கஞ் செய்துசங்கை யாய்நடக்க
வேணுமென்று தானிறைவர் விரித்தெழுதி வைத்தார்தான்

ஐந்தாவது ஞானப் பொருள் கூறுதல்

பூணும்படியஞ் சாவதின் பயனைக் கேட்டருளும்
ஒருவர் தனக்கொருவ ருறுகொலைகள் செய்யாமல்
பொருத்தகரு ணைக்கடலோன் பிரித்தெழுதி வைத்தார்காண்

ஆறாவது ஞானப் பொருள் கூறுதல்

ஆறாவதின் பயனை யண்ணலேநீர் கேட்டருளும்
ஊறுகின்ற மோகநிலை உள்நெஞ்சில் வையாமல்
நீதிக் குறிகள்தப்பி நெறிகள்கட வாதபடி
சோதி பரமகர்த்தன் தொகுத்தெழுதி வைத்தார்காண்

ஏழாவது ஞானப் பொருள் கூறுதல்

ஏழாவதின் பயனை யெடுத்துரைக்க வேகேளும்
தாழாத புத்தி தவறாத வாக்குநிலை
களவுகுடி கள்செய்து கைப்பொருளை யேபறித்தல்
அளவில்லாத் துரோக மாமென் றெழுதிவைத்தார்

எட்டாவது நீதிப் பொருள் கூறுதல்

எட்டாவதின் பயனை யானுரைக்க வேகேளும்
வட்டமுள்ள பூதலத்தில் வழக்குநடுக் கேழ்வியில்
அழிவழக்கு பொய்சாட்சி அம்புவியோர் சொல்லாமல்

சங்கை - மதிப்பு. அஞ்சாவதின் பயன் - ஐந்தாவது நீதியின் பயன். ஆறாவதின் பயன் - ஆறாவது நீதியின் பயன்.
தாழாத - குறையாத. களவுகுடி - திருட்டு வாழ்க்கை. அம்புவி - அழகிய பூமி.

Their parents respective, the children shall
Worship mindfully in conduct respectful,
Thus has written the Lord elaborately.

The message of the fifth precept

Listen to the message beneficial of the precept fifth,
'One shall not kill another among people'
God, the vast ocean of mercy, has written distinctly.

The moral of the sixth precept

Listen, Oh! venerable sire, the message of the sixth precept,
'Not to deviate form the aims of justice and not to violate code of conduct,
The luminous and Prime God has in writing compiled'

The message of the seventh precept

Listen to the import of precept seven, which I elucidate,
'In mind unbinding, in words unfailing,
If one steals and drinks or lays hands on others' belongings
It is perfidy immeasurable' thus he wrote.

The message of the eighth precept

Listen to the eighth moral, which I reveal presently,
'On this earth round, amidst hearing of cases,
People of earth shall not a foul case make or false evidence utter',
Thus has the Lord written clear, Oh! Oliver, kindly listen.

தெளிவாகவே யிறைவர் தெரிந்தெழுதி வைத்தார்காண்
அன்பா லொலிவோரு அண்ணலே நீர்கேளும்
ஒன்பதான கற்பினையே ஓதுகிறேன் கேளுமன்னா

ஒன்பதாவது நீதிப் பொருள் கூறுதல்

தன்தார மல்லாமல் பிறதாரம் வையாமல்
அன்பாகவே யொருவர் மனையழிவு செய்யாமல்
பெரிதாகவே யிறைவர் பிரித்தெழுதி வைத்தார்காண்

பத்தாவது ஞானப் பொருள் கூறுதல்

பத்தாவதின் பயனைப் பண்பாகவே கேளும்
புத்திதனையே தெளிந்து புரந்தே தெளிந்தறிவாய்
ஒருத்தர் பொருள்தனக்கு உத்தாசை வையாமல்
பெருத்தகரு ணைக்கடலோன் பிரித்தெழுதி வைத்தார்காண்
இந்தமொழி பத்து மிரண்டான கற்பினையில்
அந்தமுட னேகடவு ளடக்கி யெழுதிவைத்தார்

சருவேசுவரனை அடைய புவி ஆசை விடுதல்

எல்லாத்திலும் பார்க்க யிப்புவியி னாசைவிட்டு
வல்லசரு வேசுவரனை மகாசினே கத்துடனே
அனந்தமான நன்மை யளவில்லா மோட்சகெதி
தாமுங் கொடுப்பமென்று தானருளி யேவகுத்தார்
பின்புகொண்ட கற்பினையைப் போந்துரைக்க வேகேளும்
தன்னைத்தான் சங்கையுற்றுத் தான்சினேகித் ததுபோல
உன்னிசகல மனுவோரு மன்புற்று டனிருக்க
வேணுமென்று தானிறைவர் வேதகற் பினையாக
பேணியிது மோட்சவழி யென்றெழுதி வைத்தார்காண்.

தாரம் - மனைவி. சிநேகம் - நட்பு. அனந்தம் - அளவில்லாத.

The ninth message

The ninth message chant I shall, listen Oh! king
'One shall not desire the wife of another,
And shall not such kind marital bond destroy',
Thus has written the Lord, in terms strong and distinct.

The moral of the tenth precept

Listen in refinement to the tenth message,
'One shall in mind clear and knowledge discerning
Not desire the belongings of another'
Thus has written distinctly Lord of mercy vast as an ocean,
These ten precepts, God-has written
In contents final with message clear.

Relinquishing earthly desires to reach Carvēcuvaraṉ (Lord of All)

To those relinquishing earthly desire in all respects and
Holding in friendship great, mighty Caruvēcuvaraṉ
Endless benefit and eternity unlimited,
'Provide I shall'; He has written
Listen to the message of the next precept,
'As one respects and loves oneself,
One shall love and respect all humans,
That is the path to eternity' Lord has written
As the message of gospel

கன்னியை வேதபுராணங்களின் பழமை வினவுதல்

விருத்தம்

13. அப்பொழு தொலிவோர் சொல்வர்
[1]அரிவையைச் சினந்து நோக்கி
இப்படி மனுவோர் மண்ணில்
யாவர்தா னடப்பார் சொல்லும்
ஒப்புட னிதுவு மன்றி
உலகத்தில் வந்து தோன்றி
தப்பறை நுமது வேதஞ்
சமையத்தில் உள்ள தாமோ.

அம்மானை

14. என்றுஒலி வோருமன்ன னெண்ணியெண்ணி வர்மமுற்றான்
வென்றிசெறி யெங்களுட வேதபுரா ணங்களெல்லாம்
பூருவக்கா லந்துவக்கிப் பூதலத்தி லேநடந்து
வாரயெங்க தேவர்களும் வளர்பெரிய கோபுரமும்
எந்தவிதம் வந்ததென்று யிப்பொழுது சொல்லுமென்றான்
அந்த மொழிகேட் டரியதவ மாதுசொல்வாள்
எங்கள்வே தத்தொழுங்கை யானுனக்குச் சொல்லிவந்தே
உங்கள்வே தத்தொழுங்கை ஓதுகிறேன் கேளுமன்னா

வேதப் பொருளைக் கன்னி கூறுதல்

பங்க மழிந்து பலஸ்திரீகள் கூத்தாட
அங்கே வெகுமோக மதட்டுமுங்கள் வேதமது
ஆறுபத்து [2]நூறுபெண்கள் அழிமதியாய் வைத்தவர்க்கு
வீறுபெற்ற மோட்சமென்று விரித்துரைக்கு முங்கள்மதம்

ஒப்புடன் - சம்மதத்துடன். தப்பறை - பொய்; சூது. வர்மம் - கோபம். வென்றி - வெற்றி. பூர்வ காலம் - பழங்காலம்.

சுவடிச் சொல்

1. ருவையை 2. துறு.

The hoary existence of scriptures and mythologies

13. Then said Oliver glaring at the damsel in ire great,
'Who among men on earth will conduct themselves thus?
Besides to compare, such an appearance,
False, do we have in our scriptures and religion?'

14. Thus did king Oliver reflect over and again and became hostile,
'Our scriptures and mythologies, mighty and profound,
In existence from times ancient and in vogue,
Our Tēvars and tall temple towers,
How did they come about, tell us now' he said
Replied the damsel dear, on hearing those words,
Narrate I did the import of our gospel,
State also, I shall the nature of your scriptures, listen, Oh! king

Virgin telling the scriptures

Women may dancing with chastity outraged,
Lust will dominate there in thy scriptures,
To those who kept women six thousand with intention vile,
Your religion ensures eternity vigorous

பாவநிலை கொண்டிருந்தால் பாருலகிலே மாண்ட
சீவன்றனைத் தேவனென்று செப்பிடுவீர் சாஸ்திரங்கள்
நாற்றவிடங் கடுகரித்து நாறுகின்ற கஷ்டமது
ஊத்தைவழிந் தேயிருக்கு முடல்தனையே தேவனெனப்
பொய்யாணை சொல்லிப் பொருந்துமுங்கள் சாஸ்திரங்கள்
மெய்யாணை சொன்னால் [1]வீணதுக் கென்றுசொல்வீர்
செத்தவர்கள் தன்னையேதான் தேவனென்று கோவில்கட்டிக்
கர்த்தனிவ னென்றுசொல்லிக் கையெடுத்துக் கும்பிடுவீர்
தேரோட்ட மோடத் தெருவீதி யானதிலே
பாராட்டிச் செத்தவற்குப் பாருலகில் பூசைசெய்வீர்
சொல்லிவரு முங்கள்மதஞ் சோறுகறி பூசைபண்ணி
யெல்லாருந் தின்னவேதா னிப்படியே கட்டிவைத்தார்
மாதா [2]பிதாவைமண்ணில் மைந்தர்வெகு நிந்தைசெய்வார்
நீதமுள்ள பேர்களென்று நெறியோது முங்கள்மதம்
கொலைபாத கங்கள்செய்தால் குற்றமில்லை யென்றுசொல்லி
நிலையான மோட்சமென்று நினைத்துரைக்கு முங்கள்மதம்
மோக விதங்களுக்கு முன்னடக்கு முன்றேவன்
வேகமுடன் மோகவிதம் விளையவைக்கு முங்கள்மதம்
பில்லிக்கு மோகினிக்கும் பின்புவரு முன்றேவன்
சொல்லுமஞ்சு மூன்றெழுத்தால் தொடர்ந்தழைத்துக் கொண்டுவரும்

சிவன் செயல்களைக் கூறுதல்

சொல்லுகிறேன் கேளுமன்னா துகைப்படியே நீகேளாய்
பில்லிக் குதவிசெய்து பேசுமே யுன்றேவன்
அரவைக் கழுத்தி லணிந்தானே யுன்றேவன்
பரவையர்க் குத்தூது பணிந்தானே யுன்றேவன்
அபாயமுடன் பாராம லரிவையர்கள் தங்களுக்கு

நிந்தை செய்வார் - பழித்தும் இழித்தும் கூறுவார். மோகம் - ஆசை. அரவு - பாம்பு. பரவை - சுந்தரர் மனைவியின் பெயர்.

சுவடிச் சொல்

1. வீணு 2. பிதாவே

One who dies on earth in state sinful
Thou wilt call that soul Tēvar, it is painful
That places where such scriptures are learnt, stink
The dirty body smelling foul as Tēvan̲ held,
And described falsely thus in scriptures with accord
Dismissing as futile accounts true
Calling the dead as Tēvar and raising for him temples too.
Worship him as God with hands folded
In the street for the chariot to move.
'Worship thou wilt in adulation, the dead on earth
To offer rice and meat and then for all to eat
Your religion has thus ordained
Sons who their mother and father deride,
Are just ones' declare your scriptures
Stating that heinous crimes are not offensive,
Your religion ensures eternity constant
Your Tēvan̲ (Lord) will lead in varieties of lust,
Your religion will generate varieties lustful
Your Tēvan̲ will follow close behind *pilli* (witch) and *Mōkin̲i* (seductress)
Will bring them along with the spells of words five and three lettered

Civan̲'s miracles

State I shall, listen Oh! king, listen in entirety,
Your Lord will assist witchcraft and speak also in support,
Your Lord did wear a snake around his neck,
Your Lord did act as a messenger to Paravai
Without caring for the danger to that damsel

உபாயமது சொல்லிமிக யுள்படுத்து முன்றேவன்
புரவி யெனும்நரியைப் பிடித்துவைத்த துன்றேவன்
பூவுலகி லுள்ளவர்க்குப் புத்தி மயக்கிவைத்துப்
பாவையர்மே லாசைவைக்கும் பத்திவைக்கு முன்றேவன்
உண்ணா முலையாளை ஒருத்தியிடப் பாகம்வைத்து
வண்ணாரப் பெண்மேல் மயலானா னுன்தேவன்
கூளியொரு பெண்வடிவைக் கொண்டு சடையில்வைத்துக்
காளியுட னாடுமந்தக் காரியல்ல னென்றேவன்
வெண்ணீ றணிந்து பிரமக்க பாலமேந்தி
எண்ணாமல் பிட்சை யெடுத்தலைந்தா னுன்றேவன்
அடலை யணிந்து யமர்ந்ததலை தான்விரித்துச்
சுடலை தனிலோடிச் சுழன்றானே யுன்றேவன்
வானிலி லங்குகின்ற மதிபுனைந்தா னுன்றேவன்
ஒருபாதி தானு மொருபாதி யுமையாளும்
இருபாதி யாக யிருந்தானே யுன்றேவன்
சடைமுடியில் கெங்கை தனையு மணிந்துவெள்ளை
விடையதனின் மேலேறி வீதிவந்தா னுன்றேவன்
பிட்டுக்கு மண்சுமந்து பிரம்பா லடிகள்பட்டு
வெட்டுக்கு நின்று விறகு சுமந்துவிற்று
மாணிக்கம் விற்று வளையல் சுமந்துவிற்று
வீணுக்குப் பாவலர்க்காய் விற்றுவிலை பேசிநின்று
திருக்கலியா ணங்கள்பண்ணத் தேவடியார்க் கேவல்செய்ய
[1]எருக்கமலர் மாலைகளு மெலும்புந் தானணிந்து
பல்லக்கி லேறிவந்து பள்ளியறை யுள்புகுந்து
சொல்லுக் கடங்காத துரோகங்களை யுண்டுபண்ணி

புரவி - குதிரை உண்ணாமுலை - உமையம்மை. காளி - துர்க்கை. சுடலை - சுடுகாடு கெங்கை - கங்கை நதி. விடை - காளை.

சுவடிச் சொல்

1. யெருக்க

Your Lord who binds by suggesting tricks,
Jackals as horses, your Lord did hold,
Deluding the minds of people on earth,
Your Lord who desires damsels and worships too,
Placed on his left, one Uṇṇāmulaiyāḷ
Your Lord of a washerwoman was enamoured,
Placed he on his locks matted, a witch of a woman,
And danced with Kāḷi - my Lord is not that black soul.
Smearing ash white and carrying skull,
Thoughtlessly roamed your lord abegging
Sporting ash and sitting with locks spread out.
Darted your Lord to the cremation ground and there whirled
Your Lord did wear the moon which to the sky belongs,
With Tirumāl on one half and Umaiyāḷ on the other,
Your Lord did remain in halves both.
Wearing Ganges on his matted locks and
Mounted on a white bull arrived your Lord,
Carried sand for *piṭṭu's* sake and was caned,
Stood he to cut and carry firewood for sale,
Sold he rubies and carried bangles for sale,
Sold futilely to poets and bargained in vain,
To conduct marriages and to serve courtesans,
Wearing *erukku* garlands and bushes to boot,
Rode he on palanquins and entered nuptial chambers,
Created betrayals treacherous beyond words.

திருமாலின் செயல்கள்

இரணியனைக் கொல்ல இசைந்ததொரு தூண்தனிலே
நரசிம்ம வேஷம் நலமாகத் தானெடுத்து
பூமி தனிலுழன்று புலையர்க் கடிமையுமாய்
மோகினி யென்றேபாரில் முயன்று வடிவெடுத்து
மேக நிறம்போலே முகுந்த வடிவெடுத்து
மாடு கன்றுக்காக மலையைக் குடைபிடித்துத்
தேடி யிடைச்சிமனை சென்றுவெண்ணெய் தான்திருடி
உரலிலே கட்டுண் டுகந்து மடிகள்பட்டு
விரலடக்கி ஊதுமந்த வியன்குழலைத் தானணிந்து
சங்கை ஓர்கரமுஞ் சக்கரத்தை யோர்கரமும்
பொங்க முடனிச்சை பொருந்தவே தானணிந்து
தேர்ந்துபதி னோராயிரம் பெண்களுக்குத் தானுகந்து
வாசந் தரயின்ப மணவாள னாயிருந்து
மனையாளுந் தானும் வனவாச மேபுகுந்த
வினைவகுத்தும் பொய்மானை வில்லெடுத்துத் தான்துரத்தி
[1]இலங்கைக்கதி பதியான ராவணனுஞ் சீதைதன்னை
மயங்கப் பிரமைசெய்து மாயமுடன் கண்டெடுக்க
காணாமற் தேடிக் கனிந்துகரைந் தேயழுது
நாணாமல் மார்புதனில் நாவதனில் கீழ்ச்சடையில்
ஏறிய பெண்டுகளைச் சிந்தை மகிழவைத்து
[2]கூறியயிவ் வார்த்தைகளைக் கொண்டணிந்தா னுன்றேவன்

பிற தேவர் செயல்

[3]இன்னந் திரளாக யிசைந்துரைக்க லாமதனை
என்னென்று சொல்லி யியம்புவேன் மன்னவனே

நரசிம்ம வேஷம் - இரணியனை அழிக்க நரனுஞ் சிங்கமுங்கூடிய உருவுடன் அவதாரஞ் செய்த திருமால். மலையைக் குடைபிடித்து - மேகத்துக்கு அதிபனான இந்திரன் அதிக மழை பொழிந்து நாசம் விளைவித்தபோது கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து மாடு கன்றுகளையும் மக்களையும் காத்தான் கண்ணனாகிய திருமால். மார்புதனில், நாவதனில், சடையில் பெண்கள் - திருமாலின் மார்பில் இலக்குமி, பிரமனின் நாவில் சரஸ்வதி, சிவனின் சடையில் - கங்கை.

சுவடிச் சொல்

1. யிலங்கை 2. சறிய 3. யின்ன

Tirmāl's miracles

To kill Iraṉiyaṉ, in a pillar proper
Took the guise of Naracimmam, in accord,
Wandered on earth as a slave to pulaiya lowly,
As *Mōkiṉi* he appeared with effort, great
In the hue of dark cloud took he the guise of Mukuntaṉ
Lifted he a mountain to shelter cattle, as an umbrella,
Searched and reached the house of a shepherdess to steal butter,
Bound he was to a pounding stone, and beaten too,
Sported he the flute fine to blow as regulated by fingers
With a conch in one hand and a wheel on the other
Sporting them in desire, quite waxing,
Remaining as husband gay on this earth,
Dear to girls a good eleven thousand,
His spouse and he a habitation in jungle did undertake,
As destined chased an illusory deer with a bow,
Irāvaṇaṉ the lord of Ilaṅkai did delude,
Cītai and whisked her away as if by magic,
Stricken with grief unable to find her, cried he,
On his chest, tongue shamelessly and under his locks,
Did he keep damsels in gay abandon,
Sported your lord, all I have mentioned with words these,

Other Lord's Miracles

State I can in number still larger quite properly,
How can I describe them Oh! king.

உந்தன் பகவதியு மூடாடுந் தேவர்களும்
நிந்தை நடக்கைகளை நெகிழ்ந்துரைக்கக் கேட்டாயே
[1]இவ்வாறு ஏதெல்லாம் யிணங்கியேநின் றேவர்கள்தான்
அவ்வார்த்தை கேட்டு அதன்படியே நீநடந்தால்
அவியாதே நீயு மழல்நரகத் தீநெருப்பில்
தவியாமல் நீபோய்த் தணிந்தே கிடப்பாயே
[2]இன்னஞ் சிலவார்த்தை யியம்பக்கேள் மன்னவனே
களவுதிருட்டுப் பொய்கள் கபடங்கள் செய்வோர்க்கு
உளவதுகள் சொல்லி உள்படுத்து முன்தேவன்
தப்பறைகள் பொய்சாட்சி தரணிமனு வோர்படிக்க
[3]இப்புவியி லுங்களுட யியல்வேதந் தானுரைக்கும்
சிந்தைமகிழ்ந் தும்முடைய தேவர்கள்தா னுங்களுக்கு

பிற மதம் பற்றிய மரிகருதாள் உரை

[4]இந்தப் படியுரைக்கும் யிப்புவியி லுங்களுக்கு
படிப்பினைக ளெல்லோதான் பாருலகி லுங்களுக்கு
வடிப்பமுட னுங்களுட மதசமயஞ் சொல்லுதல்ல
ஊரா ருடமைதனக் குற்றாசை வைப்பதுதான்
நேரான யுத்தியென்று நினைத்துரைக்கு முங்கள்மதம்
மனுஷனைத் தேவனென்று வையகத்தி லுள்ளோர்கள்
அனுசரித்தவ ருறையு மறிந்துசெய்யு முங்கள்மதம்
கண்காது வாய்மூக்கு கழுத்துநய னங்கள்தன்னை
பண்பான தேவனென்று பகர்ந்துரைப்பீர் சாஸ்திரங்கள்
நெஞ்சோடு யீரல்பிச்சு நீண்ட பெருங்குடலும்
பஞ்சமதஞ் சொல்லுதென்று பாலிப்பீர் பாங்குடனே
காலெலும்புங் கையெலும்புங் கனத்த முகட்டெலும்பும்
மூலமுட னிந்திரிய முழங்குஞ் சந்துகாதும்
தோலு நரம்புசதை தோற்றமுள்ள ரத்தமயிர்
உரைபெரிய யெண்சா ணுடலையெல்லாந் தேவனென்பீர்

நிந்தை - இகழ்ச்சி. தப்பறைகள் - கெட்ட வார்த்தை. நயனம் - கண். பஞ்சமதம் - ஐந்து மதம். பாலிப்பீர் - காப்பீர்.

சுவடிச் சொல்

1 யில்லாறு 2. யின்ன 3. யிப்புவி 4. யிந்த

Of your Pakavati and the Tēvars interspersed,
Of their misdeeds have you listened to my moving account
If according to your Tēvars,
You abide by their words,
In the hell fire that never dies,
Submit you must without struggle,
Listen yet to words some more, Oh! king,
To those who theft, falsehood and cunning vices practise,
Your lord does provide clues and engage,
Messages spurious and evidence false for the people on earth to peruse,
Your scriptures exhort, on this earth
Your Tēvars to you quite happily

Mary Karutāḷ on other religions

Will speak thus to you on earth
Precepts concrete on this world for you,
In proper form your religion does not exhort,
To have desires amorous with the folk of the place,
Is but strategy proper, your religion will declare
To deem man as Tēvaṉ on earth by some,
Which your religion will recognize and practise
Eyes, ears, nose, neck and words sweet
Will you describe as Tēvars noble in scriptures
Chest, liver and intestines long
You will honour as ordained by (*pañca matam*) your religions five,
Bones of legs, hands and joints,
The semen with its source, and earholes receiving sound,
Skin, nerves, flesh, blood apparent and hair
The human body entire measuring cubits eight, you will call Tēvaṉ

அறிவு நினைவு மாத்துமத்தை யுங்கூட
திறமுடைய தேவனென்று செப்பிவரு முங்கள்மதம்
என்று மரிகருதா ளிப்படியே சொல்லிவர

மன்னவன் மரிகருதாளிடம் கூறும் மறுமொழி

மன்னவன் திண்புயத்தான் மகாகோப முற்றோலிவோர்
சொல்லுவா னப்பொழுது தோகைமின்னா ளைப்பார்த்து
நல்லநல்ல நீதியெங்கள் நாதாக்கள் சொல்லுகிறார்
வகையேது சற்றும் வழிப்பாடு யில்லையோதான்
துகையாக யெந்தனுக்குச் சொல்லிவர வேணுமென்றான்

மரிகருதாள் உவமைகளால் இறைவன் பெருமையை விளக்குதல்

அப்பொழுது கன்னி யவன்முகம் பார்த்துரைப்பாள்
ஒப்புடனே கேளு [1]முவமையொன்று சொல்லுகிறேன்
அந்திரத்தி லண்டமிசை யாகாச மண்டலத்தில்
சந்திர நட்சத்திரஞ் சுடரா லிருட்டறுமோ
எல்லாநட் சத்திரங்க ளிசைந்துஒளிர் விட்டாலும்
வல்லாண்மை யுண்டோசொல் மண்ணி லிருட்டறுக்கத்
தூணா யிரங்கோடி நட்சத்திர மொளிவும்
கூறாகவே திரண்டு [2]வொண்ணா யிருந்தாலும்
மாறுமோ வையகத்தில் வந்தயிரு ளுக்காலம்
கூறிய யின்னங் குறிப்பொன்றுஞ் சொல்லுகிறேன்
சந்திர காந்தி தன்னுடைய காந்திகொண்டு
[3]இந்த வுலகி லிருட்டை யறுத்திடுமோ
சூரிய னொன்றுஞ் சுடர்வீசி யேயெழுந்து
பாருலகிலே யிருளைப் பருதியறுத் திடுமாம்
ஒருசூரி யன்தா னுலகி லிருட்டறுக்கக்
கருதிநட் சத்திரத்தைக் கதிரோடி யேமறைத்து

சந்திர காந்தி - நிலவொளி. பருதி - கதிரவன்.

சுவடிச் சொல்

1. முகமை 2. யொண்ணா 3. யிந்த

Knowledge, thought and soul too
Your religion proclaims as 'Tēvaṉ mighty'

The king's reply to Mary Karutāḷ

As Mary Karutāḷ continued her discourse thus,
King Oliver, of the might of shoulders in billion enormous,
Speaks then to the damsel graceful
'Good many precepts do our gods utter,
Are they not worth practice and is there way any,
Tell me cogently', he said
Then spoke the virgin looking at his face
Listen willingly, a simile I shall utter,

The similes

In the expanse universal of the sky and moon,
Will the moon and stars dispel darkness as a luminary bright?
Even if all the stars in unison shine,
Can they ever have the mettle to dispel darkness?
The lustre of stars in billions several thousand,
All put together as a unit single,
Will it change darkness on earth?
Give you, I shall, yet another hint
Can moonlight with its lustre pale,
Ever dispel darkness in this world?
Beaming its lustre, only the sun will rise,
On this world earthly the sun will dispel darkness
Just as one sun rose to remove darkness from this world,
By superceding the stars with its beams,

நின்றதொரு வாறதுபோல் நீதிசரு வேசுவரனார்
குன்றாத வேதங் குறியான பிரகாசமது

சாத்திர நெறிகளைச் சுட்டிக் கூறுதல்

என்றறிநீ மன்னா யிசைந்துவொலி வோரரசே
பின்னு மொலிவோர்க்குப் போந்துரைப்பாள் கன்னிகையாள்
மன்னும் புகழ்பெரிய மகாபெரிய சாஸ்திரங்கள்
ஞானிக ளென்றுசொல்லி நானிலத்தி லேசிலபேர்
[1]ஈனமுறும் புத்தியில்லா யிருளடர்ந்த பாதகர்கள்
பாவமெல்லாம் புண்ணியங்கள் பாருலகி லென்றுசொல்லி
சாவமுறும் பாவமெல்லாந் தர்மவழி யென்றுசொல்லி
வேசியர்கள் கூத்தாட வெகுமோக மிஞ்சிமிஞ்சி
நீச நரகவிட்டு நேசமுடன் சேர்வைசெய்தார்
முத்திபெற்றோ மென்றுசொல்லி முழுமதி கெட்டோர்
[2]இத்தலத்திற் கட்டிவைத்தார் இரிடிமடைய ரானோர்கள்
பில்லிக்குற ளியிடுவார் பெருங்கொடிய மோகினியும்
வீறுபட மோகமிஞ்சி வெகுதிரளாய்ப் பெண்கள்வைத்து
தாறுமா றாகயிருந்து தரணிதனை யாண்டவரும்
ஊத்தை யுதிரக்குழியை ருசிகரமென் றேகருதி
சேத்தில் விழுவார்கண்டாய் திறமுடைய மன்னவனே
பாடல்தனை யேகுறித்துப் [3]பவிஷற்ற பாதகர்கள்
நீடுபெரும் பொய்கள்சொல்ல நிலைசேர் புலவரையும்
மண்ணுலகில் செத்தவற்கு மகாபெரிய கோவில்கட்டி

தீயநெறிகளைச் சுட்டிக் கூறுதல்

தண்ணீரிலே முழுகித் தவஞ்செபித்த பேர்களையும்
ஊரா ருடைமைதனை வுரிகொடுமை யாப்பறித்து
வீறான தர்மவழி மேதினியிற் செய்தோரும்
நாதாக்க ளென்று நானிலத்திற் கற்பழித்து

இரிடிமடையர் - அறிவற்ற முனிவர். பவிஷற்ற - கௌரவம் இல்லாத.

சுவடிச் சொல்

1 யீனமுறும் 2. யித்தலம் 3. பவுஷத்த

Did the just Carvēcuvaraṉ emerge,
As lustre specific of scriptures unfailing.

Coding the scriptures

Know thou thus properly, Oh! king Oliver
Further did the virgin inform Oliver,
As scriptures very great of lasting fame,
And sages wise, will profess some on this earth
Dark sinners disgraceful and dull,
Will call sins all as virtues,
Will describe deadly sins as path of virtue,
With whores dancing and lust overwhelming,
Those who served in hell lowly with devotion,
'Eternity have we attained' such utter fools will claim,
Thus did they tales concoct on earth, the dances damned,
Will set magic vile of *pilli* and *kuṟaḷi* and the wicked *Mōkiṉi* as well engage,
With rising lust quite vigorous in the company of girls,
In disorder lived and ruled over earth
The dirty pit of blood they will deem delicious,
And fall in mud', seen thou hast such ones,
To denote in songs such sinners dishonourable,
To utter lies so big and lasting, poets they did assign
And raised temples quite big for the dead on earth.

Coding the evils

Those who prayed in penance in water immersed,
Those who did the belongings of others wickedly wrest,
Did profess to tread the path of virtue on earth,
As husbands did they molest on earth,

வேதாக்க ளென்றுசொல்லி வெகுமானம் பெற்றோரும்
செய்யபெரி யோரெனவே தெய்வப்பி றப்புவென்று
இப்படியே செய்துவந்த யெண்ணரிய பாதகமே
தப்பறைசே ருமுங்கள் மதசமயத்து ளானவர்கள்
கட்டிவைத்தார் பாதகர்கள் கனமான நீதியென்று
தட்டாத கீழ்நரகில் தாழ்வதுகா ணல்வழிகள்
தின்னுங் கறியசனந் தின்னால் வெகுபாவம்
மண்ணில் பவக்குருடாய் வையகத்திற் கட்டிவைத்தார்
சிந்தைமகிழ்ந் தேசிலபேர் செப்புவார்க ளப்பொழுது
[1]இன்ன மொருவார்த்தை யிசைந்துரைக்க வேணுமென்று
மன்ன னொலிவோரு மதங்கடிந்து வெட்கமுற்றான்
செத்த மனுஷருக்குத் திவசமொடு கோதானம்
பத்தியினால் செய்வதெல்லாம் பலனுண்டோ யில்லையோசொல்
சொல்லென்று உத்திரங்கள் தோகைமின்னா ளைக்கேழ்க்க
[2]எல்லையில்லா கோபமுட னிப்படியே கேட்டபின்பு
மதுநிறைந்த கன்னி மரிகருதா ளேதுரைப்பாள்

பாவநிவர்த்தி என்னுஞ் செயல்களைச் சுட்டுதல்

மாடுதனை வாலுருவி வையமிசை யேகொடுத்தால்
நீடூழி காலவினை நின்பாவம் போமோசொல்
ஆத்துமத்தின் பாவத் தழுக்கறுக்க நீர்குளித்தால்
மாத்தரிது பாவம் மரணத்தி லேநரகம்
சாலையது யேறுவது சகலமான பாவம்
வாலவயது துவக்கி வந்தபெரும் பாவமெல்லாம்
தாவமது போக தவறுதலைச் செய்வதுகேள்
எல்லாருங் கூடி இரகசியமாய் மாடறுத்து
நல்ல கறிநிணமும் நறுக்கிக் கறிசமைத்துத்
திரைவளர்த்து வீட்டகத்திற் சேரவொரு மொத்தமுமாய்
இரைவயத்துக் கேபோட யேற்ற சாராயமுடன்

அசனம் - உணவு. திவசம் - இறந்த நாளில் செய்யும் சடங்கு. வாலை - இளமை. நிணம் - கொழுப்பு. இரை - இரையும் - பசியினால் சத்தமிடும். கோதானம் - பசுமாட்டைத் தானம் கொடுத்தல்.

சுவடிச் சொல்

1. யின்ன 2. யெல்லை

As saints holy rewarded they were
As souls great and incarnation divine,
Thus did act, the sinners innumerable,
'Accumulate falsehood', proclaimed those in (your) religion
This the sinners did propagate as moral edifice mighty
To hell bottomless underneath as ways degrading,
'Eating meat edible by folks is sin grave'
Thus did blindly they prescribe on earth
Joyous at heart a few would utter then,
'Speak yet, further in sequence proper,'
Said king Oliver, ashamed and his mind embittered
'Performing *tevacam* and gifting cows in memory of the dead,
Are such devout obsequies beneficial or not?' tell me
'Out with your reply' did he ask the damsel luminous,
As he thus queried in anger limitless,
Mary Karutāḷ the virgin alluring did reply.

The action of Redemption

By gifting a cow on earth after stroking its tail,
Will your sin of activities aeon long vanish? tell me
To remove the dirt of soul's sin, bathing in water
Will not suffice to dispel sin or avoid hell on death
Sins all are out on the path,
Grave sins committed since one's youth,
Lead to lapses further to quench desire thirsting, listen,
Will assemble all to slaughter cattle in secret,
And chop meat with lump and cook it,
With a curtain streched at home, all together
With food for the belly and arrack (liquor) to boot,
Urging to eat and gargling, doing both,

தின்னுமென்று கொப்பளித்துச் சேரநிரு வாணருமாய்
பண்ணுங் கொடுமைகண்டீர் பார்க்காது கண்ணாலே
ஊரார் மனைவிகளு முடன்பிறந்த கோலமுடன்
பாரா வகையும் பங்கமது மெத்தவுண்டு

உயிர்க் கொலைகளைச் சுட்டிக் கூறுதல்

மாடறுத்து முக்கால் மறையோர்கள் தின்றுவந்தார்
ஆடறுத்துத் தின்னயிப்போ ஆனவுபா யங்கள்செய்தார்
ஆனா லிதுக்கோ ரடமானஞ் சொல்லுகிறேன்
மானார் மகுடமுடி மன்னவரே கேட்டருளும்
[1]இப்புவியில் மாடுமேய்க்கு மெல்லவரும் நாள்தோறும்
ஒப்புடனே மாடுகளை வாலுருவி யோட்டுகிறார்
ஆனா லவர்களுக்கு அனந்தபா வம்போமோ
தேனார் மடவார்கள் தினமடுப்பு மூட்டியேதான்
காசினியிற் தீயெரித்து கனமான தினைவிளைத்துப்
போசனங்கள் தான்சமைத்தால் போமோ வெகுபாவம்
ஆடுகிடாய் கோழிபன்றி அம்புவியி லெல்லோரும்
வீடுகள்தோ றுங்கறியாய் வெகுவாக வேதினமும்
சோறுகளோ டேகூடி சுகிசுகித்து உண்ணுவார்கள்
மாறுகொண்டு ஆத்துமத்தின் வன்பாவ மல்லவோதான்
தண்ணீரிலே முழுகி சகலமனு வோர்பாவம்
திண்ணமாய்ப் போவதுண்டோ தீட்டுந் துடக்கறுமோ
ஊத்தை நிறைந்திருந்தா லுடல்குளித்தால் போவதுண்டோ
எச்சல் விழுந்திருந்தா லியல்பாவம் போமோசொல்
உள்ளும் வியாதியற உற்றமருந்து குடித்தால்
தெள்ளுங் கனமருந்தால் தீரும் வியாதிகண்டீர்

பாவம் போக்க வழி கூறுதல்

அத்தன்மை போலவேதா னாத்துமத் தின்பாவம்
உத்தது வேயறுக்க ஒருவேந்தன் இல்லை

பங்கம் - வேறுபாடு. காசினி - பூமி; உலகம். போசனம் - உணவு.

சுவடிச் சொல்

1. யிப்புவியில்

See the cruelty they commit without caring to see
With the spouses of others in nakedness.
Molestation there is aplenty.

The sin of murder

The Vēdic folk ancient, slaughtered cattle and ate,
Now they devise ways and means to kill goats,
But an analogy shall I provide for this,
Pray listen, Oh! crowned king glorious
All who graze cattle, day by day,
Drive them stroking' their tails,
Will their sins endless vanish?
If the damsels sweet, light their ovens every day,
If folk light fires on earth and grow *tiṇai* grains,
And cook food, will grave sins disappear?
Goat, bull, fowl and pig, on this earth all folk,
In their homes every day as meat,
Joyously with relish eat along with rice,
Isn't it grave sin contrary to the soul?
The sins of all humans,
Will they be dispelled by immersion in water?
Will defilement thus be wiped out?
Will bodywash remove dirt steeped in one,
When spittle there is, will sin vanish?
To remove the malady internal, if only medicine proper taken,
The disease will be cured by that remedy strong

Overcoming the sin

Of similar nature is the sin of the soul,
To sever which no king is there

சத்திய மான சருவேசு வரனுடைய
நித்திய மானகர்த்த னினைத்தருளும் வேதமதில்
உண்டோ ரகசியங்க ளுள்ளவினை பவம்போக்க
கண்டார் தெரியுங் கடவுளார் நீதிதன்னை
அத்தம்புகழ் பொருந்தும் மறையோர்முன் னாளுறவை
உத்தபடி சொன்ன [1]உவமையொன்று கேட்டிலையோ
தேவபிர சாதநன்மை திருஞான தீட்சைகண்டீர்
பாவ மறுக்கும் பரஞான தீட்சைதன்னில்
அடைந்திருக்கு மோட்சநன்மை ஆத்துமத்துக் குண்டாகும்
மடையரோ டேகூடி மகாமோசங் கொண்டிருந்தால்
தேவரால் பாவம்போமோ செகத்தோரே [2]கேட்டருளும்
பாவமதையே படைத்தால் பரஞ்சோதி யாவதுண்டோ
[3]எண்ணியெண்ணி யேநீங்க ளின்பகுலத் தேவர்களை
கண்ணினா லேபார்க்கக் [4]காரியமுண் டோகேளும்

பசு நீர்தெளித்து அழுக்கறுக்க இயலாது எனல்

பாவவழி யைக்காட்டி பாலர்தனை யேபயின்றால்
ஆவுடைய நீர்தெளித்தா லழுக்கறுமோ ஆத்துமத்தில்
யிழுக்கது கள்சொல்லி யேசுகிறாய் யிச்சடத்தை
அழுக்கறுமோ மன்னவரே ஆவுடைய நீர்தெளித்தால்

தவஞ்செய்து பாவம் போக்க இயலாது எனல்

தண்ணீரிலே முழுகித் தவஞ்சேர்வை யாவதுண்டோ
விண்ணில் பரமபதியில் மேலோகஞ் சேர்வதுகேள்
சமுத்திரத்தி லேமுழுகி தவஞ்சேர்வை யாவதுண்டோ
இரவுபக லுங்கடலில் என்னாளும் மீன்பிடிக்கும்
பரவுவலைக் காரருக்குப் பாவமில்லை யென்றறிவாய்

பவம் - பிறவி. அத்தம் - செல்வம். ஆ - பசு. ஆவுடைய நீர் - பசுவின் சிறுநீர்.

சுவடிச் சொல்

1. உகமை 2. கெட்டருளும் 3. யெண்ணி 4. கரிய

Of Carvēcuvaraṉ veritable (the Lord of all)
In the scripture bestowed gracefully by the creator eternal,
Are there secrets to remove sins of one's deeds?
The Justice of God known by those who had seen,
What the famous preachers as relationship of yore,
Uttered in a comparison according, haven't you heard of it?
Those who have the divine offering and initiation wise imbibed,
In that *tīṭcai* heavenly that dispels sins,
The benefit of eternity will the soul embrace,
If with dances absurdity adopted,
Will sin by Tēvars be removed? pray listen, wordly folk,
If sin is created, can (the creator) be the luminary of heaven?
Thinking over and over again of your Tēvars of the happy tribe.
Can you ever see them with your eyes? listen,

Removing dirt by sprinkling water

Access to the path of sin, if children learn,
Will cow's urine sprinkled remove the dirt of soul?
Thou scold this human body in terms derisive,
Oh! king, will cow's urine dispel dirt?

Performing penance to get rid of sins

Can penance proper be performed in water dipped?
In heavely city eternal one reaches the upper world, listen
Can penance rightly be done in ocean immersed?
Catching fish day and night in the ocean ever,
Those who cast their nets do not sin; thou must realise.

கடலில் குளித்துப் பாவம் போக்க இயலாது எனல்

பண்ணிய மீன்தனக்கே பாம்புமிருகங் கள்செத்தால்
தீட்டுந் துடக்குமிகு செத்தமனு ஷர்துடக்கும்
நாட்டிற் பிரண்டோடு நாற்றமெல்லாந் தண்ணீரில்
[1]ஊத்தைக்கட லிற்குளித்தா லுறுபாவம் போகுமென்று
சாஸ்திரிமார் தான்குருக்கள் சமயத்திற் கட்டிவைத்தார்
கொன்றுதின்ன வொண்ணாது குனிபாத கங்களென்பீர்

ஒலிவோர் மறுமொழி

பின்னு மொலிவோரும் போந்துரைப்பான் கன்னியர்க்கு
முன்னோரும் பின்னோரு முறைமுறையாய் கோவில்கட்டி
தானே யரசதுரை சகலகுடி யானோரும்
[2]நாலா விதமாக நல்லோர்கள் செய்வதெல்லாம்
இல்லையென்று தட்டுகிறாய் யெங்கள்தே வாலையத்தை
வல்லமதங் கொண்டெழுந்த மாபாவி யானவளே
[3]என்று வொலிவோரு [4]மிவ்வார்த்தை தானுரைக்க
நின்று மறுமொழிதா னீதியுடன் சொல்லுகிறேன்
ஆறுலட்ச ணமுடையோ னண்ணல்சரு வேசுவரன்தான்

கன்னி, இறைவனுக்கு உரியனவல்லாத செய்திகளை எடுத்துக் கூறுதல்

வீறுசிவன் மலையது வேந்தனுக்கு மில்லையிது
தூறுள்ள மோகந் துரோக சொரூபமுள்ள
நீதிநெறி தானுமில்லை நிறைந்தபத்தி யொன்றுமில்லை
ஆதியந்த முண்டுகண்டீ ரிவர்களுக்குச் சாவுமுண்டு
சனியன் பிடித்ததென்று சாஸ்திரங்கள் சொல்வீர்கள்
[5]அநியாயந் தானிவர்க ளாகாத்தியக் காரர்கண்டீர்
தெண்டிரையின் மீதேதான் திருநடன மாடுகின்ற
அண்டர்பரஞ் சோதியென்று அம்புவியோர் சொல்வீர்கள்

துடக்கு - மகளிர் தீட்டு. ஊத்தை - அழுக்கு. தெண்டிரை - தெளிந்த அலைகளையுடைய கடல்.

சுவடிச் சொல்

1. யூத்தை 2. நானாவிதமாக 3. யென்று 4. மில்லார்த்தை 5. அனியாயந்

Bathing in the sea to dispel sins

When fish, snake and animals die,
Washing that pollution and wiping the defilement of humans dead,
Water contains the stench entire,
Bathing in such dirty ocean will remove sins,
Thus your priests and preachers have bluffed,
To slaughter and eat is sin vile, you say'
Then said Oliver to the virgin thus,

Oliver's reply

'Our forefathers and their succesors did raise temples proper.
Citizens all, nobles and kings
In various ways what those pious ones do,
You knock down such our temples as nothing.
Thou, grave sinner of frenzy religious,'
As king Oliver did thus utter words foul,
'Stay I shall and reply in fairness,
Lord Carvēcuvaraṉ of splendid qualities sixfold,

The virgin on God's misdeeds

The mountain of Civaṉ vigorous, is not these for any king
Lust silty and shaped as figure treacherous,
With no code of morals, and no devotion perfect,
Beginning and end they have, with death imminent,
'Saturn evil has taken hold' you will utter scriptures,
'Utter liars these are all', know thou this injustice.
He who on the ocean limpid dances,
He is Lord luminous of the universe' thou folk on earth utter,

தெண்டிரையின் கூத்தாட்டந் தேவனுக்கு நீதியோசொல்
ஆடுவதும் பாடுவது மம்புவியோர் தங்கள்தொழில்
நீடுபுகழ் மாபெரிய நித்தியத்துக் கில்லையது
ஆதியந்த மில்லாதோ னாடுவதுக் காளானால்
ஒருநன்மை முழுநன்மை சகலநன்மை நிறைந்தோன்
வருநன்மை யானதெல்லா மவரிடத்தில் வாரதுண்டோ

இறைவனுக்குரிய தன்மைகளைக் கூறுதல்

அளவில்லாத கிருபை அளவில்லாத பலத்தோன்
அளவில்லா தானந்த மளவில்லா நன்மையுள்ளோன்
அளவில்லாத ஞான மளவில்லா நீதியுள்ளோன்
அளவில்லாத மகிமை அளவில்லாத பெரியோன்
அளவில்லா தன்பு மளவில்லா வாக்குமுள்ளோன்
அளவில்லாத யிரக்க மளவில்லா நீதியுள்ளோன்
அப்படிக் கொத்தநல்ல அண்ணல்சரு வேசுவரனை
இப்படிக் கொத்தவரென் றியம்புகிறேன் கேளுமன்னா

உலகம் தோன்றுவதற்கு முன் தோன்றியவன்

மண்ணுலகும் விண்ணுலகும் வருவதுக்கு முன்னிருந்தோன்
அண்ணல் நமக்காகயிந்த அவர்சகல மும்வகுத்தார்
ஆகட்டுமென் றேயுரைத்தா ரச்சணத்தி லேயுலகம்
தீவட்டி ராச்சியமுந் திரைகடலு முண்டாச்சு
படைத்தோன் றனையறிந்து பாரில்வணங் காமனுவே
பள்ளத்தில் வீழ்ந்து பாருலகில் மாண்டனரே

மறுபிறப்பு நம்பிக்கை வேண்டாமெனல்

தீதான பூதலத்தில் திரும்பிவரப் போறதில்லை
இந்த வுலகி லிருந்துபத்து நாள்சுகித்து
மந்தமுறும் புத்தியில்லா வன்னரகி லேவிழுந்து

தீதான பூதலம் - துன்பம் நிறைந்த உலகம்.

Is dancing on the ocean proper for God?
Dancing and singing are but the chores of earthly ones.
It is not (apt) for the eternal one enormously vast and of glory lasting,
If he sans beginning or end takes to dancing,
He who with benefit single, perfect and total endowed
From Him can benefit due be received?

The virgin on Gods deeds

He whose might and grace are immeasurable,
One beyond measurement, and benefactor endless beyond calculation,
He who has wisdom and justice boundless.
Great one beyond assessment with glory unlimited,
He who loves and speaks in measure boundless.
He whose sympathy and justice are incalculable,
Such a good Lord Carvēcuvaraṉ (God of all)
Utter I shall of His nature proper, listen Oh! king,

He who appeared before the appearance of the world

He did exist before earth and heaven appeared,
The Lord for our sake did provide all,
'Let there be' said He and in a moment in the world,
The kingdom of torches and seas with surf did emerge,
Oh! man who does little realise the creator and worship him,
Those who of this world terrestrial into an abyss fallen,

Belief in rebirth

Would never return to this earth vicious
To exist and enjoy here on earth for a mere ten days,
And to fall in hell violent of stupidity dull,

மறுபிறப்பு முண்டெனவே மகிழ்ந்திருக்க வேண்டாநீ
ஊறுபட்டுத் தீநரகி லூழியுள்ள காலமெல்லாம்
தீதுறு கொடியபாவி சினந்துபின்னொலி வோர்சொல்வான்.

விருத்தம்

15. கோதுறுங் குழலி னாளை
யழைத்தது யென்மேல் குற்றம்
வாதுடன் நம்மை வென்று
வாய்தனை யடக்கிப் போட்டாள்
சாதுறுங் குணத்தின் கள்ளித்
தானென வேண்டா மென்றாள்
....
....

ஒலிவோர் சினமடைதல்

அம்மானை

16. என்று மரிகருதா ளிப்படியே சொன்னதற்பின்
கன்றிமனம் பொங்கியேதான் கடுங்கோபங் கொண்டொலிவோர்
நற்றவக் கன்னிமுன்னே நாணித்து வெட்கமுற்று
மறுமொழிசொல் லாதிருந்து வர்மமுற்றான் கன்னியர்மேல்

பூவையர்க்கு விலங்கு போடுதல்

[1] என்றுவொலி வோருமன்னன் ரத்தின மணியதுபோல்
துன்றுஞ் சினப்புலிபோல் சொல்லரிய கோபமுடன்
சேவுகரைத் தானழைத்துச் சிறைச்சாலை தன்னிலேதான்
பூவையரைத் தான்விலங்கு போடவே தானுரைத்தான்
ஆனதொரு மன்னர் அரண்மனைக்குப் போனபின்பு
போனதற்பின் னடைத்தார் திருமா தவக்கொழுந்தை

ஊறு - துன்பம். வாது - சண்டை. வர்மம் - சினம். துன்றும் - நெருங்கும்; இங்கு, மிகுந்த.

சுவடிச் சொல்

1. யென்றுவொலி

Thou need not gloat over the prospect of rebirth
You will in hell fiery remain hurt for aeons ever?
The wicked sinner harmful in fury -- then,

15. Oliver said,
It was but my fault,
To have the glowing haired damsel invited
Our tongues she had tied,
Defeating us in debate,
She has denied to herself reference any,
This wench clever seemingly docile,

Oliver's anger

16. As Mary Karutāl thus spake,
Oliver in mind bitterly agitated did become furious,
Ashamed and ill at ease before the virgin pious,
Remained silent and towards the virgin turned hostile.

Handcuffing the virgin

Like a tiger fierce and furious in rage beyond words,
Summoned the servants and in prison.
To put the damsel in fetters, did he instruct
After the king for the palace left,
Then did they imprison the tender flame of penance graceful,

உறுபாவி சேவகர்தா னோவியத்தைக் காவலிருந்தார்
அப்பொழுது கன்னிமின்னா ளண்ணல்சரு வேசுவரனை
செப்ப முடன்வேண்டல் செய்துகொண்ட தைக்கேளும்

மரிகருதாள், இறைவனின் அருளை வேண்டுதல்

சகலபொரு ளும்படைத்த சருவேசு வரன்சோதி
புகலரிய நற்கிருபை புகழ்ச்சியுமக் கேபுகழ்ச்சி
[1]அகல்புவி யும்பரமு மண்டபிண்ட முங்கடந்து
பகலெரியுஞ் சூரியன்போல் பரந்துயெங்கும் நின்றோனே
ஞானசொரூ பப்பொருளே நன்மைமட்டில் லாக்கடலே
[2]ஈனமிகும் நானடியாள் எந்தனுக்கு உன்பலந்தான்
தானாய் பரனாய் தனிச்சுயமாய் நின்றோனே
வானோர்க் கரசே மனமிடுக்கு நீர்தருவீர்
தருவீ ரெனக்குநல்ல தயிரியங்கள் தன்னுடனே
கருவிகொண்டு யென்னுடலைக் கண்டதுண்டஞ் செய்தாலும்
உருகாத வஞ்சநெஞ்ச னொலிவோரு மானவனும்
பெரிதாக வேதுணிந்து பூதலத்தில் பாடுபட
வரந்தருவீ ரெந்தனுக்கு வன்பனொலி வோரைவெல்ல
[3]உரந்தருவீ ரெந்தனுக்கு உறுதிகொண்டு பாடுசெய்ய
பரந்தலோகப் பேயும் பாவமுறுஞ் சீயுடலும்
உரந்தனான பொல்லாதாசையெல்லா முண்மையுடன் வெல்லநல்ல
பத்தினிவிசு வாசமுடன் பகருநம் பிக்கையுடன்
உத்தயிந்த மூன்றுவகை யென்னுளத்தி லேபதிப்பீர்
கர்த்தனேயுஞ் சித்தமையா கரைகாணா வாருதியே
சத்திய வேதத்தரசே சருவேசு வரன்சோதி
அணிந்துயெந்தன் கற்பினுக் கவமானம் வாராமல்
துணிந்துகண்டாய் பாடுபட்டுச் சோரிசிந்த வேயுமக்காய்

அம்பரம் - ஆகாயம். மிடுக்கு - உறுதி. உரம் - வலிமை. சோரி - இரத்தம்.

சுவடிச் சொல்

1. யகல் புவி 2. யீனம் 3. யுரந்தனை

The servants wicked over the damsel picturesque kept vigil,
Then the virgin luminous towards Lord Carvēcuvaraṉ,
Prayed but properly which you may listen.

God Omnipresent like sunlight

'Creator of all, Carvēcuvaraṉ the luminary,
Grace benign beyond words, praise be to thee, hail,
Transcending this earth wide, heaven, cosmos and flesh,
Oh! Omnipresent so wide like sunlight diurnal,
Oh! the entity of wisdom embodied, Ocean boundlessly beneficial,
To me, your devotee mean, I have but thy might,
Oh! He who remains as the only self his own and Lord of Heaven
Oh! Lord of Heaven! give me prowess mental,
Give me courage aplenty,
Even if with tools he chops my body to pieces,
That Oliver cruel in mind unmelting,
To act in daring great and on earth to strive,
Grant me the boon to conquer Oliver,
Bestow me the might with firmness to fight,
The devil of this world wide and the sinning body with sores festering,
Desires vile and strong, to conquer these all verily,
To this chaste woman loyal and hopeful,
Plant in my mind requisites these three quite relevant.
Oh! God, be pleased in your mind Thou Ocean boundless,
King of scriptures true, Lord of all and luminary
For my chastity not to be outraged,
And to strain in courage for your sake

பணிந்துபதந் தெண்டனிட்டுப் பரமபதந் தந்திடுவீர்
உணர்ந்துபதி நின்றுகொண்டு கும்பிட்டு வேண்டல்செய்து

ஒலிவோர் மரிகருதாளை விடுவித்து மிரட்டுதல்

அம்மானை

வேண்டல்செய்து கொண்டிருப்பாள் மின்னாள் சிறைவீட்டில்
பூண்டபத்தி கொண்டுநன்றாய் பூசைமின்னாள் தானிருப்பாள்
பொழுது விடிந்தபின்பு பொல்லாத பாதகன்றான்
[1]எழுதரிய வன்நெஞ்ச னேந்திழையா ளானவளை
அழைத்துவரச் சேவகரை யனுப்பியே விட்டதற்பின்
பழுதத்த கன்னியரைப் பாதகர்தா னேசிறையை
விட்டேதான் கூட்டிவந்தார் மின்னார் சிரோன்மணியை
துஷ்டனொலி வோருபின்னே தோகையரைக் கூட்டிவந்தார்
வந்தகன்னி மாதவத்தை வன்பனொலி வோர்பார்த்து
உந்தன்சரு வேசுவரனை யொன்றுதலை நீமறந்து
நான்வணங்கும் தேவர்களை நாடிவெகு பத்திகொண்டு
தான்வணங்கா தேயிருந்தால் சற்றுநே ரப்பொழுதில்
எண்டிசையோர் காணவேதா னிப்படியே செய்திடுவேன்
வாய்மதங்கள் பேசியேநான் வணங்குகின்ற தேவர்களை
தீநரகப் பேயெனவே செப்புகிறா யோநீலி
என்னை மணம்புணரா தேயிருந்தா லேயினிதான்
உன்னையெங்கள் தேவனுக்கு உற்றபெலி தான்கொடுப்பேன்
மேடலுண்டு பாடலுண்டு விஸ்தார மானதுண்டு
பாடலுண்டு யென்கொலுவில் பாக்கியங்கள் மெத்தவுண்டு
என்கொலுவின் பாக்கியத்தை யெண்ணாமல் பேசுகிறாய்
பெண் கொடுவாய்க் கன்னியரே பேசுவது வீணல்லவோ
என்று வொலிவோரு மிப்படியே சொன்னதற்பின்

சிரோன் மணி - நாகரத்தினம்; இங்கு மரிகருதாளைக் குறித்தது. வன்பன் - கொடியவன்.

சுவடிச் சொல் :

1. யெழுதரிய

Kneel I humbly pray grant me eternity'
Thus feeling did she stand and pray with hands folded.

Torturing Mary Karutāl

Remained she in prayer, the damsel luminous in prison,
In worship proper was engaged, lady bright
Well after dawn, the sinner wicked
The hard hearted one beyond description cruel
After despatching his minions to bring,
The virgin flawless from the prison bound,
Brought the paragon of virtue luminous,
The wicked servants did bring before Oliver harmful
Looking at the virgin of penance austee, Oliver said
If thou forget to identify with my God of all,
And the Tēvars whom I worship,
If thou fail to worship them in earnest,
In a short while act I shall like this for all in directions eight to see
Speaking in arrogance about Tēvars to be worshipped,
Dost thou call them devils of hell! thou deceitful wench!
If thou refuse to marry me, thence,
I shall offer you to our God as sacrifice human
Exatation therein, song elaborate as well,
Song there is, good fortunes aplenty at my court,
Thou speak unmindful of my court's munificence,
Oh! foulmouthed virgin, Isn't your discourse but futile?
As Oliver did thus remark,

கருதாளின் வீரமறுப்புரை

நின்றுகன்னி தானவனை நேசமுடன் பார்த்துரைப்பாள்
மண்ணுக்கும் விண்ணுக்கும் வாருதியுஞ் சூரியனும்
ஒன்றுமில்லா தக்கால மொருநொடியி லேபடைத்தோன்
சருவேசு வரன்பதத்தைத் தான்றுதித்துத் தான்றுதிப்பேன்
உருகொடிய மன்னவனே உன்னுடைய வாள்வரிசை
நம்பினால் மோட்சமுண்டோ நரகமல்லால் நன்மையில்லை
வாழ்வு தனையெண்ணி வாணாளைப் போக்கடித்தோர்
தாழ்வுபட்டுக் கீழ்நரகில் தாழ்ந்தவர்கள் மெத்தவுண்டு
காசினியி லிப்பெரிய காரணத்தைக் கண்டவர்கள்
ஊசித்துவார மதுக்குள் புகுந்தார்க் கொப்பாமோ
ஆகம் பிரியமுற்றே அண்ணல்சரு வேசுவரர்க்காய்
சாகத் துணிந்தேன் றனையறிந்து கொள்வாயே

மரிகருதாளைச் சக்கரத்தில் நிறுத்தல்

அப்பொழுதே சொல்வா னதிகசினங் கொண்டொலிவோன்
[1]இப்பொழுதே சக்கரத்தி லிவளை நிறுத்துமென்றான்
சேவகரைத் தானழைத்து சிறுநுதலாள் கன்னியரை
பாவியழைத் தொப்புவித்தான் பாதகர்கள் கையிலேதான்
சக்கரத்தில் வைத்தார்கள் தையல்கன்னி மாதவத்தை

மரிகருதாளின் வேண்டுதல்

ஒக்கவே தன்சதையை ஊடுருவித் தானறுக்க
நின்றாளே [2]கன்னிமின்னாள் நிஷ்டூர னாக்கினைக்குள்
துண்டகத்தி லாக்கினைக்குள் சூரத் தனத்துடனே.
பூரணசந் தோஷமுடன் பொன்னுலகைத் தானோக்கி
சீரணிசேர் [2]கன்னிமின்னாள் திருச்சிலுவை நாயகனை

வாருதி - கடல். காசினி - பூமி. ஒக்க - சமமாயிருக்க. பூரணசந்தோஷம் - முழுமையான மகிழ்ச்சி.

சுவடிச் சொல்

1. யிப்பொழுது 2. கன்னிமுன்னாள்

Karutāḷ's rebuttal

Said the virgin looking at him with affection.
In earth and heaven when ocean and sun
Not any was there, he did create at a moment
The feet of Carvēcuvaraṉ only shall I worship, if ever I worship,
Oh! wicked king! if I trust the splendours of thy life,
Will there be eternity? hell will be the lot sans any good.
Mindful of the life (earthly) those who have their living days wasted,
And disgraced had many fallen low in hell underneath,
Those who have realised this reason prime,
Are they similar to those who into the eye of the needle entered?
In fond devotion towards Lord Carvēcuvaraṉ,
Prepared I am with courage to die for His sake, know this.

Placing Mary Karutāḷ on the wheel

Then did Oliver say with anger raging,
'Here and now put her on the wheel' he said.
Summoning the servants, did the sinner hand over,
The virgin elegant-browed, to the wicked ones
Placed they on the wheel the damsel of penance austere,

Mary Karutāḷ prays

As her flesh was pierced and chopped at the same time,
Did the virgin stand, to the cruel order subjected
With bravery in torture at the cutting wheel,
With joy perfect looking heavenwards golden,
Did the bejewelled virgin luminous pray to the Lord of the Holy Cross,

வேண்டல்செய்து கொண்டுநின்ற விந்தை கேட்டருமை
தீண்டுபுகழ் வேண்டுதலைச் செப்பமுடன் சொல்லுகிறேன்

சக்கர அஷ்டகம்

17. கருணை வாருதி பரம சேயன்
கடவு ளேசரு வேசுவரா
கருதி யுமைபொரு தபசு முடியவே
கமல பதசரண மருளுவாய்
கிரண சுடரொளி பரம பதிவர
மெனது உளமதில் நிலையதாய்
கிருபை புரிசிறு மதளை மனசுநான்
கெட்டி யாக யிருக்கவே
தரணி தனிலுறு கொடிய ரிடுவினை
சதைகள் பொடிபட வதையினுந்
தரும நினைவது மனசோ டுருகவே
தற்பரா வுதவு மற்புதா
கிரண மதுவொரு கருவி வினைகொடு
ஒலிவோ ரிடுவத முடலையே
சிறுவி யுமதுட னடியா ருயர்பரஞ்
செப்ப மாகவே [1]நீள்புவி

வெறிய டுகொடு கடிய பகைகொடு
மீண்டி யேசதை கண்டமாய்
விழினு மெனதுடல் கழியினு மாத்தும
வெண்மை யாகவே நன்பதர்
பிரிய வெனதுட லடியாள் படுவதும்
பிலனை யுதவுவாய் கடவுளே
பெத்தி முத்தியே வெத்தி யாகவே
யுத்த சுத்தம னத்த மாகவே

வாருதி - கடல். கிரணசுடர் - சூரிய ஒளி. தற்பரா - கடவுளே.

சுவடிச் சொல்

1. நீழ்

Pray listen to the wonder of her prayer thus standing,
Utter I shall properly, that prayer famous.

17. 'The Ocean of mercy, heavenly infant, Oh! God Lord of all
Pray grant with grace surrender at your lotus feet
To conclude a penance with Thou in mind,
In my mind steadfast and firm,
And to reach heaven of beams lustrous
Pray grant to my mind the grace of the cross
If on earth the acts of the wicked be,
Torture of pounding the flesh,
With thoughts virtuous to move my mind and melt,
Oh! God on your own! help me, thou miraculous one
Oliver tortures but the body,
With just an instrument,
Even if on this earth long, devotee exalted
Of heaven, in hostility cruel and passion,
Be chopped to pieces of flesh,
Even if my body be removed,
Soul to remain white in state good,
Willingly my body of this devotee humble doth suffer,
Pray grant me that boon, Oh! God.
To remain in mind pure
In devotion to attain eternity victorious,

அறிவு நெறியிலா அரச ரிடுபவ
மரிய பிழைபொறு மண்ணலே
அன்ப ரடிதொழுஞ் சிலுவை தனிலுயி
ரார ணாபரி பூரணா
கருணை வானவர் பொருளே நித்திய
கடாட்சமே ஆனந்த மோட்சமே
கெஞ்ச வேயுல கஞ்ச வேயுட
லஞ்ச வேபேய்க ளஞ்சவே

அஞ்ச லஞ்சலுன் றஞ்ச மேகடவு
ளாதியே பரம சோதியே
அமுத கலைதரும் பரம சொரூபியே
ஆண்டவா கிருபை பூண்டவா

தஞ்ச மாகவே எனக்கிங் காகவே
சதியே ரிடுகொடு வினையதில்
தவறி யெனதுடல் தயங்கி டாமலே
தற்பரா வுதவு மற்புதா
மிஞ்சு மாப்பிறவை பஞ்சு லாவிய
வன்பர்க் குன்பதந் தந்தவா
விடல அமுர்தகலை கருணை சொரூபியே
வேத நித்திய சேரவே
இஞ்சொல் லாகவே பிஞ்சொல் லாயேநீ
யேழை யாம்பர தேசிகாண்
என்று பவமது தனையே பொறுத்தருள்
யேசு நாயக சுவாமியே !

ஒலிவோர் மரிகருதாளைத் துன்புறுத்தல்

அம்மானை

18. என்று மரிகருதா ளிறைவனை வேண்டல்செய்து
நின்றிடுவாள் சக்கரத்தில் நிஷ்டூர ராக்கினைக்குள்

பரிபூரணன் - எங்கும் நிறைந்தோன்.

The sinful lapses of the king ignorant,
Please forgive, Oh! Lord
Oh! Lord exalted in the cross with life thine,
Oh! God, the perfect One!
Oh! Merciful One among folk heavenly,
Grace Eternal! Happpy Eternity!
To entreat, the world of fear,
This body to dread, and devils to be scared.
Fear not, be not afraid, at thy refuge (am I)
God foremost, Luminary great,
Oh! Embodiment of totality, the bestower of immortality.
To me here with the grace of God, endowed,
And as his refugee, in the cruelty,
Caused by the conspirators vile,
For my body not to weaken and vacillate,
Help Oh! God on His own and Miraculous One?
Who has provided (shelter at) your feet,
To those who have soft life on earth indulged after birth?
Oh! God youthful and Image of Mercy,
Oh! Eternity of the Scriptures,
Tell me words comforting hence,
See this beggar poor,
Forgive sins mine with grace,
Oh! Lord Jesus, my God!

Oliver torturing Mary Karutāḷ

18. Thus did Mary Karutāḷ pray to God,
And on the wheel stood as per the order cruel,

பாவி யொலிவோரும் பாதகனு மேதுசொல்வான்
மேவிகசை மாறுகொண்டு மெல்லியல்மேல் வீசவென்றான்
வாருங் கசைகள் கொண்டு வன்பிரம்பு மாறுகொண்டு
பாரச் சினங்கள்கொண்டு பதைபதைக்க வேயடித்தார்
சீறி யொலிவோருஞ் சினந்துபின்னு மேதுசொல்வான்
ஊறுபட வன்பிரம்பா லுடலையெல்லாஞ் சீப்பாலே
பிடித்தவளைக் கீறிடுங்கள் பித்தமதங் கொண்டவளை
வடித்திவளைக் கூர்மையுள்ள வல்லிரும்பின் சீப்பாலே
யென்றபின்பு சேவுகர்தா னெரியெழுந் கோபமுடன்
ஒன்றுபடக் கன்னிமின்னா ருடலையெல்லாந் தான்கீறி
விட்டார்கள் சதைகள்தொங்க மெல்லியர்மேல் தோலுரிய
கெட்டக் கரப்பாவி கொடிய னொலிவோரும்

மன்னனுக்கு வேண்டியவர்கள் மரிகருதாளுக்கு கூறும் அறிவுரைகள்

மன்னன் றனக்குகந்த மாபாவி கள்கூடி
கன்னிமின்னார் தன்மனசைக் கலங்கவேதான் புத்திசொன்ன
[1]வாறுதனைச் சொல்லுகிறேன் மதியுடையோ ரேகேளும்
வேறுபடப் பொல்லாத வீணர்சொன்ன புத்திதனை
வச்சிரமே நல்ல மரகதமே மாந்துளிரே
கச்சுகந்த கொங்கைநல்ல கன்னியரே நாங்கள்சொன்ன
புத்தி தனைக்கேளும் புட்பரா கக்குயிலே
சித்திர ரூபக்குயிலே தேன்மொழியே யிப்பொழுது
பொன்னிலங்கு முன்னுடலை புண்படுத்த வேண்டாங்காண்
நன்னவங்க ளானவளே நாங்கள்சொன்ன புத்தியைக்கேள்
துயரமுற்று உன்னுடலை சோரிசிந்த வையாதே
உறுதிகொண்டு [2]கற்பினுக்கா யுன்னுடலை மாய்க்காதே
வடுவுமருவு மில்லாத வளர்ந்ததிரு மேனியெல்லாஞ்
சடமதிலே புண்கள்பட்டுத் தாழ்ந்துவிடப் போறாய்நீ
கற்புடமை காக்கின்ற காரிகையே நீதுணிந்தாய்

கசை - சவுக்கு. மாறு - விளக்குமாறு. ஊறு - துன்பம். கச்சு - மார்புடை. கொங்கை - மார்பு. மரு- மச்சம்.

சுவடிச் சொல்

1. வாரு 2. கற்பினை

Oliver the sinner wicked then did say
'Lash the woman tender with whips' said he
With whips of leather straps and batons tough
Furiously did they lash causing agony acute,
Oliver in fury fretting did say
Hurt her by caning and with iron comb sharp,
Tear her, this fanatic insane,
With the iron teeth sharp and strong
Then did the servants in anger flaming,
Tear the body of the damsel luminous, all over
With flesh hanging and skin peeled,
Oliver, the sinner wicked

Advice to Mary Karutāḷ

Sinners grave in support of the king assembling
How they did advise the damsel luminous and her mind confuse
Narrate I shall, pray listen, wise ones!
The advice to stray, by the wastrels wicked
'Oh! Steely one, emerald pure, tender mango leaf,
Oh! virgin good with breasts matching the *kaccu* (brassiers)
Listen to our advice, Oh! topaz cuckoo,
Oh! cuckoo picturesque and damsel of words honey sweet, now
Let not your body golden be tormented
Oh! damsel made of novelties good, listen to our advice
Tire not your body in grief thus,
Adamant in thy faith don't destroy body thine,
The body graceful nourished without scars or warts,
In body with of wounds thou welt be disgraced.
Oh! damsel who upholds chastity, you did dare,

அற்பபுத்திக் காகவல்ல ஆக்கினைக்குள் ளானாய்நீ
தவறாநெறி யாகவென்று தாரணியிற் கற்பிருந்தால்
அற்பமல்ல பெண்மதியா லரசுநிக ழாயுரைத்தாய்
உரைத்த மொழிகேளு மொன்றுதலைக் கன்னியரே
கருத்தில்நினை வானதெல்லாங் காசினியோர்க் கேறாது
எங்களொலி வோருமன்ன ராச்சியத்தை நீயாள்வாய்
சங்கையுட னேநீயுஞ் சாற்றுமொழி கேளுமென்பார்
விண்ணுலகு மோட்சநன்மை யென்றசொல்லை விட்டுவிடு
ஆரபா ரத்துடனே அரசனொலி வோருமுன்னே
வீரத்தனம் பண்ணாதே விரும்பி மணம்புணரும்
சன்னாச முந்தபசுந் தானுனக்கு ஆகாது
மின்னாரு முன்னுடலை வேறுபடக் கீறியேதான்
புண்ணாக்க வேதுணிந்தாய் பூவையரே யிப்பொழுது
பண்ணாதே யுன்னுதிரம் பாருலகில் சிந்தாதே
சரீரந் தனையொறுத்துத் தவசுபண்ணக் காரியமேன்
வரிசைசெறி மன்னனுடன் வாழ்ந்துசுகித் துண்டிருப்பாய்
பொன்னுலகு மோட்சமதைப் பூதலத்தில் கண்டவரார்
இன்னிலத்தின் வாழ்வுதனை யெல்லாருங் கண்டதுண்டு
வஞ்சகநிஷ் டூரமுள்ள மாயக்கா ரகுருக்கள்
பிஞ்சுவிழ வேசதைகள் பெயரபொல்லா புத்திசொன்னார்
ஆகாத புத்தியுன் னாத்துமத்திற் சொன்னாரே
நரகமென்று மோட்சமென்று நானிலத்தில் கண்டவரார்
துரகமுறு முன்குருக்கள் சொன்னபுத்தி நீகேட்டு

அற்பபுத்தி - புத்தியீனம். சங்கை - நல்ல எண்ணம்.

In intellect mean, hast thou been to punishment subjected,
If chastity be the virtue unfailing on earth,
If is not mean, but kingdoms function not by women's intellect,
Listen to the words spoken in agreement, Oh! virgin
All thoughts in mind will not with the world's folk pass muster,
Thou may rule over our king Oliver's domain,
Listen thou with reverence to the words, uttered,
Stop referring to terms as heaven and bliss of eternity,
Do not in commotion before Oliver the king,
Don't display bravery, unite in wedlock but willingly
Asceticism and penance are not for you
For your body luminous to be torn and rent,
And be wounded, though hast now dared, worshipful one,
Do not let thy blood be shed in this world earthly
Of what avail is for thou to torment thy body to perform penance?
With the king of heritage great, do but live, enjoy and dine
Who hast seen in this world, eternity of the world golden?
All have seen life on earth here',
The cunning and cruel priests deluding.
The devilish ones have counselled wickedly for your flesh to
tear apart and fall,
Tendered advice improper to thy soul,
Who has seen hell or heaven on earth?
Listening to the advice of your priests treacherous,

மெய்யெனவே நம்பியிப்ப வீணாக வுன்னுடலை
அய்யோ சதைசிதற அடிபடவுங் காரணமேன்
பூரண கன்னியரே பூவையரே விட்டுவிடு
பேரணிசேர் மன்னனுடன் பிரதாபித் தேயிருப்பாய்
ஆனைபடை சேனைமன்ன ரந்தியோக் கியபதியில்
உன்கையிலே தான்வணங்கி உனதுவார்த் தைகேட்க
இன்பமுடன் பண்ணிவைப்பா ரிப்பொழுது தப்பாது
சாந்து சவ்வாதுடன் சந்தனமுங் கஸ்தூரி
கலந்துமிக வுன்னுடலில் கன்னியரே மன்னனுடன்
அலர்ந்தசெம்பொன் கட்டிலின்மே லலங்கரித்து வாழ்ந்திருப்பாய்
மல்லிகை முல்லைபுட்ப மலரணையு மெத்தையின்மேல்
தொல்லையிற்று நன்றாய்ச் சுகமாக வாழ்ந்திருப்பாய்
இத்தனை நேரம்பிடித்து யிவர்கள்சொன்ன புத்தியெல்லாம்
சற்றுமேதா னுன்மனது தானிரங்கா தோமகளே
என்றுபுத்தி யில்லாத யீனரெல்லாஞ் சொன்னதற்பின்
வென்றிசெறி மாதவத்தாள் விரத்திபின்னு மேதுரைப்பாள்

கருதாளின் ஏச்சுமொழி

அறிவுசற்று மில்லாத அநியாயக் காரர்களே
நெறிகள்சற்று மில்லாத நீசப் பிசாசுகளே
உங்கள்புத்தி யெந்தனுக்கு ஒருக்காலு மாகாது
மயங்கியெழுந் தீநரகில் வாழும் பிசாசுகளே
கற்பழிக்க புத்திசொன்ன கசடரெனும் பாதகரே
மண்ணுலக வாழ்வை விரும்பும் மடையர்களே
விண்ணுலக மோட்சநன்மை விரும்பாத யீனர்களே
இந்தவுல கந்தன்னி லிருந்துபத்து நாள்சுகித்து
மந்தகுறு புத்தியில்லா மருள்பிடித்த பித்தர்களே
உங்களுட சீவன்விட் டொருநொடியி லக்கணத்தில்

மெய் - உண்மை. தொல்லையிற்று - துன்பம் இல்லாமல். சீவன் - உயிர்.

Believing it to be true, thy body in vain
Lo! why should it be bothered with flesh torn asunder?
Oh! virgin perfect! worshipful one! leave all this,
Live with fame along with the king of line noble,
Elephants, army and retinue at the city of Antiago
To bow before you and your words to obey
Happily will they arrange now without fail
With cosmetic paste, *cavvātu*, sandalpaste and musk
Smearing mixedly on your body, Oh! virgin, with the king
Blossoming on the cot of crimson gold, live adorned
In the mattress spread with jasmines and flowers all over,
Without trouble live in good cheer and health perfect.
All the advice these folk have tendered so long,
Oh! daughter, will not your mind relent a little even?
After the mean folk stupid thus spake,
The damsel victorious of penance austere in frustration did reply.

Mary Karutāḷ's scolding

'Oh! unjust ones without a modicum of sense,
Oh! devils lowly without codes of conduct any,
Your advice will not suit me ever,
The devils that reside in fiery hell dazed,
Thou mean and wicked ones who recommend rape,
You, fools who suffer in life earthly,
Oh! disgraceful wretches who heavenly bliss eternal do not aspire,
Thou hast remained on earth and enjoyed for days but ten,
Oh! insane ones dull and ignorant, haunted by fear,
Within a second of your life's exit, at that moment

அந்தியெழுந் தீநரகி லழுந்திடுமே யப்பொழுது
பொய்யுங் களவுகொலையும் புத்தியென்று தான்விரும்பி
செய்யும்பெறும் பாதகரே தீநரகி லேவிழுவீர்
விண்ணாசை தேடாதே மிருகக் குணத்தோரே
பெண்ணாசை மண்ணாசைப் பேருலகில் பொன்னாசை
கொண்டிருந்து புத்திகெட்ட குருடரல்லோ நீங்களெல்லாம்
மண்டியெழுந் தீநரகில் மரணநே ரப்பொழுதில்
மண்ணுலகந் தான்முடிந்தால் வானவர்கோன் ஞானபரன்
அண்ணல்சரு வேசுவரனா ரறியநடுத் தீர்வையிலே
என்னையு முங்களையு மெதிர்மொழி யாய்நிறுத்தி
உன்னிக் கணக்குரைப்பா ரொருத்தர்தப்பிப் போகறியார்
தர்க்க மெடுத்துரைக்கத் தைரியங்க ளுண்டோசொல்
வெட்கமுட னீங்களப்ப வெவ்வேறே நின்றிடுவீர்
நின்றிடுவீ ருங்களுட நிஷ்டூரப் பேய்களெல்லாம்
ஒன்றுபட வுங்களைத்தா னொக்கவேதான் சூழ்ந்துகொண்டு

நீங்கள் நரகமே அடைவீர் எனல்

கணக்குரைத்தா ருங்களைத்தான் கடவுள்சரு வேசுவரனார்
இணக்கமுட னெங்களுக்கு யிப்புவியில் பூசைபண்ணி
வந்தவர்களே நீங்கள் வாருங்கோள் தீநரகில்
அந்தமில்லா மோட்சநன்மை யடைவதுங்கள் பங்கல்லவே
ஒன்றுபடத் தீநரகி லுங்கள்தனைத் தள்ளுவதும்
அப்போ தறிவீர்க ளப்புத்தி தான்தெரியும்
நட்டமிட்ட தேவனென்று நானிலத்தி லேநீங்கள்
கட்டிவெகு கோபுரங்கள் கனமாகத் தேருடனே
நெட்டநெறி யானதெல்லாம் நின்தபசு புண்ணியமும்
இஷ்டமுடன் கண்டிடுவீ ரேகநடுத் தீர்வயிலே

பாதகர் - தீயசெயல் செய்பவர்கள். மோட்சம் - சொர்க்கம்.

It (your soul) will reach fiery hell of dusk first and then,
Thou sinners grave, who falsehood, theft and murder willingly commit,
Will fall into hell infernal
Oh! thou brutal ones with no desire for heaven.
Craving for women, land and gold on earth,
Aren't thou blind ones ignorant?
In hell of raging fire at the time of death,
when this world earthly ends, the king of heaven, wise God absolute,
Lord Carvēcuvaraṉ knowingly at judgment neutral,
Will make you and I stand facing each other as in debate,
Will your reckoning proclaim, none of you can escape,
Hast thou courage to argue, tell me
Shamefully will thou all stand scattered then
Stand thou will, devils harsh all.
Surrounding to suppress all of you together,

You attain the hell

Lord Carvēcuvaraṉ did render thy reckoning,
In willing agreement did thou on this earth worship us,
And hither arrived do come to hell infernal
Not entitled art thou to attain bliss of heaven endless
Pushed will all thou be together into hell infernal,
Then will thou realise lesson this
As God installed on earth, thou
Did raise towers many with chariots large to boot
Thy penance virtue and all the codes long,
Will find all as desired at the judgment proper,

பில்லிக்கும் மோகினிக்கும் பெருங்கொடிய தேவர்களே
நல்லநடுத் தீர்வையிலே நன்றாகக் கண்டிடுவீர்

கருதாள் தன் திறங்கூறுதல்

வெறிபயித்தி யங்கள்கொண்ட வீணாட்டப் பாதகரே
எத்தனைதா னுங்கள்புத்தி யேறாது யெந்தனுக்கு
ஆரென்று யென்னை யதட்டிப் பதட்டுகிறீர்
சீர்கொண்ட யேகன் திருமகள்நான் கண்டறிவீர்
சருவசங் காரநடுத் தான்கேழ்க்கும் நாயகனார்
திறவுகொண்டு பாடுபட்டுச் சிந்துவனோ என்ரத்தம்
உன்னிசக லப்பொருளு மொருநொடியி லேபடைத்தோன்
என்னைப் பரமபதியி லேத்தி முடிகொடுப்பார்
என்று அனைவோரை யிப்படியே தானுரைக்க
நின்றுவொலி வோருதன்னை நேரிழையாள் தான்பார்த்து
சற்றுமே யிச்சைவெட்கம் தானுனக்கு மில்லாத
பித்தம் பிடித்தலைந்து போனாயே பொல்லாத

என்னை வெட்டி உன்பசியைத் தீர்த்துக்கொள் எனல்

சங்கை கெட்டபாதகனே சண்டாளப் பேயேநீ
சிங்கமுகங் கொண்டவனே சினக்கடு வாய்புலியே
மண்டியெழுந் துன்னுடைய வயிறுபசி கொண்டிருந்தால்
கண்டதுண்ட மாயறுத்துக் கடுங்கோபத் தோடுதின்னு
தின்னவுமே கூடாது தீதுசெய்ய மாட்டாய்நீ
ஆத்துமத்தைக் கத்திகொண்டு அறுத்துவெட்ட மாட்டாய்நீ
[1]ஏற்ற கத்திகொண்டு யென்னுடலைத் தானறுப்பாய்
என்சதையைத் தானறுத்து யிப்பொழுது நட்புடனே

சீர்கொண்ட யேகன் - பெருமை பொருந்திய ஏசுபிரான். பித்தம் - பைத்தியம். சண்டாளன் - கொடும்பாதகன்.

சுவடிச் சொல்

1. யேற்றம்.

Pilli (devil) *Mōkiṉi* (seductress) and the wicked Tēvars,
In the judgment benign and proper thou will see.

Revealing her potential

Oh! vain sinners, fanatical and insane,
However much thy advice, it won't affect me,
What do you think of me to thus rebuke and provoke
The daughter of famed *Ēkaṉ* (God) am I,
The destroyer of all and the Lord who justice demands,
With His might struggling shall I shed my blood,
He who did create all things thoughtfully at a moment,
Will raise me to heaven and a crown provide'
As she did thus speak to all,
The damsel graceful did stand and look at Oliver
'Without any affection or shame, thou
Did roam with wicked madness stricken.

Strike and eat with anger fierce

Oh! sinner without thoughts virtuous, Oh! devil wicked,
Oh! lion-faced one! Oh! foul-mouthed tiger furious,
If thy stomach is in rising hunger high,
Chop (me) to pieces and eat with anger fierce,
Though should not eat me, won't harm as well,
You won't cut my soul with a knife,
With the knife proper thou wilt chop but my body,
Having chopped my flesh now, in company

வன்பசிகள் தீரவேதான் வதைத்துநன்றாய்த் தின்றிடுவீர்
என்றுவொலி வோருடனே யெண்ணாமல் சொன்னதற்பின்

உடலைக் கீறி உதிரம் சிந்தவைத்தல்

கன்றிமனங் கோபமுற்றுக் கசட னொலிவோரும்
சீறிவெகு வாய்ச்சினந்து சித்திரஞ்சேர் மேனியெல்லாம்
ஊறுபடக் கீறியேபின் னுதிரங்கள் சிந்திடவே
பெருகி உதிரமது பேர்பெரிய மேனியெல்லாம்
அருகிக் கரைபெருகி அங்கங்கே ஓடுவது
சித்திரஞ்சேர் பொற்கொடியாள் சீரரிய மேனி
உத்தகன்னி கற்பித்த மோடுவது மொலிவோர்கள்
வீறுகொடு சக்கரத்தை விட்டிறக்கி மாதவத்தை
மாறுபட யெந்தன்முன்னே வரவழைத்துக் கன்னியரைச்
செய்யதிரு மேனியெங்குஞ் சிந்துமுதி ரங்கள்கண்டு
வெய்யகொடு மாபாவி விதறி மிகப்பயந்து
நிஷ்டூரன் பொல்லாத நீதிகெட்ட பாதகன்றான்
வட்டமுள்ள சீலைகொண்டு மறைத்தனனே தன்முகத்தை
உன்னுடைய தேவன்பிள்ளை உற்றபரஞ் சோதியென்றாய்
நல்லோர்கள் சொன்னபுத்தி தன்னைவெகு வாய்நகைத்து
பொல்லாத புத்தியென்று புறக்கணித்து விட்டாயே
பித்தரென்றும் யெங்களைத்தான் பேயரென்றுஞ் சொல்லியேதான்
துஷ்டரென்றும் விட்டகரத் தூஷணங்கள் சொல்லிமிக
மாலையிட்டு யென்னுடனே மணம்புணர மாட்டோமென்று
சாலமிட்டு கற்புநெறி தவசுகொண்டு நின்றாயே

சிறையிலடைத்தல்

ஆகாத கன்னியிவள் அரியபுத்தி சூட்சமுள்ளாள்
வாகான புத்தியிவள் வயிரம் பிடித்தகள்ளி

கசடன் - குற்றமுள்ளவன், தீயவன் சித்திரஞ்சேர் மேனி - அழகான உடம்பு. ஊறுபட - துன்பப்பட. பித்தர் - புத்திமாறுபட்டவன். துஷ்டர் - தீய சிந்தனையுடையவர். சாலம் - நடிப்பு.

Tearing the body to cause bloodshed

You may torture and eat well to appease thy hunger
After she spoke thus to Oliver, unmindful.
Embittered in mind and angered, Oliver, the mean one,
Snarled in fury great and the picturesque body all over,
Harmfully tore and then blood shed,
Swelling blood all over the body famed,
As if dwindling and rising above the banks here and there to flow,
Remaining on the body of the damsel resembling creeper golden,
And the blood chaste of the virgin flowing, Oliver then,
Did release the (Virgin of) penance austere from the wheel rigorous,
Brought the virgin before (his) self,
On seeing the blood all over the fair body graceful spilling,
The sinner cruel and harsh, trembling in fear great,
The wicked sinner unjust and cruel,
With a circular saree did conceal the face (and said)
'The son of your God thou did call luminary of heaven,
Laughed thou at advice tendered by goodfolk,
Ignored it as Counsel evil,
Called us mad ones and devils as well
Brushed aside as evilmongers and in derision severe,
(Thou) Refused to garland me in wedlock,

Imprisonment

Thou didst pretend, in chastity and penance to remain
Illsuited is this virgin with wit resourceful,

தன்னைச் சிறைவீட்டில் தானே யடையுமென்றான்
இன்னமொரு வாக்கினைகள் நான்தேடு மட்டாக
புண்டரிக மாமலரைப் பொல்லாத சேவுகர்தான்
கொண்டுபோய்த் தானடைத்தார் கொடியசிறைச் சாலைதன்னில்

கருதாள் சிறையில் பொற்சிலுவை நாயகனை வேண்டுதல்

ஆண்டவனே யுமதுசித்த மாகவேண்ட, உன்னடியாள்
நீண்டவுந்தன் கிருபைசித்தம் நிலையைவி டாதபடிக்கு
பூண்டநன்மை பத்தியருள் பொன்னுலக நாயகனே
தீண்டரிய பொற்சரணத் திருச்சிலுவை நாயகனே
மாதவத்தோர் தேடரிய மட்டிலாநன் மைச்சொரூபி
போதகத்தோர் புகலுநிறை பூரணஞா னப்பொருளே
பாதகத்தோ ருன்னையேதான் பகரவொண்ணாப் பரஞ்சுடரே
[1]தீதகத்தோர் நெடுவரையே நீண்டநெடுஞ் சத்தியமே
சகலநன்மைச் சுபமேநீ தயைநிறைந்த வற்புதமே
புகலரிய கடவுளேநீ புண்ணியஞா னப்பொருளே
அகலப்புவி யும்படைத்து அனைத்துயிர்க்கும் வகுத்தவர்நீ
பகலெரியுஞ் சூரியன்போல் பரந்தெங்கும் நின்றோனே
அருந்தவத்தோர் தன்னுறவே யனைவருக்கு மரியவன்பே
மருந்தேபவப் பிணியறுக்கு மட்டில்லா நன்மருந்தே
பரந்தபுவி யோர்க்குஞான பண்டிதனே வேதவிண்டவனே
புரந்துவுனை யறிந்துபதம் போற்றுவர்க் கெதிர்ந்தவனே
மண்ணுலகி லுனையறியா மாபாவி வஞ்சகனார்
யெண்ணுமழி யாநரகி லிருந்தியெரி பொறுத்தரிய
பண்ணரிய பாதகரே பிசாசடித்துக் கோடிகொள்ளும்
நிண்ணெரிய நீள்சிறையில் நிறுத்துகின்ற நீதிபரா
சத்தியவே தத்தின்வழி தனிலொழுங்கி லேநடந்த
பத்தர் தனையுடைய பரமபதியி லேயழைத்து
முத்திமுடி யேகொடுத்து முடிவில்லாக் காலமெல்லாம்
நித்தியநன் மைகொடுத்த நீதிநடு வின்படியே

புண்டரிகம் - தாமரை; இங்கு, தாமரை மலர் போன்ற மரி. பாதகர் - பெரும் பாவம் செய்பவர். பகரவொண்ணா - சொல்ல முடியாத. புகலரிய - சொல்ல இயலாத. தீதகம் - தீமை, துன்பமான இடம். பிணியறுக்கும் துன்பம் நீக்கும். புரந்து - காப்பாற்றி. இருந்தி - அழுந்தி.

சுவடிச் சொல்

1 நீதகத்தோர்

In knowledge proper is this virgin adamant,
Until I find yet another punishment,
The wicked servants did, the flower rare to wear,
Take to the prison cruel and did lock her there

Praying the Lord of the Golden Cross in prison

Oh! Lord your devotee in prayer for pleasure thine,
For your lasting intent graceful, not to leave
Pray grant me the devotion beneficial, Oh! Lord of the golden world,
Oh! Lord of the Golden Cross, with feet golden, rare of touch in surrender,
Embodiment of good boundless, whom even saints rarely apprehend,
Oh! Wisdom Absolute, whom the preachers propagate,
Oh! Heavenly light, who defies description by sinners,
Oh! Mountain long in this evil world, Oh! long lasting Truth,
Oh! Auspicious One of benefits all, Oh! Miracle merciful,
Oh! God who defies description, Oh! wisdom virtuous,
Thou hast created the earth wide and bestowed it to lives all,
Oh! Ominipresent wide like the sun diurnal,
Oh! Kin of saints austere, Oh! Love dear to all,
Oh! Remedy benign but not mean that dispels the disease of sin,
Oh! Wise Mentor for the folk of this wide world, Oh! Expounder of scriptures,
Oh! One who appears before those who know you and worship thy feet,
On this earth the bovine cheats who know Thou not,
Will remain in Hell imperishable, putting up with fire:
See the justice that brings to the enormous prison of fire burning steady
The wicked ones after killing them,
Those who trod the path of scripture truthful but properly,
Summoning such devotees to heaven transcendental,
Giving the crown of eternity and for time endless
Providing benefits everyday in justice impartial,

சித்தடியாள் பாவிமெத்த சிறுமதலைக் கிரங்கிசித்தம்
இப்புவியில் நீரெமக்கா யின்பவலு பாடுபட்டு
செப்பமுட னெனதுரத்தஞ் சிந்தவரந் தந்திடுவீர்
தப்பறைசேர் பிசாசுமதஞ் சகலமெல்லா மழிந்திடவே
ஒப்பரிய பரம்பொருளே யுன்கிருபை யுன்னிரக்கம்

ஒலிவோருக்காய்ப் பிசாசு தோன்றுதல்

என்று மரிகருதா ளேகசரு வேசுவரனை
நின்றுசிறைச் சாலைதன்னில் நேசமுற்று வேண்டல்செய்து
இருக்குமந்த வேளையிலே யெரிநரகத் திலிருந்து
பெருத்தகா ரத்துடனே பெருஞ்சடைகள் தீயெரிய
வந்துபுறப் பட்டதுவே மன்னனொலி வோர்தனக்காய்
இந்தவுல கத்தோர்கள் எப்போதும் பூசைபண்ணும்
[1]ஈனப்பிசா சானதுதா னிடும்பனொலி வோர்தனக்காய்
தானுந் தவஞ்செய்து தவசழிக்கக் கன்னியர்முன்
வேணுமென்று தானினைத்து வெஞ்சினங்கள் மிஞ்சியேதான்
பூணும்படி பொல்லாத புத்திசொல்லி யேதிருப்ப
[2]எண்ணிவெகு சூட்சமுட னேந்திழையா ளானாளை
கண்ணிவைக்க வேணுமென்று கருத்திலெண்ணி யேயதுதான்
நரகத்தை விட்டெழும்பி நண்பனொலி வோர்தனக்காய்
துரோகத் தனங்கள்பண்ணி சூட்சங்கள் கொண்டதுதான்
வந்தவகை யானதுதான் வகுப்பாக வேகேளும்
சிந்தைதனி லாராய்ந்து செகத்தில்மனு வோர்தெளிவீர்

பிசாசின் உருவத் தோற்றம்

நீண்ட சடைதா னெருப்புருகித் தீவடிய
காண்டெரிந்து கண்சிவந்து கட்டிநெருப் புச்சிதறி

சித்தடி - சிற்றடி, சிறிய பாதம். சிறுமதலை - இளங்குழந்தை. இடும்பன் - தீவினை செய்பவன்.

சுவடிச் சொல்

1. யீன 2. யெண்ணி

Pitying this devotee humble sinner and child so small,
On this earth, Thou for my sake suffer gladly,
And pray grant me the boon of shedding my blood in earnest
To deride the devilish religions all containing falsehood,
Oh! God Absolute, (I crave) Your grace and mercy Thine',

Arising ghost for Oliver

Thus Mary Karutāḷ to Carvēcuvaraṉ,
Did pray at the prisonhouse with devotion,
At such a juncture from hell infernal,
With vigour hot and matted locks ablaze,
Started arriving for king Oliver's sake,
That which this worldly folk ever worship,
The mean devil for the harmful Oliver's sake,
To perform penance and to destroy the penance of the virgin,
Thus deliberating in fury over-whelming,
To divert with advice evil,
Thus planning subtly against the damsel graceful,
Deciding to trap (her)
From hell rising for the sake of (its) friend Oliver,
Adopted tricks and in treachery acted
How (it) arrived, listen but cogently,
Oh! folk of this world, reflect in mind and realise,

The phenomenon of the ghost

With locks long in fire raging and flowing sidewards,
Burning fierce with eyes reddened, lumps of fire spilling,

உச்சந்தலை மண்டையொக்க ஊடுருவித் தீயெரிய
நாசிசெவி கள்நாக்கும் நாற்றமட்டில் லாதபுகை
பற்றியெழும் பக்கொடிய பருத்தகட்டித் தீயாக
உற்ற பெருமூக்கி லுறுபுகைகள் தீயெழும்ப
சிந்த வலுநாற்றம் சினங்கொண் டெரியெழும்பும்
பந்த னெருப்பெரிந்து பற்றிநின்று வாயெரிய
அஞ்சுகற்றாய் பாசம்பிளந்து அழல்பாம்பு பின்னிற்க
நஞ்சுருள வஞ்சுதலை நாக்கில்நின்று சீறிநிற்க
சிங்கத்தின் பல்லதுபோல் சிவந்துபல்லு நின்றெரிய
பங்கமுற்ற பேயுதடு பருத்தகட்டித் தீயாக
தாடிவலு வாய்நீண்டு சடைபாம்பு பின்னிற்க
நீடும் பெருங்கழுத்தை நெருப்பெழுந்த பாம்புகள்தான்
சுற்றிப்பிடித் தேயிழுக்கச் சொல்லரிய நாற்றமுடன்
பத்தியெரி கைகளென்றும் பருத்தகடு வாய்நகம்போல்
முலைகளிருப் புத்தடிபோல் முழங்கிச்செந் தீயெரிய
நிலையாத வன்னரகில் நிஷ்டூரப் பேயுடைய
கரடிமுகம் போல்நின்று கழுதைவாய் போல்வாயும்
முத்தி பெருத்தமுகமும் [1]முதலைவாய் போல்மூக்கும்
வெம்பிகொதித் தேமிஞ்சி மேலுதடு தானிரண்டும்
தும்பிக்கை போலவேதான் தொங்குஞ்செவி யிரண்டும்
ஆனை செவியதுபோ லலகுயிரண்டு பக்கமதில்
மாநிலத்தில் நாரைமாட் டெருதின் கொம்பதுபோல்
நீண்டுரெண்டு பக்கமதில் நெற்றியே கண்ணிரண்டும்
அஞ்சு தலைமுடிக ளக்கினியாய் நீண்டெரிக்க
வஞ்சமுற்ற கைகளிரண்டு மனுஷர்கைகள் போலிருக்க
கடுவாய் நகம்போலே கைகள் நகங்களெல்லாம்
கொடியதாய்ப் பிசாசுகையில் கொடுஞ்சூலந் தானிருக்க
கால்கள்புலிக் காலதுபோல் கரடிமுகம் போலிருக்க
வால்பெரிதாய் நீண்டு மலைப்பாம்பு போலிருக்க

நாசி - மூக்கு. பங்கம் - அவமானம்.

சுவடிச் சொல்

1. முதளை

Fire burning, through in penetration upto the top of the head,
Nose, ears and tongue in odorous smoke limitless,
Covered and rose in a big block of fire crüel,
From the nose with smoke fire rising,
Spreading odour, fire raging in fury,
The flaming torch ablaze and the mouth set on fire and burning,
In five-fold coil of affection rent, the fiery snake standing behind,
In venom rolling, heads fire with their tongues missing,
The red tooth like that of a lion, burning steadily,
The damaged lip devilish in a block of fire big,
The beard dense flowing long, with matted locks and snake behind,
The long neck massive, by the flaming snakes,
Coiled and pulled with foul odour beyond description,
The burning hands resembling claws of tiger hefty,
Breasts like rods of iron on fire moving and rumbling,
In the violent hell unstable, the devil harsh,
As if standing with a bear's face and a donkey's mouth,
Face big with age and nose like corcodile's snout,
Lips both rotting and hot,
Ears both hanging like (elephant's) trunks,
Like elephant's ears on sides both,
Resembling the horns of a bullock on earth,
On both sides long of the forehead, eyes both,
The locks of five heads like fire burning long
Vicious hands both like those of men,
The nails on hands like tiger's claws
A spear cruel wickedly (placed) in the devil's hands,
Legs like a tiger's paws and face like a bear's mien,
Tail big and long like a python,

பெருச்சாளி போல்வயிறும் பிடாரியானைத் தலைபோல்
கருத்தே துடைபுயங்கள் கறுத்தபன்றி யீன்றதுபோல்
மேனிகறுத் தேயிருக்க மேலிருக்கு மோடதுபோல்
மாநிலத்தி லேபெரிய மந்தி குரங்கதுபோல்
தீயெழுந்து மேனியெல்லாந் திரண்டுபுகை மண்டிநிற்க
நாயிலுமோ யீனமுற்று நரகில்வாழும் பேயதுதான்
செஞ்சடையுஞ் சக்கரமுந் திரிசங்கு சூலமுடன்
அஞ்சாமல் வந்துலகி லாடிநட னம்புரிந்து
நீசப்பிசா சானதுதா னிஷ்டூரம் பேசியது
பாசவிதக் கோலம் பலவிதங்கள் கொண்டெடுத்து
சீவனென்றுந் தேவனென்றுஞ் செகத்தோர்கள் கொண்டாட
நானென்றும் நாதனென்றும் ஞானபரஞ் சோதியென்றும்
அரியென்று மேக ஆதிபரஞ் சோதியென்றும்
பெரியபுவி மனுவைப் பேதலித்துக் கண்ணிவைக்க
வன்னியெழுந் தீநரகில் வர்மமிகப் பேயதுதான்
சன்னாசி வேஷமதாய் தானுருவ மேயெடுத்து

பிசாசு சிறையில் கருதாளைக் காணுதல்

அரிய தவமுனிவ ரவர்களுக்குப் பணிந்து
மரிகருதாள் தானிருக்கும் வன்சிறையின் கூடமதில்
தேடி நடந்துகொண்டு தீயெழுந்த கோபமுடன்
ஓடி புறத்தலைந்து உதடுதனில் தாட்சிகொண்டு
சிறைக்கூட வாசலிலே சென்றுநின்றங் கேதுசொல்லும்
நறைகுழலே நற்றவமே நாதர் மணிவிளக்கே
செகத்தில் நவமணியே சித்திரரூ பக்குயிலே
அகத்தில் வெகுஞான அறிக்கையுள்ள ஆச்சரியே
ஒலிவோ ரெனுந்துரை தன்னைவெகு வாய்ச்சினந்து
மெலிவாக வுன்னுடலை வீறுகொடு பாடுசெய்தான்

வன்சிறை - கொடிய சிறை. நறை - தேன். மணி - அழகிய. நவமணி - ஒன்பது இரத்தினங்கள். பாடு - துன்பம்.

Stomach of a bandicoot, head like an elephant with mane,
Shoulders above the hands resembling either of a pig black,
Like a roof top on a body dusky,
Like a black monkey big on this earth,
Fire rising and covering the body entire in a mass,
The mean devil residing in hell meaner than a dog,
With red locks matted, wheel, conch and trident spear,
Without fear adancing, dancing in this world,
The mean devil did speak harsh,
Taking guises desired in various kinds,
As *Civan̲* (soul) and Tēvan̲ held by the world's folk,
Am I, Lord and Heavenly light of wisdom,
As Ari (Vishnu) and the sole and first light of heaven,
To confuse and trap human on this earth big,
In the hell of raging fire the vengeful devil
The guise of a saint adopting in shape,

Ghost meets Karutāḷ in prison

Making obeisance to the saints of penance austere,
To the hall of the prison where Mary Karutāḷ was lodged,
Walking in search in anger fiery,
Running and roaming with lips strengthened,
And standing at the entrance of the prison, spoke there thus,
'Oh! damsel with locks fragrant, Oh! penance proper, Oh! Lord's lamp precious,
Oh! gems nine of earth, Oh! cuckoo picturesque,
Oh! marvel of wisdom profound proclaimed in mind,
The lord Oliver quite angry with you,
Tortured thy body frail severely,

அந்தவச னங்கேட்டு அங்கந் துடித்தெனக்கு
உந்தனுக்குப் புத்திசொல்ல உன்னையிங்கே தேடிவந்தேன்
பொல்லாத மாபாவி புத்திகெட்ட நிஷ்டூரன்
வல்லபெருஞ் சக்கரத்தில் வாதைசெய்தா னோஉனைத்தான்
உன்னை யொலிவோரு முறுவினைகள் செய்யாமல்
கன்னியரே நீவொலிவோர் கடுங்கோபங் கள்தணிய
ஒலிவோ ரெனுந்துரையோ டொக்கவே தானேநீயும்
கலியாணஞ் செய்துகொள்ள நீகடுங்கோ பங்களாறும்
உந்தனுக்குப் புத்திசொன்ன உபதேச மிப்பொழுது
அந்தியோக் கியநகரி லரச னொலிவோரும்
விட்டுவிடச் சொன்னாலும் விட்டுவிடு குற்றமில்லை
தட்டாதே யென்வார்த்தை சமையம்வந்தா லென்னசெய்வோம்
சருவே சுவரனுடைய சத்தியவே தப்பொருளை
அறியார்கள் மன்னர்மன்ன ராசதுரை யானோர்கள்
செய்ய திருவுடலே சேறுபட வேயுதிரம்
அய்யகோ வென்மகளே யலக்கழிந்து போனாயோ
மன்னனொலி வோருடனே மணக்கோல மிட்டுநன்றாய்
கன்னிமின் னாரேநீயுங் கலியாணஞ் செய்திருப்பாய்
பாவமில்லை யுன்னிடத்தில் பரஞ்சோதி யானபரன்
தேவசரு வேசுவரனார் சித்தமிரங் கிப்பொறுப்பார்
என்றுபிசாசு பகட்டி யிப்படியே நிற்பளவில்
கன்னிமனம் பேதலித்துக் கன்னிமின்னா ரப்பொழுது

கருதாள் ஐயங்கொண்டு இறைவனிடம் முறையிடுதல்

சந்தேகங்கள் மெத்தவெண்ணித் தாறுமா றாகவேதான்
எந்தனுக்குப் புத்திசொல்ல வந்தவனா ரென்றுகன்னி
அறிந்திடவே வேணுமென்று அண்ணல்சரு வேசுவரனை

சித்தம் - மனம் கலியாணம் - திருமணம். பேதலித்து - தடுமாறி, குழம்பி

On hearing the tidings limbs nine quivering,
Have I gone over here in search to advise you,
The wicked sinner great, and idiot harsh,
Did he torment thou in the big wheel powerful?
For Oliver not to act cruelly towards you,
Oh! virgin, thou for Oliver's fury to subsidie,
Thou in agreement with Oliver the lord
For thou to feel furious in getting married,
The advice preached to you now,
If at the city of Antiago, Oliver
Asks thou to relinquish, better leave it, no harm
Ignore not my words, what shall we do if time is such?
The import of the truthful scripture of Carvēcuvaraṉ,
Kings and lords royal know not,
Thy fine body graceful to be stained with flesh and blood,
Lo! daughter mine, tormented thou had been
With Oliver the king in wedlock adorned well,
Oh! virgin luminous, thou marry and rest assured
It is no sin, God the luminary of Heaven, towards thou
Carvēcuvaraṉ the divine, out of pity in mind will forgive'
As the devil did thus spepak glibly and stand
The virgin confused in mind, the luminous virgin then

Karutāḷ prays to Lord

Doubts plenty racking in thoughts haphazard,
'Who has come to advice me?' the virgin (wondered)
To fint it out, (towards) Lord Carvēcuvaraṉ

சிறந்தவலு பத்திகொண்டு சிறைச்சாலைக் குள்ளேநின்று
வேண்டல்செய்து கொண்டுநின்ற விவரந் தனைக்கேளும்
பூண்டநமக் கெல்லவர்க்கும் புத்தியிது தானல்லவோ.

விருத்தம்

19. அத்தனே யெனது சத்திய பிதாவே
அனைத்தையு மொருநொடி வகுத்து
ஆதியு மெவை(யும்) படைத்தினி தாக
அளித்தநால் வரங்களு மிழக்க
சத்துரு வலகை யவர்கள்முன் தோன்றித்
தயக்கவம் படுமுன்னா டறிய
தந்திர மயக்கமிப் போதறி வித்த
தகமையு மீதென வறியேன்
உத்துநீ ரெமக்கா யறிபடக் காட்சி
உகந்தெம்மை மீண்டும்இரட் சிப்பீர்
உறுதி நம்பிக்கை யோடென் னுடைய
உள்ள மெல்லாம் பெருகி
நித்திய நிறைந்தகிருபா கடாட்ச மேபுரிய
நீதியா யெழுந்தயென் கோவே
நிர்மலக் கன்னி யீன்றபா லகனே
நீர்முன்னம் வந்தாட் கொள்வீர்

அசரீரி கூற்று

அம்மானை

20. இப்படியே வேண்டல்செய்து கொண்டிருக்கும் வேளையிலே
செப்பரிய விண்ணுலகில் தேவபர மண்டலத்தில்
சருவேசு வரனுடைய சத்தமொன்று வாக்கெழும்பி
கிருபைக் கடல்பெருகிக் கெம்பிதமா யன்பரவாய்
அருளுந் திருவசன மற்புதமாய்க் கன்னியர்க்கு
[1]இருளும் பவக்கொடிய யிவனுடசொரு பங்கொண்டு

தேவபர மண்டலம் - சொர்க்கம். கிருபை - அருள். கெம்பிதம் - கம்பீரம்.

சுவடிச் சொல்

1. யிருமம்

With devotion strong, standing inside the prison
How she prayed and stood, please listen in detail,
Isn't it advice to us all in (devotion) bound?

19. Oh! Lord, my father Truthful
Devising all in just a second,
Creating all from the beginning delightfully,
For the boons four granted to be lost,
The enemy appearing before them,
In hesitation, for the country to be aware,
Cunning delusion now declared,
The nature of which I know not,
Thou ordained, for me to know the scene visual,
Be pleased to save me again
With firmness and hope, in my
Mind entire swelling,
Oh! king, who had risen as justice,
For grace eternal and full to bestow
Oh! Infant Boy, whom the Immaculate virgin begot,
Do come before (me) and absorb (into thy grace)

Heavenly voice

20. While praying thus and at that juncture,
In heaven indescribable, in God's region divine
An oracle of Carvēcuvaraṉ loudly arose,
In an ocean of grace swelling, majestically by mouth divine,
Providing gospel graceful as a miracle to the virgin
Taking the guise of a wicked sinner this,

வந்து சிறைச்சாலை வாச லருகுதனில்
சிந்தையுற நிற்பதுதான் தீநரகப் பேயெனவே
கலங்காதே கன்னிமின்னே கற்புமுத்தே நற்றவமே
துலங்கும்பர மெஞ்ஞான துய்யசரு வேசுவரனார்
தேவ பரமசத்தஞ் செய்யவேதா னப்பொழுது
பூவைபிசா சைப்பிடித்த பெருங்கதையைக் கேட்டருளும்

கருதாள் பிசாசைச் சின்னாபின்னஞ் செய்தல்

ஞானப்பிர காசமது நற்றவத்தா ளுக்குதவி
ஈனப் பிசாசுதன்னை யேந்திழையாள் கண்டதற்பின்
சிங்கமது யானைதன்னைச் சீறிப் பிடிப்பதுபோல்
மங்கைபிசாசைச் சினந்து வானவர்கோன் தன்பலத்தால்
ஆண்டசரு வேசுவரனுக் காகாத நிஷ்டூர
காண்டெரியும் பேயேயென் காலின்கீழே கிடப்பாய்
என்று சொல்லிக் கோபமுற்று யீனமுற வேபிடித்து
கன்றி மனஞ்சினந்து கலங்கமலங் கப்படுத்தி
தீயெரிந்து தானெரியுஞ் செஞ்சடையைத் தான்பிடித்து
மாயப் பிசாசுதன்னை மண்ணில்விழ வேயுதைத்து
நெஞ்சு தனிலேறி நின்றுகொண்டு தான்மிதிக்க
அஞ்சி யலறியேதா னபையமிட்டுக் கெஞ்சியதே

பிசாசு அபயக்குரலிடுதல்

குன்றி யபையமிட்டுக் கொடுசூலம் விட்டெறிந்து
கிண்டிநிலத் தைப்புரண்டிக் கிழட்டுநரி போலமுது
கரடி புலிகள்சிம்மங் கதறுவது போல்கதறி
குறடு பெருத்த பெருயானைக் குரலதுபோல்
அபயமிட்டு நாய்நரிக ளபையத்தா லூளையிட்டு
சமையம் நால்வகையுஞ் சட்சமைய மானதெல்லாம்

ஏந்திழையாள் - மரிகருதாள். சிம்மம் - சிங்கம். சட்சமயம் - அறுவகைச் சமயம்.

And arriving near the entrance of the prison,
Is the devil of hell infernal, intentionally standing
Grieve not, virgin luminous, pearl chaste, penance austere,
As Carvēcuvaran shining like wisdom pure and true of heaven,
Thus did divinely utter loud, on that occasion then,
The damsel did apprehend the devil, pray listen to that story big.

Karutāḷ shattered the ghost

As the wise and bright damsel of penance virtuous, thus helped (by God)
For the damsel graceful to identify the mean devil, then
Just as a lion catching an elephant with a snarl.
The heavenly monarch by his strength did tell the devil scolded
by the damsel,
'Oh! harsh devil visibly ablaze, with whom the ruling God of all is displeased,
Lie under my feet', thus speaking and angered,
Did catch (the devil) to hurt and in mind averse and furious
Did torment and bewilder and grabbing the matted locks red and flaming,
Kicked the devil illusory, knocking it down to fall on the ground,
And stood on the chest (of the devil) standing with feet,
(The devil then) Screaming in fear pleaded for refuge,

Ghost's anguish

Surrendered shrinking and throwing away the spear cruel,
Stirring the ground and clawing, wailing like an old fox,
Screaming like bears, tigers and lions in pain,
In a voice loud like that of an elephant big with a hefty trunk
Prayed for refuge, howling in surrender like dogs and foxes,
The cooked dishes of four kinds ordained as religions,

கட்டிவைத்துப் பூதலத்தில் கண்ணிவெகு வாய்ப்பூட்டி
வட்டமுள்ள பூதலத்தில் வாழ்மனித ரைப்பிடித்துக்
கொண்டுபோய்ப் பாதாளக் குழிநரகத் தின்வீட்டில்
மண்டியெழுந் தீநரகில் வைத்திடுவே னென்னாளும்
கன்னிகையே செஞ்சடையைக் கலங்கமலங் கப்படுத்தி
உன்னி யிழுத்தடித்து உனதுகா லால்மிதித்து
மண்ணில்விழத் தள்ளியென்னை மகாபலங் களைக்கெடுத்து
பெண்ணேயென் னெஞ்சிலேறி பேதலிக்க யென்னையிப்ப
காலினாலே மிதித்துக் கடினமெத்த பண்ணுகிறாய்
மாலோக மாமனுஷர் மதியா ரெனையினிதான்

பிசாசுதான் வந்த செய்தி கூறுதல்

உன்னைவுபா யங்கள்பண்ணி யுகந்துவெற்றி கொள்ளவந்தேன்
என்னையிப்ப வென்றுகொண்டாய் யேகன் பலத்தாலே
மந்திரிமார் சாஸ்திரிமார் மன்னர்மன்ன ரானோர்க்குத்
தந்திரங்கள் கொண்டுமெள்ள தாரணியிற் கண்ணிவைத்தேன்
அப்படிப் போலேயுனக்கு ஆனவுபா யங்கள்கொண்டு
செப்பரிய கண்ணிவைக்கச் சேயிழையைத் தேடிவந்தேன்
ஆகாது போச்சுதிப்போ அண்ணல்சரு வேசுவரனார்
வாகான ஆண்டவனார் வசமா யிருந்துவிட்டார்
[1]என்று பிசாசுநடுங்கி யிப்படியே சொன்னதற்பின்
வென்றிசெறி அர்சீஷ்ட விர்த்திபின்னு மேதுசொல்வாள்
பொன்னுலக மோட்சத்தை விட்டெழுந்து பொல்லாத
வன்னரகி லேவிழுந்து மடங்கும் பிசாசேநீ
[2]என்னைத்தா னேகெடுக்க யிப்பொழுது புத்திசொல்ல
வந்தவகை யானதெல்லாம் வகைப்படியே யெந்தனுக்கு
செப்பமுட னன்றாக திறந்துசொல்ல வேணுமென்றாள்
ஒப்பமுடனே கேட்டதற்கு ஓங்கிய பிசாசுசொல்லும்

உபாயம் - தந்திரம் பலம் - வலிமை. அறசீஷ்ட - தரும சிந்தனை உடைய.

சுவடிச் சொல்

1. யென்று 2. எனந்தத்தானே

Packed on earth (as bait) and laying traps applenty,
Catching hold of the humans who reside on this earth round,
I shall on all days take (them)
To the pit of hell underneath and confine
In the hell of fire raging
Oh! virgin, disturbing and dishevelling the red locks matted,
Dragging here and there intentionally and stamping with your feet,
Pushing me down to fall on the ground, spoiling my great might,
Oh! damsel, stepping on my chest to bewilder me,
You now stamp with your feet and harass me much,
The great people of the wide world won't care for me hence,

Ghost reveals its intention

With cunning tricks and strategies did I come to conquer you
With the strength of *Ēkaṉ* (God) who has conquered me now,
To the ministers, scholars and kings great
With tricks on earth did I lay traps subtly
Similarly with tricks intended for you,
Did I come in search of the damsel to lay a trap beyond description
It has come to nought now, Lord Carvēcuvaraṉ
God appropriate, remained firm and strong
As the devil did thus utter and tremble, then
The victorious damsel of virtuous thoughts did speak
'Oh! devil who leaving eternity of the golden world,
Doth fall and bend in wicked hell violent
To spoil me now by evil advice how
You did come hither, tell me all things in sequence proper,
Cogently and openly as well' said (the damsel)
Thus queried positively the towering devil did reply

பிசாசு தன்நிலை கூறிக் கெஞ்சுதல்

உன்னுடைய கற்பழித்து உன்மனதைத் தானிளக்கி
பொன்னுலக மோட்சகெதி புத்திவழி யுங்கெடுத்து
சருவே சுரனுடைய சத்தியவே தத்தைவிட்டு
உறுபாவி மன்ன னொலிவோரும் தன்னோடே
கலியாணஞ் செய்து உன்னைக் கற்பழித்து மோகமதில்
மலிவாக வேமயக்கி மானிடயின் பப்படுத்தி
இத்தரையி லுங்களிரு வரையும் பிற்காலம்
செத்தபின்பு தான்முடிவில் தீநரகிலே யிழுப்பன்
தப்பாது யென்வார்த்தை சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
இப்புவியி லேயிருக்கு மென்னாளு மேயொலிவோர்
தேரோட்டங் கோபுரமுஞ் சிறப்புடனே பூசையொடு
பாராட்டி மோகசங்கம் பலஸ்திரிகள் தான்மிகவும்
கூத்தாடக் கோவிலிலே கொம்புகுழல் மேளமுடன்
பார்த்தாட சோறுகறி படைத்தெனக்குப் பூசைசெய்து
உன்மனசைத் தான்கலக்கி ஓங்கொலிவ னோடணைய
என்னை வரவழைத்து யேவிவிட்டா னிப்பொழுது
மாதேநா னுன்னிடத்தில் வந்தவகை யானதுதான்
நீதமான காரியங்கள் நீயெனைதான் விட்டுவிடு
என்று பிசாசுசொல்லி யிப்படியே கெஞ்சவேதான்

கடுஞ்சினக் காரிகையும் கெஞ்சும் பிசாசும்

[1]கன்றி மனஞ்சினந்து காரிகையா ளேதுசொல்வாள்
இந்தவுலகி லிருக்கும்பல சமய மெல்லாம்
வந்தவகை யின்னதென்று வகையாகச் சொல்லுமென்றாள்
ஆனா லினிகேளு மடவாகச் சொல்லுகிறேன்
மானேநான் கட்டிவைத்த மறுசமைய மானதெல்லாம்
பலபாஷை யானதிலே பாவமெல்லாம் புண்ணியமாய்
நலமாகக் கட்டிவைத்தேன் நரகமிதி லேவரவே

நீதம் - இழிவு. கன்னி மனஞ்சினந்து - மரிகருதாள் கடுங்கோபங் கொண்டு. பாஷை - மொழி

To outrage your chastity and to melt your mind,
To spoil thy intention and way to eternity of the golden world
To make you discard the truthful scripture of Carvēcuvaraṉ
With king Oliver the sinners,

The devil entreating for its position

To enable him marry and molest you in dire lust,
To entice you and to involve in human pleasure,
To live on earth thus till death and
After death to drag you to hell infernal
Truly do I speak, words mine are never amiss,
As long as Oliver lives on earth, on all days
With chariot ride, towers and festive worship
Will celebrate with many women assembled in lust,
Dancing at the temple to the accompaniment of trumpets, flutes and drums,
Will offer rice and meat and worship me
To confuse thy mind and to unite you with him in embrace,
He did summon and set me now accordingly
Oh! damsel, this is how I came here for you
This is the (whole) truth of (all) actions, leave me please,
As the devil did thus speak and entreat.

The entreating devil and the furious damsel

Embittered and in mind warthful, the damsel did utter,
'Tell me yet another reason for the arrival of various seets
'Listen yet, narrate I shall cogently,
Oh! deer like damsel, the other religion I have installed,
In several languages, sins as virtues have I portrayed to enable entry into hell.

சந்திரனைச் சூரியனைத் தரணிமனு வோர்வணங்க
மந்தமுறும் புத்திகெட்டு மதிமயக்கம் பண்ணிவைத்தேன்
மண்ணோடு தண்ணீரும் வாயுவொடு தீதனையும்
எண்ணவொண்ணா தந்திரங்கள் இப்படியே பண்ணிவைத்தேன்
நீடுகடு வாய்ப்புலிபோல் நீண்ட கிழட்டோரி
நரிபோல வேஷங்கொண்டு புத்திகெட்ட மானிடர்க்கு
இந்நிலத்தி லேசகல மனுவோ ரறிந்தாக்கால்
வன்னரகி லேவரவே வாணாள்கொடுபோவோம்
செத்தமனு ஷரைப்போல செகத்தில்வந்து நித்திரையில்
உத்த கினாவில்வந்து உருக்கொண்டு நின்றிடுவோம்
உன்னிமனு வோருடைய யுடலகத்தி லேறிநின்று
சன்னதங்கள் வந்திடுவோம் தலைசுத்தி யாடிடுவோம்
கோவிலுடன் கோபுரங்கள் குவலையத்திற் கட்டிவைத்து
ஆவலுடன் நாங்களெல்லா மங்கேநின்று பூசைகொள்வோம்
காடு மலைசெடிகள் கண்டகண்ட வீதியெல்லாம்
ஓடியுலா வித்திரிந்து யுறுபெலிகள் கொண்டிடுவோம்
பலவேஷங் கொண்டவர்கள் பாரில்மனு வோர்தனக்கு
நலமாகச் சத்திமுத்தி நன்றாகப் பண்ணுவர்கள்
பில்லிக் குறளிவேள்வி பெருங்குறளி சித்துவித்தை
எல்லையில்லாத் தந்திரங்க ளென்னுடைய சேனைகள்தான்
பண்ணி வருவார்கள் பாருலகில் மானிடரே
எண்ணரிய கண்ணிவைத்து யெல்லவரை யும்பிடித்து
அரசர்துரை மன்னவர்க ளருந்தவத்தோர் கள்வடிவும்
வரிசையுட னல்லபெண்கள் வடிவுசொரூ பமெடுப்போம்
நம்முடனே மொட்டைகுட்டை நரசிங்கம் போல்வருவோம்
சாமமுட னந்திசந்தி தந்திரங்கள் பண்ணிடுவோம்
இந்திர சாலவித்தை யென்னுடைய கூட்டமெல்லாம்
தந்திரங்கள் மிக்கவர்கள் தானேவந்து முன்னிருப்போம்

மந்தமுறும் - அறிவு மழுங்கிய. நீடுகடுவாய் - நீண்ட கொடிய வாயுடைய மிருகம். வன்னரகில் - கொடிய நரகில். செத்த மனுஷர் - இறந்துவிட்ட மனிதர். உன்னி - நினைத்து. சன்னதம் - ஆவேசம். குவலயம் - பூமி. பலவேஷம் - பல்வேறு உருவம் குறளி - பேய்.

For the worldly folk to worship moon and sun,
Did I delude and spoil their dull minds,
Earth, water, wind and fire,
Did I subject thus to tricks unimaginable,
Like a long cruel-mouthed tiger and an old fox,
Did I take guise (before) the mortals foolish
And on this earth unless all folk realise it,
We will their lives remove to reach hell violent
Like dead humans shall we arrive on earth,
And in dreams while asleep will stand in shapes such,
In the bodies of humans as planned,
In frenzy we shall enter and dance with heads whirling,
With towers on earth temples we shall build,
Eagerly there we shall stand and worship accept,
Over jungles, mountain, plants and in streets haphazard
We shall run, roam and wander to accept sacrifices due
In guises several, they to the humans of the world,
Will pretend to bestow (divine) power and eternity
Pilli (black magic), demons, worship and mystical tricks,
Tricks limitless, my retinue
Will perform on earth with the humans
Laying traps innumerable and catching all folk,
The guises of kings, nobles, monarchs and pious saints
And the guise proper of damsels good as well, we shall assume
Like hairless and short Naraciṅkam (man-lion) shall we arrive,
At night, evenings and twilight shall we perform tricks
For *Intiracālam* (illusion) tricks, my retinue
For all tricks by them, we shall be there to lead

அங்கங்கே பூதலத்தி லவரவர்கள் பாஷையிலே
இந்கிதமாய்க் கட்டிவைத்தோம் யென்னுடைய கூட்டமெல்லாம்
சந்தேகங்க ளில்லையினி தப்பாது சத்தியந்தான்
எந்தனைத்தான் விட்டுவிடு எரிநரகம் புக்கிடவே

மரிகருதாள் மீண்டும் பேயை வினவுதல்

என்று பிசாசுசொல்ல யேந்திழையாள் கன்னிபின்னும்
நின்றுமறித்தே கேழ்ப்பாள் நேரிழையா ளின்னமொன்று
சருவேசு வரனுடைய சத்திய வேதத்தோரே
திறவுப் பகைகெடுத்துத் தீவினைகள் செய்வானேன்
பாவந் தனைவருத்தி பரஞ்சோதிக் காகாமல்
சாவான பாவமதை தான்வருத்தும் வாறேது
என்றுபிசா சைக்கேழ்க்க யிசைந்துரைக்கும் பேயதுதான்

பிசாசின் மறுமொழி

ஒன்றுமில் லாக்கால முலகந்தனைப் படைத்தோனே
ஏகசரு வேசுவரனா ரென்னையு [1]மோட்சத்தில்
வாகுபெற வேபடைத்து வைத்தார் பரகதியில்
ஆண்டவருக் கேறாத ஆங்காரம் தானினைத்தோம்
நீண்ட நெருப்புநரகை நீள்புவியி லுண்டாக்கி
தள்ளிவிட்டா ரெங்கள்தனை தற்பரனுக் காகாமல்
விழுந்திடவே தீநரகில் வெகுண்டுவர முற்றெழுந்து
இழந்தபதி மோட்சத்தி லேறிவிடா தபடிக்கு
சகலமனு வோர்களையுந் தாரணியிற் கண்ணிவைத்துப்
புகலரிய சத்தியவே தத்தின்வழி போனவர்க்கு
எல்லவர்க்குங் கண்ணிவைத்து எங்களுட னேநரகில்
வல்லகொடும் பாடுபட வைத்த உபாயமது
மட்டிலாத் தீநரகில் வாழ்பெரிய யாக்கினையே
ஆனந்த மோட்சத்தை யடைவோர்கள் கொஞ்சமேதான்

இங்கிதம் - முறை. எரிநரகம் - சுட்டெரிக்கும் நரகம். பரஞ்சோதி - பரஞ்சுடர். தெய்வீக ஒளி. மோட்சம் - சொர்க்கம். ஆங்காரம் - செருக்கு. நெருப்பு நரகம் - தீயைக் கக்கித் துன்புறுத்தும் நரகம். தாரணி - பூமி. மட்டில்லா - குறைவில்லா. ஆனந்த மோட்சம் - மகிழ்ச்சியைக் கொடுக்கும் வீடுபேறு; சொர்க்கம்.

சுவடிச் சொல்

1. மோக்ஷம்

Here and there on earth in languages respective of the folk,
We of the retinue mine, have concocted (false tales)
No doubt hereafter, truth will not fail
Leave me so that I enter hell fiery',

Mary Karutāḷ's queries

As the devil did thus speak, the virgin damsel graceful,
Did stop (the devil) and asked, question yet another.
Oh! folk who followed the scripture true of Carvēcuvaraṉ,
Why doth thou commit deeds evil in hostility?
Attracting sin and against the luminary of Heaven
How doth thou invite sin deadly?
As (she) queried the devil thus, the ghost did reply

The Devil's reply

'At the time when nothing existed, He who created the world,
The sole Carvēcuvaraṉ did create me too,
In eternity proper and state heavenly
We planned evil against God,
Creating fire lasting in earth long
Did push us (therein), in God's displeasure
As we fell in hell infernal, in anger rising.
To prevent access to the paradise lost,
To trap all human beings on earth,
To lay traps to the folk who follow the gospel true beyond exposition,
To make them all suffer in hell along with us,
Such a strategy (did we devise)
The tall order is to reside in fiery hell limitless,
Those who attain eternity blissful are but a few,

ஈனமுறுந் தீநரகி லெல்லவரு மேவருவார்
இனிவேறு ஒன்றுமில்லை யானுனக்குச் சொல்லவுமே
கனிசேர் மொழியாளே கன்னிகையே விண்ணொளியே
மண்டியெழுந் தீநரகில் மாண்டு சுழன்றிடவே
புண்டரிக பொற்பதத்தை விட்டெழும்பும் பூங்கொடியே
அழுதுகத றிப்பேய்தா னபையமிட்டுக் கெஞ்சவேதான்

கன்னிமரியாள் சிலுவை வரைந்து தேவசுதனைத் துதித்தல்

எழுதரிய பொற்பதத்தை ஏந்திழையாள் வாங்கினபின்
கெந்தகனாற் றமெழும்பிக் கிளர்ந்தநெருப் புப்புகைபோல்
அந்தரத்தில் மட்டெழும்பி யனல்நரகில் வீழ்ந்ததுவே
சூரத் தனத்துடனே துய்ய கன்னிமா தவத்தாள்
வீரத் தனங்கள்பண்ணி வென்றாள் பிசாசுதன்னை
சிலுவை வரைந்துகொண்டு தேவசுத னாயகனை
தெளிவுறவே தான்துதிக்கக் கிரண சுடரொளியான்
வேண்டல்செய்து கொண்டுநின்ற விதத்தை யிப்போ
நீண்டசத் தியவேத னேசமுற்றோர் கேட்டருளும்.

போற்றி மாலை

21. நித்தியப் பொருளே போற்றி நீதிநா யகனே போற்றி
சத்திய பரம வேதத் தந்தையே சுயமே போற்றி
கர்த்தனாய்த் தானாய் நின்ற கருணைவா ருதியே போற்றி
முத்தியாய் நின்ற ஞான முதல்வனே போற்றி போற்றி.

22. அற்புதப் பொருளே தேவே யனாதியாய் நின்றாய் போற்றி
சிற்பர வடிவாய் வந்த தேவசற் குருவே போற்றி
சொற்பெருந் தவத்தை நாடித் துதித்திடு பரனே போற்றி
கற்பெனுந் தவத்தைக் காத்த கடவுளே போற்றி போற்றி.

23 சடைமுடி கைகா லில்லா சரீரமே யில்லாய் போற்றி
அடிமுடி நடுவில்லாத அரூபமா னவனே போற்றி

கனிசேர் மொழியாள் - கனியின் இனிமை போன்ற சொற்களையுடையவள். அபையம் - தஞ்சம். சூரத்தனம் - அரக்கர் குணம். சுதன் - மகன். வீரத்தனம் - வீரச் செயல்கள். தெளிவுறவே - மனது தூய்மை யாகவே. நீதிநாயகன் - நீதியின் தலைவன். ஏசுபிரான். சுயம் - கலப்படமற்ற. கர்த்தன் - தலைவன். அரூபம் - உருவமில்லாதவன்.

To hell disgraceful all will arrive,
Nothing else for me to tell you,
Oh! damsel of words sweet! Oh! virgin, Light of the skies,
In hell of fire raging for us to wallow in daze
Oh! creeper-like damsel, rising from the golden feet rare to hold',
As the devil thus did weep, wail loud and entreat

Virgin Mary drawing a cross and praying to the Son of God

After the damsel graceful did acquire the golden feet rare of portrayal,
Sulphurous odour rose like fiery smoke stirred,
Rose up above and into fiery hell spread,
With audcity did the virgin of penance pure,
Brave exploits performed and defeated not the devil,
Drawing a Cross and to worship clearly
The Lord, Son of God, how the damsel of brightness intense,
Stood in prayer, that account
Oh! folk who have affinity to the scripture true, listen

String of laudatory verses (*Pōṟṟi Mālai*)

21. Oh! Eternal Thing, hail, Oh! Lord of Justice, hail
Oh! Father of true scripture Absolute, Oh! self, hail
Oh! Ocean of Mercy, who as Saviour stood of own accord, hail
Oh! Chief of Wisdom, who as Eternity stood, hail

22. Oh! Wondrous Thing, who stood as Tēvaṉ sans beginning, hail,
Oh! Divine Mentor Benign, who arrived in shape picturesque, hail,
Oh! God, who did protect penance good and great, hail, Oh!. hail,

23. Oh! One who has neither locks matted, hands and feet, nor body, hail
Oh! Shapeless One, who to (my) head (thy) feet bestowed, hail,

வடிவுள்ள ஞான சொரூப வடிவமே தேவா போற்றி
படிமிசை யென்னைப் பாது காத்ததேவா போற்றி போற்றி.

24. வெளிஒளி கடந்த ஞான வேதநா யகனே போற்றி
அளவில்லா சகல நன்மை யானரூ பகனே போற்றி
பழையவர் சகலர் யாவும் படைக்குமுன் னிருந்தாய் போற்றி
ஒழிவில்லா வெளியே போற்றி ஒண்ணுதால் போற்றி போற்றி.

25. எங்குமே நிறைந்த ஞான பலத்தினா லிருந்தாய் போற்றி
மங்குமாம் புவியோர்க் காக மனுவுருக் கொண்டாய் போற்றி
தங்குமா மோட்ச வாசல் தன்னையே திறந்தாய் போற்றி
இங்கெனைத் திரும்பிப் பார்த்துக் காத்தவா போற்றி போற்றி.

26. அனைத்துயிர் படைத்த தேவா ஆதிகா ரணனே போற்றி
எனைத்தெரிந் தடிமை கொண்டுநின்று ரெட்சித்த பரனே போற்றி
உனைத்தெரிந் துணர்ந்து போற்று முறவுள்ளோர்க் குறவே போற்றி
மனத்திடன் பலன்கள் மிகுந்த வஸ்துவே போற்றி போற்றி.

27. திறிஸ்துவ மொன்றாய் நின்ற தெய்வீகப் பொருளே போற்றி
நிறத்தொடு குணங்க ளில்லா நின்றதற் பரனே போற்றி
குறித்தெனைத் தெரிந்து மோட்சம் கடியதாய்த் தந்தாய் போற்றி
அறத்தோடு வளர்த்து என்னை ஆண்டவா போற்றி போற்றி.

28. பாவிகள் மனுவோர்க் காகப் பரகதி தனிலே நின்று
ஆவியே மனுவோர்க் கோல மருவத்தி லணிந்து சட்டை
மேவியே யுடுப்பே கட்டி மேதினி தனிலே வந்து
தேவசற் குருவாய் நின்ற தெய்வீகா போற்றி போற்றி.

29. எந்தனைத் தெரிந்து மோட்ச வழியிலே வைத்தாய் போற்றி
உந்தனுக் குகந்து பாடு படவரந் தருவாய் போற்றி
தந்தையே சருவலோகந் தாங்கிய பரனே போற்றி
அந்தமும் முடிவில் லாத ஆரணா போற்றி போற்றி.

30. அறமிகுந்த மோட்ச நன்மை அமுதமே தருவாய் போற்றி
கரணத்தி லெந்தன் சீவன் கைக்கொள்ளு மொருவா போற்றி
சரணத்தைத் தருவாய் போற்றி தந்தையே போற்றி போற்றி
சிறைதனில் பசாசை வெல்ல திறமருள் இறைவா போற்றி.

வேத நாயகன் - வேத முதலானவன். ஒழிவில்லா - எப்பொழுதும் மறையாத. ஞானபலம் - அறிவின் பயன். மோட்ச வாசல் - சொர்க்க வாசல். சருவலோகம் - அனைத்து உலகம். ஆரணன் - வேத வடிவானவன். தருணம் - சமயம்; தக்க காலம். மேதினி - பூமி.

Oh! Figure of Wisdom shapely, Oh! Divine being, hail
Oh! My protector at (every) step, hail, Oh! hail,

24. Oh! Lord of Wisdom and scripture, who did transcend space and light, hail
Oh! Embodiment of all benefits boundless, hail,
Oh! He who did exist ere ancients and all, hail,
Oh! Space unconcealable, hail,

25. Oh! One who did exist by strength of wisdom Omnipresent, hail
Oh! He who human life did adopt for the fading folk earthly, hail
Oh! He who did open the gates of Eternity to stay, hail,
Oh! Protector who did look back here and save me, hail,

26. Oh! Divine Creator of lives all, Oh! Cause of the beginning, hail
Oh! God, who did recognize, enslave and protect me, hail,
Oh! Kin to those related to thou by recognizing, realizing and hailing you, hail,
Oh! Seat of Mental prowess and the benefits thereof, hail, Oh! hail,

27. Oh! Golden Name divine who as trinity sole stood, hail
Oh! Self Absolute sans colour and quality, hail
Oh! He who did know me specifically and bestow heavenly habitation, hail,
Oh! He who brought me up in virtue, and held sway, hail, Oh! hail,

28. Remaining in state heavenly for the sinning humans,
The Holy spirit shapeless donning human guise,
Robed in a garment, draped by a shirt and arriving on earth,
Oh! Thou, Godly One who stood as Divine Mentor good, hail, Oh! hail,

29. Aware of me Thou did assign me to path eternal, hail,
To strive to please you, pray grant me the boon,
Oh! Father, Oh! God, who the (burden) of all worlds did bear, hail
Oh! Creator sans end or conclusion, hail,

30. Oh! Bestower of Virtue and the ambrosia of Eternity good, hail
Oh! He who at the moment appropriate will my soul accept, hail
Oh! Father, grant me refuge, hail, Oh! hail
Oh! God, who gives strength to overcome evil

31. பத்தருக் குருவே போற்றி பரகதி வாழ்வே போற்றி
நற்றவத் துறவே போற்றி நன்மையின் கடலே போற்றி
உத்தமப் பொருளே போற்றி யும்பருக் கரசே போற்றி
சித்தசிலு வைமீதி லிறந்த யேசுவே போற்றி போற்றி.

தேவ ஒளி தோன்றுதல்

அம்மானை

32. இப்படியே வேண்டல்செய்து கொண்டிருக்கும் வேளையிலே
செப்பரிய விண்ணுலகத் தேவபர மண்டலத்தில்
நின்று ஒருவெளிச்சம் நீள்பறவை சூரியன்போல்
அன்றிரவு கன்னியர்க்கு அனந்தபர லோகநன்மை
சிறைக்கூடந் தன்னிலேதான் சென்றிறங்கி யேபுகுந்து
நறைகுழல்சேர் கன்னியர்க்கு நாதர் பரம்பொருளோன்
தெய்வீக மானபரன் றேவபிர காசமதால்
அவ்வை மரகதத்தை யலங்கரித்து நன்றாக
தழும்புசற்று மில்லாமல் தையல்நல்லாள் மேனிமுற்றும்
வளர்ந்திகழ வேயாற்றி வானப்பிர காசநன்மை
விண்ணுலக மோட்சத்தில் மேவி யெழுந்தருளி
மண்ணுலகை விட்டெழுந்து வானுலகில் சேர்ந்ததுவே

கருதாளைச் சிறையிலிருந்து அழைத்து வரச்செய்தல்

பொழுது விடிந்தபின்பு பூவைகன்னி மாதவத்தை
முழுமதி கெட்டவஞ்சன் மூட னொலிவோரும்
சேவுகரைத் தானனுப்பிச் சிறைக்கூட மானதிலே
தாவியேதான் கோபமுடன் றையல்தனைக் கூட்டிவரப
பிடரியிலே கைகொடுத்துப் பிடித்துமிகத் தள்ளியேதான்

உம்பர் - தேவர். அனந்த - எல்லையற்ற. நறை - தேன். தையல் - பெண்; மரிகருதாள்.

31. Oh! Mentor of devotee, hail, Oh! Life Eternal, hail
Oh! ascetic of penance austere, hail, Oh! Ocean of good, hail
Oh! Beneficial Object, hail, Oh! King of the divine folk, hail
Oh! Jesus who died quite willingly on the Cross, hail Oh, hail

God beaming light from heaven

32. While (the damsel) was praying thus,
In the heavenly world beyond description of God divine,
Stood a light like a long bird of sun's lustre,
At that night to bestow to the virgin endless favour heavenly,
Did descend and enter the prisonhouse,
And Lord God Absolute, to the damsel of locks graceful,
With that light divine of God in heaven,
Did adorn the emerald- like damsel wise,
Without any scar, the benefit of heavenly light,
The goodness of twilight lustre to grow,
Left this world earthly and did reach heaven,
To remain with grace in the eternity of heaven

Bring the virgin from the prison

Well after dawn, Oliver the vicious fool of fully spoilt wit,
Did send his minions to the prison cell,
To bring the virgin of penance pious, (Oliver) did say,
Leaping in anger 'grab her by the nape of her neck
Push her hard, torture with blows and bring (her)'

அடியான் மிகவதைத்து யழைத்துவரச் சொன்னான்காண்
சொன்னபொழு தேபயந்து தொடர்ந்துவந்த சேவகர்கள்
கன்னி தனைப்பிடித்துக் கசடர்வெகு வாயடித்து

ஒலிவோர் கருதாளைப் பழித்துப் பேசுதல்

அரியதிரு மேனியெங்கு மடியாலே தோலுரிய
மரிகருதாள் மாதவத்தை வன்பனொலி வோருமுன்னே
கொண்டுவந்து விட்டதற்பின் கொடியனவன் கண்சிவந்து
தண்டுமுண்டு பேசுகின்ற நாகரிகக் கன்னியிவள்
நிஷ்டூரி கட்டுமிட்டாய் நின்றநிலை யைப்பாரும்
நட்டணைகள் பேசுகின்ற நாகரீகக் கன்னியிவள்
பாரீ ரிவள்தனைப்போல் பாருலகில் பெண்ணுமில்லை
பூராயக் கள்ளியிவள் பொல்லாத நிஷ்டூரி
என்று வொலிவோரு மேந்திழையா ளைப்பார்த்து
துன்றிவெகு வாய்ச்சினந்து தோகையரைப் பார்த்துரைப்பான்
சலிப்பேது உந்தனுக்குக் சீர்த்திகெட்ட பாதகிநீ
சலிப்பேது உந்தனுக்குச் சனியன் பிடித்ததோசொல்

கருதாளின் ஏச்சுமொழி

ஒப்பரிய மன்னவனே உனக்கு [1]வெட்க மில்லையோதான்
சனியன் பிடிக்குமது தான்வணங்குந் தேவனுக்குச்
சனியன் பிடித்ததென்று சாஸ்திரங்கள் சொல்வீர்கள்
மண்கலச மொன்றுமண் வந்தவகை தானடக்க
மண்கலசத் துக்குப்பலன்றான் வைத்தவனார் சொல்லெனக்கு
குசவன் மண்ணந்தக் குசக்கலந்தான் வையத்தில்
குசவன்றனக் கேகாட்சி கொள்ளுமோ சொல்லெனக்கு

கசடர் - தீயவர். மேனி - உடல். நட்டணை - கொடிய சொல். கள்ளி - திருட்டு எண்ணம் உடையவள். துன்றி - நெருங்கி. தோகையர் - மென்மைத் தன்மையுடைய பெண்கள். பாதகி - கொலைத் தொழில் செய்பவள். சனியன் - நவ கிரகங்களுள் ஒன்று; துன்பம். மண் கலசம் - மண்ணால் செய்யப்பட்ட பாத்திரம். பலன் - நன்மை. குசவன் - பானைவனைபவன்.

சுவடிச் சொல் :

1. வெழ்க்கம்

As he thus spoke, the servants who followed in fear,
Did grab the virgin and lash her hard without fail,

Oliver's slandering Talk

The skin on her rare body graceful to peel,
And brought Mary Karutāḷ of penance pious before Oliver,
And then the wicked one with his eyes reddened, said,
'This is a maiden unorthodox who speaks in disorder,
See this woman harsh standing upright and steady,
This is a virgin modern who speaks arbitration,
See the girl the like of which none on earth doth exist,
Deceitful wench of the diocese, out and out she is, a woman wicked and harsh',
Thus did Oliver looking at the damsel graceful,
And coming near in ire great did address the damsel,
'Where is victory for thou, Oh! sinner of tarnished fame',
'Where is weariness for you, (have you been) haunted by Saturn, tell me',

The virgin's Scolding

'Oh! king peerless, aren't you ashamed?'
Thou (Folk) will say that Sautrn has haunted even thy God of worship,
Will quote scriptures to confirm saturn's hold,
As an earthen pot contains the nature of that earth,
Who hath conferred benefit on the earthen pot, tell me
Will the potter's pot made of the potter's earth in this world
Reveal itself to the potter, tell me

புத்தி மயங்கியேநீ போத வெறியெடுத்து
எத்தனைதா னாக்கினைகள் யென்னையிப்ப செய்துகொள்வாய்
வண்டணிசேர் திண்புயனே மன்னா வொலிவோரும்
பெண்டு பிடிக்குமது பேருலகி லுன்றேவன்
உண்டான காரியந்தா னுங்கள்புரா ணங்கள்பாரும்
கண்டறிந்து கொள்ளுமன்னா கள்வருட கோவிலிலே
வீறான தேருபண்ணி விதவிதமாய்ச் சித்திரங்கள்
ஊறுபட வேயெழுதி ஓதி வணங்கிடுவீர்
ஆறாத தீநெருப்பி லழுந்தவே போறாய்நீ
பெண்பிறந்த பேர்கள்தன்னைப் பேருலகி லுன்றேவன்
பண்பான கோவிலுக்குள் பார்த்திருக்கக் கூத்ததுதான்
நன்றான நீர்பாரும் நரகதலங்கள் கண்டாயே
தேவடியாள் வீடதுவோ தேவசன் னதியல்லவோ
மகாவநி யாயமிது வலுநரக மோகதலம்
நம்பிதர் தங்களுக்கு நல்லதொரு வீடதுதான்
சிம்பமடங் காமலிருந்து தேடியே தானுணர
மாடுடனே யாடுபன்றி மானிடரு மேபெரிதாய்
தேடியே தான்வணங்குந் தேவனது பூசைகொள்ளும்
கள்ளுடனே சாராயங் கலந்துமிக பூசைகொள்ளும்
துள்ளிக் குரங்காட்டந் துர்கந்த னுந்தேவன்
மூட னொலிவோரு முடியாத தீயெரியும்
அழுத்து முனைநரகி லறிந்துகொள்ளுஞ் சொன்னேனான்
பழுத்தமா டாடுபன்றி பெலிகொள்ளு முன்தேவன்
கட்டி வணங்கிவரும் கண்கெட்ட மாபாவி
சொன்னே னறிந்துகொள்ளுந் தொல்புவியி லென்னாளும்
அய்யா வொலிவோரு மழல்நரகப் பேயதுதான்
மெய்யாகச் சொல்லுகிறேன் விழுவா யடிநரகில்
உன்மரண வேளையிலே யுன்சீவனைப் பிடித்து

ஆக்கினை - தண்டனை. பெண்டு - பெண். ஊறுபட - துன்பப்பட. ஓதி - வணங்கி; மந்திரம் சொல்லி. ஆறாத தீ - எப்பொழுதும் அழியாத நெருப்பு. நரகதலங்கள் - கொடிய துன்பம் தரும் இடம். கூத்து - நாடகம். தேவடியாள் - விலைமகள்.

In mind dazed and frenzied with intoxication,
How many orders (of torture) can you inflict on me now?
Oh! king Oliver of mighty shoulders adorned (with flowers)
swarmed by bees,
The womanising of your God in this world huge,
Only affairs such constitute your mythologies, see
In the temples of such pilferers recognizable,
You will build chariots vigorously and pictures of various kinds,
Thou will paint in distortion and with incantation worship,
You are sure to be submerged in fire undying,
Those born as girls in this world wide, your God
In temples pious doth see their dance,
See well, thou hast seen places hellish
Is it a whore's house, isn't it precinct divine,
Quite atrocious it is, the lustful place intensely hellish
It is for thou, Sir, a good house indeed,
In anger uncontrollable and in search to realize,
With cattle, goat and pig, human beings mostly,
The God sought after and prayed will accept their (sacrificial) worship,
Will also accept offerings of toddy and arrack mixed,
Like a monkey leaping, your stinking God,
Oh! Oliver, thou fool, do but realise this,
At the point of presure in hell of raging fire ceaseless,
Thy God who accepts old cattle, goats and pigs as sacrifice,
Oh! sinner grave, who in faith worship (that God),
Realise what I tell you always on this ancient earth,
Oh! Sir, Oliver thou will fall into hell abysmal,
Verily do I tell you, at the time of your death,
The devil of fiery hell, will grab thy hand,

வன்னரகி லேகொடுபோய் வாதைசெய்யும் போதறிவீர்
நீசப் பிசாசான நீவணங்குந் தேவனுக்குப்
பூசையிட்டுக் கும்பிடுவாய் போற்றியே நின்றிடுவாய்
என்றுகன்னி சொன்னதுக்கு யிடும்பனொலி வோருசொல்வான்
கன்னிமுன்னே வெட்கமுற்று கன்னிகையைப் பார்த்துச்சொல்வான்

கன்னியை எரித்துக் கொல்லக் கட்டளையிடுதல்

யெந்தவிதஞ் சொன்னாலு மிவளைவெல்லக் கூடாது
அந்தியோக் கியபதியி லல்லவரும் பார்த்திருக்க
நிஷ்டூர முள்ளகன்னி நீலியவள் தானுடுத்த
சட்டைதனைத் தான்கழற்றி சகலமனு வோர்காண
துந்துமி கட்டியிவளைச் சுடுங்கோ ளெனச்சீறி
சிந்தைவெகு கோபமுற்று சேவகரைத் தானழைத்தான்

நெருப்பிடுதல்

சேவகர் கூடிச்சினந்து சேயிழையாள் சட்டையெல்லாம்
ஆவியே தான்பிடித்து அசடா கிழித்தெறிந்தார்
கன்னி திருவுடலைக் கசடர் வரிந்துகட்டித்
துன்னுஞ் சதைதெறிக்கத் துந்துமியைக் கட்டியேதான்
பந்தங் கொண்டே கொளுத்திப் பாவைதிரு மேனியெல்லாம்
துந்துமி கட்டியெரித்துச் சுட்டார்கள் நிஷ்டூரர்
எண்ணரிய மேனியெல்லாம் யெரிந்துபற்றித் தானெரிய
உன்னியே மாதவத்தா ளுடலுருகி நெய்வடிய
நிஷ்டூர ரிட்டெரிக்கும் நெருப்பில் நின்றங் கேதுசொல்வாள்
இஷ்டமுடன் விண்ணுலகை யேந்திழையாள் தான்பார்த்து
தாட்சியுட னேயிருந்து சருவேசு வரன்தனையே
காட்சிதர வேணுமென்று கைகூப்பி வேண்டல்செய்தாள்
வேண்டல் செய்துகொண்ட வெகுகாட்சி யைக்கேளும்

சட்டை - மேலாடை; சேலை. அசடாக - மூடத்தனமாக. கசடர் - குற்றமுள்ளவர். துந்துமி - பறை. நிஷ்டூர் - கொடியவர்.

And take you to hell violent and torture
Then will thou realize,
The God whom the mean devil doth worship,
Thou will with offerings worship and stand in prayer laudatory,
As the virgin thus spake, adamant Oliver doth reply,
Ashamed before the virgin, did he speak facing her

^Oliver's fury and his order to kill the virgin by burning

'However (she has) spoken she should not win,
For all the folk of Antiago to witness,
This woman harsh, feigning wench,
Remove her blouse for all to see,
Tie her at the stake and burn', he snarled
And much enraged in mind did he summon his servants,

Burning the Virgin with a torch

The servants did gather and in anger did grab,
The garments of the damsel graceful and tore them like fools
Tying the virgin's body tightly (with ropes)
Binding her at a stake for her flesh to bulge and crack,
Burnt the girl's body all over with a torch,
The minions harsh tied her at the stake and torched

Mary Karutāḷ praying Carvēcuvaraṉ

As the body rare to imagine did catch fire and burn,
And standing in the fire by melting ghee kindled,
In the fire set by the harsh ones, the damsel of pious penance did utter,
Looking heavenwards wistfully. the damsel graceful,
In prowess did she remain and towards Carvēcuvaraṉ,
With folded hands prayed for a glimpse (of God)
Pray listen to the scene of her prayer

மரிகருதாள் சருவேசுவரனை வேண்டுதல்

விருத்தம்

33. பரமசுட ரொளிவிடு பிரபைதிகழ்
பதிவிட் டொருதயவது பெருகியே
படியுற்றிடு பவநிலை உறவே குருவாகி
தருமத்தொடு நெறியொடு தவத்துறு
வழிவைத் திடு என வேநீ
மனுவுரு வடிவென வேவந்தடியாற்கு
ஒருகுரு வேவுன துள்ளற
வயித்திடு நிலையது இருதய
கமலத்தி லெழுநீயே பத்தியொத் தடாக
விரியச் சுடரொளி விழுகதிரென
உதையக் கதிர்பதி தனிலே
அதியகிருபை படிமிசை பவஇருள் அறவேதான்

34. தெரியார் கெதிவழி நடையது
அறிவித்திடு தவநிலை புரியவே
பிரியத்துட னுளமகிழ் வொத்திரு வென்ன
எரிபற்றிய சூடுவறிலென் உடலுறு
திருவுள மதுபெருகி வாரேநீ
வரமுற்றிடுங் கடவுளே சர்வமும் நிறைவோன்
நரகத்து ளெரிபற்றி இதுசிறுவத்தி
எழுதிய படியென முடரிலே
ஒருசித் திரமது புவியுள் கனலெரிதணல்
மரத்தினில் எனதுயிர் விடும்பொழு
தினில்தலை கருணைகள் பெருகியே
தருமச்சுட ரொளிஇரு சரணமே தருவாயே.

பரமசுடர் - இறைஒளி. கிருபை - கருணை. தருமச்சுடரொளி - கருணை ஒளி.

33. The light of heaven to glow in a halo bright,
Leaving the City (of heaven) in favour swelling,
(For me) To attain the stepping experience (Thou) as mentor,
To devise a path of penance in virtue and code proper,
Do arrive as a picture of mind in shape,
As my mentor sole, place my humble self inside thy mind.
In (my) lotus heart, holding position,
Oh! Rise thou as the morning sun of lustre bright,
That sheds (its light) on the pond of devotion,
For the rising sun at the City (eternal)
In grace plenty,
To dispel the darkness of sin in the world.

34. For those who know not, to enlighten (them)
On the path proper to tread.
And the state of penance to understand,
With affection for (my) mind to be pleased,
In the mind that remains in the body,
As a diet remedial for the body burning,
Do arrive swelling, Oh! God! Oh! Omnipresent One!
As an epistle written by this little candle,
Amidst hell fire raging,
As a picture on earth,
When my life leaves at the burning stake,
In grace and mercy abounding,
In thy Light of Grace, grant me refuge at thy feet both.

நெருப்பில் நிற்கும் கருதாளைப் பார்த்து மக்கள் கூறுதல்

வேறு

35. இப்படியே வேண்டல்செய்து கொண்டிருக்கும் வேளையிலே
அப்பொழுது அத்தலத்தி லனைவோருஞ் சொல்லுமொழி
வயிராக் கியம்பிடித்து வன்னெருப்பில் நின்றெரிய
துயரமுற்று நீயுருகி சோர்வுபடக் காரியமேன்
அறியாத புத்தியினா லாக்கினையில் நிற்பதுநீ
நெறியோ வுனக்கிதுதா னெருப்பில்நின்று வேகுவது
ஒளிசெறியு மேனியெல்லாம் உருவுசொ ரூபமாறி
எழுதரிய வுன்வடிவை யிப்படிநீ போக்குவதேன்
மாயக்காரக் குருக்கள்வன் னெருப்பில்நின்று வேகுவது
வேகத் துணிவதற்கோ வினையமுற்றுச் சொன்னார்கள்
நெஞ்சுதுணி வோவுனக்கு நெருப்பில்நின்று வேகுவது
வஞ்சியரே வுன்னுடலை வாதைசெய்யக் காரியமேன்
கன்னியரே நீநெருப்பில் கண்கலங்கி நிற்பானேன்
பரகதியின் நன்மைபெற பாடுபட்டு நீயிறக்க
துரோகமுறு முன்குருக்கள் சொன்னபுத்தி தானிதுவோ

மக்கள் பேச்சை மரியாள் மறுத்துப் பேசுதல்

அத்தலத்தி லேயிருந்து யனைவோர்க ளிப்படியே
புத்தி சொன்னபோது பூங்குழலா ளேதுசொல்வாள்
ஆகாத பாதகரே அற்பபுத்தி யீனர்களே
சாகாது சாகும் தழல்நரகப் பாதகரே
வஞ்சகரே மோட்சவழி யறியாதே மயங்கி
நஞ்சுமதங் கொண்டவரே நானிலத்தி லேயலகை
கொண்டுமயங் கித்தியங்கி குருடான பாதகரே

வயிராக்கியம் - விடாப்பிடி. வன்னெருப்பு - கொடிய தீ. உருவு - உருவம். மாயக்கார - வேஷக்கார. துரோகமுறும் - வஞ்சக எண்ணமுடைய. அற்பபுத்தி - கீழான சிந்தனை. அலகை - பேய்.

The people speak to the virgin standing in the fire

35. As she was praying thus, at that time,
All folk in that place did utter,
'In obstinacy to burn in fire violent,
Need thou suffer, melt and be exhausted?
In ignorance thou stand condemned by the order,
Is it code proper for thou to roast in fire?
For thy body lustrous to change in figure and shape,
Why doth thou ruin thus thy body beautiful beyond description?
Your priests deceitful and illusory,
Did they advise to dare and burn in fire cruel
Art thou stou-thearted to stand in fire and burn
Oh! damsel, why should thou torment body thine,
Oh! Virgin, why doth thou with tearful eyes stand in fire?
For thou to suffer and die for benefit of eternity
Is this the advice tendered by thy priests treacherous?'

Karutāḷ's rejection

As all the folk of that place thus did counsel,
The damsel with locks adorned with flowers, did reply.
Oh! sinners inimical, wretches mean minded,
Oh! wicked ones of hell of Fire undying.
Oh! cunning ones, Oh! venomous fanatics,
Who in daze know not the path to heaven,
Oh! sinners blinded, as thou had been

தண்டு முண்டு யுங்கள் புத்தி தானெனக்கு மாகாது
என்று மரிகருதா ளிப்படியே தட்டிவிட்டாள்
நின்றுகொண்டு தானெருப்பில் நேசமின்னாள் வெற்றிகொண்டாள்

மன்னன் கருதாளைத் தண்ணீரிலமுழ்த்தச் சொல்லுதல்

சீறியொலி வோருமன்னன் சேயிழையா ளைப்பார்த்து
மாறுபடக் கன்னியிவள் வன்னெருப்பில் வெந்தவளை
கொப்பறையைக் கொண்டுவந்து குளுந்ததண் ணீரைவார்த்து
வெப்பமுடன் வெந்தவளை விரைவாக வேயெடுத்து
போடுங்கள் நிஷ்டூரி பொல்லாத நீலியுடல்
யீடுபடத் தானெருங்கி யெலும்புசதை தான்வேறாய்
பிண்டுபிளந்தே விரிந்து போகவே தானிவளைக்
கொண்டுவந்து தானிவளைக் குளுந்ததண்ணீ ரிலமுழ்த்த
தன்னுடைய சேவுகரைத் தானழைத்துப் போய்விட்டான்

கருதாளைத் தண்ணீரில் அமுழ்த்த பூமியே நடுங்குதல்

கன்னியரைச் சேவுகர்தான் கடுங்கோபத் தோடிமுழ்த்து
குளுந்ததண்ணி கொப்பறையில் கோதையரைப் போட்டார்கள்
அமுழ்ந்தி நடுநடுங்க அரியதிரு மாதவத்தைப்
போட்டபின்பு அத்தலத்தில் பூமியந்த நேரமிதில்
ஆட்டுப் பொறிகலங்கி அசைந்து நடுங்கும்போலே
பூமிநடுங் கிப்பொங்கி புகழுமந்தியோக் கியப்பதியில்
நேமிமனு வோர்கள் நின்றுநடுங்கிக் கலங்கி
சகல மனுவோர்கள் தானே நடுநடுங்கி
புகலரிய கன்னிமின்னாள் பூவை மரிகருதாள்

நீலி - பாசாங்கு செய்பவள். நேமி - சக்கரம்.

Haunted by the devil, dazed and hesitant therefore,
'Thy advice haphazard won't suit me',
Thus did Mary Karutāḷ reject (their advice)
The luminous damsel in devotion did conquer by standing in fire.

Dumping into the Cold water

Oliver in fury snarling did look at the damsel pretty,
'This virgin dissident roasted in fire violent,
Bring a cauldron and fill it with water cold,
Do pick quickly this damsel roasted in heat,
Dump the harsh woman, wench deceitful and wicked,
Press so close as to tear her bones and flesh apart,
Thus to tear asunder and flatten this woman,
Bring her and dump hard in water cold'
Thus summoning his servants (Oliver) did leave.

The earth shook as Karutāḷ was dumped in water

In anger did the servants drag the virgin,
And dumped her in the cauldron of cold water,
Pressing hard the damsel pious to shiver,
After dumping her, the ground in that city at that juncture,
The earth shook as if the moving machine did in daze totter and tremble,
The earth did quake and rise in the city of Antiago famed,
The folk in a circle did stand tremble and grieve,
All the folk human did shiver,
The virgin luminous beyond description, Mary Karutāḷ, the damsel,

தண்ணீரில் முழுகி எழுவதுபோல் எழுந்த கருதாளைப் பார்த்து மக்கள் வியத்தல்

சருவே சுவரனுடைய தனதுபுதுமை பலத்தால்
மறுவொன்று மில்லாமல் மாதவஞ் சேரும்விதத்தில்
தண்ணீரி லேமுழுகி தானெழுந்து வாறதுபோல்
பெண்ணா யெழுந்திருந்தாள் பேரின்பச் சோதிமின்னாள்
அந்தவகைப் புதுமை யனைவோருங் கண்டதினால்
இந்தவகைப் புதுமை யிப்புவியில் காணோமென்று
உண்மையுள்ள மோட்ச முறுதிகொண்டு தானல்லவோ
வண்மையுள்ள யேகபரன் வஸ்துநிலை கண்டல்லவோ
சாகத் துணிந்துகர்த்தன் தன்னருளைத் தான்பெறவே
சகலவித ஆக்கினைக்குள் தான்துணிந்து போகலுற்றாள்

மக்கள் கருதாளைப் பின்பற்றிச் செல்லுதல்

மரிகருதாள் தான்வணங்கும் வஸ்துசரு வேசுவரனை
அரிய பிரியமுட னனைவோரு மேதுதிப்போம்
நம்முடைய தேவர்கள்தான் நரகத்தின் பேயதுவே
செம்மை மரிகருதாள் செப்புகின்ற மோட்சவழி
தன்னில்நடந் தெல்லவருந் தற்பரத்தில் சேர்வோமென்று
உன்னி யனைவோரு முகந்துநன்றாய்க் கூடியேதான்
எல்லவருங்கூடி இசைந்தொலிவோ ரைப்பார்த்து
